

ஏ.சே



மீசை

திருமகு,
T.k.S. சகோதரர்கட்கு
எனது அன்பளிப்பு

ஏ.கே.வேலன்


கிடைக்குமிடம்:

திராவிடன் பதிப்பகம்,

P. B. No. 18 :: வேலூர் (வ. ஆ.)

முதற் பதிப்பு : ஜூலை 1951

உரிமை பதிப்பகத்தார்க்கு.



விலை ரூபாய் 1—4—0

வெளியிடுவோர் :-

தென்றல் பதிப்பகம்

வேலூர். N.A.,

Vinodan Press, 93, Jones Street, Madras-1

பதிப்புரை

வளர்க்க வேண்டிய தமிழ்த் துறை பலவற்றுள் நாடகத் தமிழும் ஒன்று! அது அண்மைக் காலந் தொட்டுத் தமிழ் மறுமலர்ச்சியாளர்களால் வளர்க்கப்பட்டு வருகிறது! அதனுள் ஒரு படி இந்நூல் - 'கைதி'!


திரு. ஏ. கே. வேலன் அவர்கள் செந் தமிழ்ப் புலவர். நாட்டுத் தொண்டே நற்றொண்டெனக் கருதி இருப்பவர். அவரது எழுத்துக்கள் எழில் தமிழால் ஆனவை – கனல் தெரிக்கக் கூடியவை– கருத்து நிரம்பியவை! இதனை அவரது பல நாடக நூல்களும், இயங்கி வரும் **'ஞாயிறு'** இதழும் திராவிடத்தார்க்கு எடுத்துக் காட்டா நிற்கின்றன!

'கைதி' – அன்னவரால் எழுதப் பட்ட பெரு நாடக நூல். இந்நாடகம்

பல நாட்கள் மேடையில் நடிக்கப்பட்டுத் தமிழ் நாட்டார் பார்த்து மகிழ்ந்து பாராட்டியதாகும். இத்தகு பெருமை வாய்ந்த நாடகத்தைப் படித்தும் பயன் பெறட்டும் என்று கருதி நூல் உருவில் வெளியிட்டுள்ளோம்—வாசகர் நலம் கருதி!

—பதிப்பகத்தார்.

நாடக மாந்தர்



குமார்
முல்லை
அழகப்பன்
ஆனந்தி
வீரப்பன்—நல்லநாயகம்
தமிழானந்தர்
ரௌடி ரெங்கன்
சுந்தரவல்லி
நீதிபதி
சர்க்கார் வக்கீல்
ஜூரிகள்
அஸெஸர்கள்
குருக்கள்
செட்டியார்
கணக்கன்
தண்டல்காரன்
முத்து முதலி
பாகவதர்
வார்டர்கள்
பட முதலாளி
வியாபாரி
டாக்டர்
ஆலை மானேஜர்

டேப்புக்காரன்
சி. ஐ. டி.
போலீஸ் கான்ஸ்டேபின்
திருடி
தலையாரி
காமுகன்
கடைக்காரி
சப்ளையர்
கடைப் பையன்
பிச்சைக்காரன்
வேலைக்காரன்
வண்ணன்

மற்றும்

கைதிகள், பக்தர்கள், பொதுமக்கள், நீதி மன்றத்து வேலையாட்கள், தோழிகள், சிறுமிகள், காவற்காரர்கள், சிறுவர்கள், வாலிபர், பெரியவர், பெண்கள், பரிமாறுபவர்கள், தெருவில் போவோர் வருவோர்.

கைதி

காட்சி 1.

இடம்: நீதிமன்றம்.

மாந்தர்: நீதிபதி, சர்க்கார் வக்கீல், ஜூரிகள், வீரப்பன், குருக்கள், செட்டியார், கடைப் பையன், போலீஸ் கான்ஸ்டேபிள், மற்றும் நீதிமன்றத்து வேலையாட்கள் முதலியோர்.

நிலைமை: வீரப்பன் கைதிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறான்.

தங்கமுலாம் பூசப்பட்ட தாமிரத்தாம்பாளம் ஒன்று நீதிபதி பார்வையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஜூரிகள் வழக்கின் விபரத்தைக் கவனித்தவண்ணமிருக்கின்றனர். நீதிமன்றத்தில் அமைதி நிலவுகிறது.

வெளியில் சூழ்ந்துள்ள பொதுமக்களின் குசுகுசுப்பும் மொணமொணப்பும் அமைதியினிடையே கேட்கிறது. சர்க்கார் வக்கீல் வழக்கின் விபரத்தை எடுத்துரைக்கிறார்.

சர்க்கார் வக்கீல்: கனம் பொருந்திய நீதிபதியவர்களே! இதோ! குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் வீரப்பன் வட்டிக்கடையில் களவுப்பொருளை அடகு வைத்துக்கொண்டிருந்த நேரத்தில் பிடிபட்டான். களவு போன சொத்து, பரந்தாமன் கோயிலுக்குச் சொந்தம். அதுவும் கோர்ட்டார் பார்வைக்கு வந்திருக்கிறது.

நீதிபதி: குற்றத்தை மெய்ப்பிக்கச் சாட்சிகள்...?

ச. வ: இருக்கிறார்கள்—அர்த்த ஜாம பூஜை வேளையில் இவளை ஆலயத்திலே பார்த்த அர்ச்சகர், களவுப் பொருளை வாங்க இருந்த கடைக்காரர், கையுங் களவுமாகக் கைது செய்த போலீஸ் கான்ஸ்டேபிள்.

நீதி: பிரதிவாதி கட்சியை எடுத்துப் பேச இருப்பவர் யார்?

வீரப்பன்: (கெஞ்சும் பார்வையுடன்) ஐயா! இந்த ஏழைக் காகப் பேச வேறு யாருமில்லை..நானிருக்கிறேன்... என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய என் நிலைமை இருக்கிறது...இவ்வளவையும் அறிந்துகொண்டுள்ள ஈசன் இருக்கிறார்...அவர் பேசினால், என் பக்கந்தான் சாட்சி சொல்லமுடியும்?

ச. வ: உன் குற்றத்திற்கு என்ன பதில் சொல்லுகிறாய்?

வீர: குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்.....ஆனால்...?

நீதி: மேற்கொண்டு சொல்ல என்ன இருக்கிறது?

வீர: (வேகமும் பரிதாபமும் கலந்த குரலில்) அய்யா! நான் திருடன்.....உங்கள் குற்றச்சாட்டுப்படி திருடன்தான்.....ஏன் திருடினேன்? எதற்காகத் திருடினேன்? குடிப்பதற்குத் திருடினேனா? கூத்திக்குக் கொடுப்பதற்குத் திருடினேனா?..... மாளிகை கட்டுவதற்கா?...மந்தகாச வாழ்வு நடத்துவதற்கா? எனக்குத் தொழில் திருட்டா? இதற்குமுன் திருடியதுண்டா?.....வறுமைச் சோற்றிலே கெளிந்து, வேதனை வெள்ளத்திலே மிதந்துகொண்டிருந்தேன். சந்தர்ப்பம் தூண்டிவிட்டது. முடிவில் திருடனானேன்.....துரையவர்களே! தண்டனை தரு முன் சிந்தித்துப் பாருங்கள், எந்தச் சூழ்நிலை திருடனுக்கிற் றென்று.....?

[வீரப்பன், நீதிமன்றத்தில் கூறும் நிகழ்ச்சிகள் காட்சிகளாக வருகின்றன.]

காட்சி 2.

இடம்: வீரப்பன் குடிசை.

மாந்தர்: முல்லை, வீரப்பன், கணக்கன்.

நிலைமை: பசு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது வீரப்பனின் தங்கை – முல்லை – பசுவுக்குப் புல் அள்ளிப் போட்ட படி மகிழ்ந்து பாடுகிறாள்.

வீரப்பன் பயிர்ச் செடிகளை எடுத்துக்கொண்டு, இறை சாலுடன் தோட்டத்திற்குப் புறப்படுகிறான். அது சமயம் கடன் வசூலிக்க வந்த கணக்குப் பிள்ளை வீரப்பனை வழிமறிக்கிறார்.

கணக்கன்: என்ன வீரப்பா! ரொம்ப அவசரமோ?

வீரப்பன்: ஆமாங்க! காலையில் பறித்த நாற்று நட வேண்டும்.....

[வீரப்பன் போக முயலுகிறான்.]

கண: நில்லப்பா!

வீர: வேர் காயுது.....நான் வருகிறேன்.

கண: வாங்கின கடனுக்கு வழி சொல்லிவிட்டுப் போ... முதலாளி ரொம்பக் கண்டிப்பாகக் கேட்கிறார்.....

வீர: இந்த மாசூலில், அவசியம் தீர்த்துவிடுகிறேன்.....

கண: அவ்வளவு நாள் தாங்காது.....ஐப்திக்கு உத்தரவு வாங்கிவிட்டோம்.

வீர: என்னுங்க செய்வேன்.....வகை ஒன்றுமில்லையே...!

கண: வட்டியையாவது கட்டு...இந்தத் தவணை விட்டுக் கொடுக்கிறேம்.

வீர: வைத்துக்கொண்டு வஞ்சனையா ?

கண: வாங்கும்போது என்ன சொல்லி வாங்கினுய்?

வீர: வயல் விளையும். விளைச்சலில் விற்றுத் தீர்த்துவிடலா மென்று நம்பித்தான் வாங்கினேன்.

கண: கடனையும் கொடுத்து விட்டு மேகத்தையும் கொண்டுவந்து மழை பொழிய வைக்கவேண்டும் போலிருக்கு.....

வீர: என்னவோ இந்தத் தவணை மட்டும் விட்டுக்கொடுங் கள்.

கண: நடக்காதப்பா நடக்காது.....நாளை அமீனு வருவான். அமீனு நுழைந்த வீடு அதோகதிதான். வெளியில் பிடித்துத் தள்ளுவான்; வீட்டை இழுத்துப் பூட்டுவான்; குடிக்கிற வட்டிச் செம்பை ஏலம் போடுவான்.....ஊம்...தப்பவேண்டுமானுல் ஏதாவது ஏற்பாடு செய்.

வீர: உழுவதற்கு மாடுகூட இல்லையே.....

கண: (அங்குக் கட்டப்பட்டிருந்த பசுவைப் பார்த்தபடி) வீரப்பா, பலே ஆள் நீ. அந்தப் பசு.....?

வீர: அது ஒண்ணுதாங்க இருக்கிற மொதல்.....(முல்லையைக் காட்டி) அந்தப் பச்சப்பிள்ளை உசுருக்குசுரா வளர்த்து வருது.

கண: நாளை அமீனு வந்தால், உங்கள் பாசமும் நேசமும் பலிக்குமா ? இந்தப் பழைய குடிசைகூட நிலைக்காது.

வீர: அட கடவுளே.....

கண: கடவுளைக் கேட்டா, கடன் வாங்கினுப்.....? பிடித்துக் கொடப்பா பசுவை.....

[எனச் சொல்லிக்கொண்டே போய்க் கணக்கன் பசுவை அவிழ்க்கிறான். முல்லை திடுக்கிட்டலறி அவனைக் கெஞ்சிய வண்ணம்]

முல்லை: அய்யா! அதுதான் என் உசுரு.....வேண்டாம், வேண்டாம் அண்ணு! அண்ணு!

வீர: (முல்லை வீரப்பனிடம் ஓடி அழுது கெஞ்சுகிறாள். கணக்கனைப் பார்த்துக் கெஞ்சியபடி) எப்படியாவது தீர்த்துவிடுகிறேன்...கொஞ்சம் மனமிரங்குங்கள்...

கண: (பசுவைப் பிடித்துக்கொண்டு) வட்டியும் முதலும் வளர்ந்துகொண்டே போகுது, இவர் தீர்த்துவிடுகிறாராம், தீர்த்து. சரி, சரி இந்தப் பசுக் கிரயத்தை வட்டிக்கு வரவு வைத்துக்கொள்கிறோம். அசலைச் சீக்கிரம் கட்டிவிடு.....

[என்று பசுவை இழுத்துக்கொண்டு போகிறான்.]

முல்: (கண்களில் நீர்வடிய, வீரப்பனிடம்) அண்ணு! இதற்காகவா வளர்த்தேன், இத்தனை பாடுபட்டு.

வீர: (சோகத்துடன்) என்னம்மா செய்வது? பட்ட கடனுக்காகப் பறி கொடுத்துட்டோம்.

[இந்தச் சமயத்தில் துக்கச் செய்தியுடன் ஒரு ஆள் வருகிறான்.]

ஆள்: அய்யா! வடக்குத் தெரு அம்பலகாரக் கிழவர் செத்துப்போயிட்டாருங்க.....

வீர: என்ன, என்ன...?

மூல்: யாரண்ணு? நம்ப மாமா வீட்டுத் தாத்தாவா?

ஆள்: ஆமாங்க...அவருதான். மத்தியானம் மூணு மணிக்கெல்லாம் மூச்சு நின்னுபோச்சு.

வீர: பொல்லாத கிழவன் இந்த நேரத்திலா சாகணும்... இடிமேல் இடி விழுகுது நமக்கு.

[சோகத்தோடு செல்கிறான் வீரப்பன் துக்கம் விசாரிக்க.]

காட்சி 3.

இடம்: வழி.

மாந்தர்: வீரப்பன், குருக்கள்.

நிலைமை: குருக்கள் கையில் பஞ்சாங்கத்துடன் சோதிடக் கணக்கைப் பார்த்துக்கொண்டு வருகிறார். வீரப்பன் எதிர்ப்படுகிறான் தலை குனிந்தபடி.

குருக்கள்: வீரப்பா! டே...என்னடா ஜாடையாகக் கீழே குனிஞ்சுண்டே போறே...?

வீரப்பன்: ரொம்ப அவசரமுங்க.

குரு: அப்படி என்னடா தலை முழுகிப்போற காரியம்? நான் உன்னைத் தேடிண்டுதான் வர்றேன்...நீ பார்க்காதவன்போல போறே ..

வீர: என்ன வேலை சொல்லுங்க...நான் ஒரு துக்கத்துக்குப் போகணும்.....

குரு: உன் தோப்பன் செத்து வருஷம் ஒண்ணுயிடுத்துடா, தெரியுமா?

வீர: (திடுக்கிட்டு) அதுக்குள்ளேங்களா?

குரு: ஆமாடா! அவன் செத்து ஆடியோட ஆடி வருஷம் ஒண்ணுகப்போறது .... அதெல்லாம் ஒங்களுக்கு எங்கேடா நெனவு இருக்கப்போறது?.....காலம் கலியோன்னே? அவன் இருந்தபோது தேடிப்போட்டான். இறந்தாலேல்லியோ மறந்துட்டே.....

வீர: அதற்கு என்ன செய்யவேண்டும்?

குரு: தலைத் திவசம்.....! நன்னு விமரிசையாய்ச் செய்யணும்.

வீர: கையிலே, மடியிலே இல்லாத நேரம்.....

குரு: வருகிற திங்களும் திவசமும் நம்ம வசதியைப் பார்த்தாடா வரும்?.....கடனே ஒடனே வாங்கித்தான் காரியத்தைக் கண்ணியமாகச் செய்யணும்..... அவன் போறதுக்கு நல்ல கதி வேண்டாமா? ஏழு தானம் வைக்கிறுயா? அஞ்சு தானம் வைக்கிறுயா?

வீர: என்னமோ முடிஞ்ச மட்டும் பார்க்கிறேன்.....

குரு: சாஸ்திரக் கடமையடா, சாஸ்திரக் கடமை...உன் தோப்பனின் ஆத்மா சாந்தியடையவேணும்! மறந்துடாதே.....வருகிற வெள்ளிக்கிழமை ஞாபகமாக எல்லாம் தயார் செய்து வை. நான் வந்துடுறேன்.

[வீரப்பன் நினைவிலாழ்ந்த வண்ணம் செல்கிறான். குருக்களின் பேச்சு எதிரொலிக்கிறது.]

காட்சி 4.

இடம்: வீரப்பன் குடிசை.

மாந்தர்: முல்லை, தண்டல்காரன், வீரப்பன்.

நிலைமை: தண்டல்காரன் முல்லையிடம் வீரப்பனை விசாரிக்கிறான் — வீரப்பன் மெதுவாக வந்து மறைந்து நிற்கிறான்.

தண்டல்காரன்: யாரம்மா? வீரப்பன் இருக்கானா?

முல்லை: இல்லீங்க...இப்பத்தான் வெளியே போகுது...

தண்: எப்ப வந்தாலும் இல்லை, இல்லை. இதே பல்லவி தான்.....!

முல்: நீங்களும், ஆள் இல்லாதப்பதான் வந்து தேடுறீங்க.

தண்: இருக்கிறபோது வந்துதான் என்ன சாதிச் சுட்டான்.

முல்: என்னமோ முடைதாங்க.....

தண்: சாக்குப் போக்குச் சொல்றதுதான் உங்களுக்குச் சகஜமாச்சே.....இவன் ஒருத்தனுக்கே இந்த நடை நடந்தால் ஊர் முழுவதும் எப்படி வசூலிப்பது?

முல்: வந்தவுடன் சொல்லி எப்படியாவது.....

தண்: நீ சொன்னே...அவன் கொடுத்தான். இந்தா பிள்ள! இந்த வாரத்துக்குள் வாய்தா பாக்கி வரா விட்டால் மாசூலில் கை வைக்கமுடியாது...மறியல் நோட்டீஸ் வந்துடும். கண்டிப்பாச் சொல்லிடு.....

[தண்டல்காரன் கோபத்தோடு போகிறான். மறைந்திருந்த வீரப்பன் மெதுவாக வெளியே வருகிறான். முல்லை வீரப்பனைக் காண்கிறாள்.]

முல் : வைத்தியர் வரவில்லையாண்ணு ?

வீரப்பன் : அந்தக் கிழவன் வீட்டுக்குள்ளேயே இருந்துக் கிட்டே இல்லேங்கிறான்...அவனுக்கு வரும்படி தரவில்லிங்கிற வருத்தம்.....

முல் : அண்ணு ! தண்டல்காரன் வேறே வந்தான்.....

வீர : ஆமா, எதெதுக்குத்தான் பதில் சொல்றது ? அவனும் வந்து மிரட்டிட்டுப் போறான்.

முல் : என்னண்ணு செய்றது ?

வீர : என்ன செய்றது ?.....ஒண்ணு ரெண்டா கடன் தொல்லே...வரிச்சுமை ..அப்பாவுக்கு திவசம், அம்மாவுக்கு நோய்.....

முல் : ஏண்ணு ! அந்த முத்துப் பெரியப்பா, பெரிய பணக்காராராச்சே, ஏதாவது உதவி செய்ய மாட்டாரா ?

வீர : எல்லாம் உண்டான போதுதான் உறவுமுறையெல்லாம். இல்லாத நேரத்தில் கையை விரித்து விடுவார்கள்.....ஊம்...என்னவோ கேட்டுப் பார்க்கிறேன்...

காட்சி 5.

இடம் : முத்து முதலி வீடு.

மாந்தர் : முத்து முதலி, வீரப்பன்.

நிலைமை : முத்து முதலியிடம் வீரப்பன் கெஞ்சி நிற்கிறான்.

முத்து முதலி : (உலவிக் கொண்டே) பணமாவது காசாவது...யார் கண்டா அதை இப்ப கொடுத்த எடத்திலே, அப்படி யப்படியே முடங்கிக் கெடக்குது...நீ ஒரு பக்கத்திலே கடன்கேட்க வந்துட்டே.....

வீரப்பன் : ரொம்ப நெருக்கடியான நேரம்...எப்படியாவது உதவி செய்யுங்கள்.

முத் : உதவி செய்யலாமப்பா...அதுக்கு இது கால மில்லியே.....

வீர : உங்களுக்கு ரொம்பப் புண்ணியம்.....

முத் : புண்ணியந்தான் என்ன செய்யறது. நம்ம பரந்தா மன் கோயில்லே, இன்னிக்கு ஒரு நாள் மண்டகப்படி செய்யப் படுறபாடு யாருக்குத் தெரியும்...ஐந்நூறு ரூபாய் செலவு...சாமி காரியம்...அதை நிறுத்த முடியுமா...நான் வர்றேன்.....

[என்று சொல்லிவிட்டு வீரப்பனைத் திரும்பிப் பார்க்காமல் போகிறான். வீரப் பன் பெருமூச்சுடன் அவ்விடத்தை விட்டு வெளியேறுகிறான்.]

காட்சி 5-A.

இடம் : வழி நடை.

மாந்தர் : வீரப்பன்.

நிலைமை : வீரப்பன் தனிமையில் துன்பத்தின் உருவாகி வருகிறான். அவன் உள்ளத்தில் கொந்தளிக்கும் பல வித எண்ணங்களின் சாயல் அவனுடைய முகத்தில் தோன்றிய வண்ணமிருக்கின்றது.

அது சமயம் மழை பெய்வதற்கான அறிகுறியுடன் மின்னல் மின்னுகிறது. வீரப்பன் வாய் முணு முணுத்த படி வருகிறான்.

வீரப்பன்: என்ன உலகம்! ஆண்டவனுக்கு ஆயிரம் ஐந்நூறு செலவு செய்கிறார்கள்...மனிதனுக்கு ஐந்து பத்து

உதவ மனம் இல்லை.....பொழுது விடிந்தால் எத்தனை தொல்லைகள்.....?

[வானில் சிறிது மின்னலும் இடியும் தோன்றுகிறது. அப்போது, வீரப்பன் உள்ளத்தில் குருக்களின் குரல் எதிரொலிக்கிறது.]

"சாஸ்திரக் கடமையடா, சாஸ்திரக் கடமை. உன் தோப்பனின் ஆத்மா சந்தியடைய வேண்டும்... அவன் இருந்த போது தேடிப் போட்டான்...இறந்தானெல்லியோ மறந்துட்டே..."

[மீண்டும் மின்னலும் இடியும் தோன்ற தண்டல்காரனின் குரல் ஒலிக்கிறது...]

"வாய்தா பாக்கி வராவிட்டால் மாசூலில் கை வைக்க முடியாது...மறியல் நோட்டீஸ் வந்து விடும்."

"வட்டியும் முதலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது...தீர்த்து விடுகிறாம் தீர்த்து...ஜப்திக்கு உத்தரவு வாங்கி விட்டோம்...நாளை அமீனா வருவான்.....வெளியில் பிடித்துத் தள்ளுவான். வீட்டை இழுத்துப் பூட்டுவான்...குடிக்கிற வட்டிச் செம்பை ஏலம் போடுவான்....."

[மீண்டும் பலத்த இடியும் மின்னலும் தோன்ற கணக்கன் குரல் மறைகிறது. வீரப்பன் பயங்கரத் தோற்றத்துடன் திகைத்துப்போய் நிற்கிறான்.]

வீர: 'சாஸ்திரக் கடமை'..... 'சாஸ்திரக் கடமை' 'மறியல் நோட்டீஸ் வந்துவிடும்.....' இல்லை..... இல்லை.....ஜப்தி!...ஜப்தி!! பிறகு.....(பயத்துடன்) ...தங்கை...அம்மா.....

[இந்தச் சமயத்தில் தூரத்திலிருந்து கோவிலில் நடைபெறும் காலட்சேபப் பாடலின் ஆரம்ப ஒலி கேட்கிறது. அதைக் கேட்டு வீரப்பன் அசையாமல் நிற்கிறான். புயல் அதிகமாகி இடியும் மின்னலும் தோன்ற பலத்த மழை பொழிய ஆரம்பிக்கிறது. நனைந்துகொண்டு வீரப்பன் ஓடுகிறான்.]

காட்சி 6.

இடம்: பரந்தாமன் கோவில்.

மாந்தர்: பாகவதர், குருக்கள், பக்தர்கள், வீரப்பன் முதலியோர்.

நிலைமை: பரந்தாமன் சிலை அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பாகவதர் திருமங்கை ஆழ்வாரின் சரிதத்தைக் கதா காலட்சேபம் செய்துகொண்டிருக்கிறார்.

வீரப்பன் நனைந்த ஆடையுடன் மழை தாங்காது கோவிலிற்குள் வந்து ஒதுங்கிக் கதா காலட்சேபத்தில் மெய் மறந்து நிற்கிறான்.

பாகவதர்: பக்த கோடிகளே! நம் திருமங்கை மன்னனின் திவ்ய பிரதாபத்தைப் பேச ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் ஆகாதென்றால் அடியேன் எவ்வாறு சொல்லுவேன்...அவருடைய திருக்கல்யாண குணங்களை எவ்வாறு வர்ணிப்பேன்....அவர் ஆழ்வார்களிலே ஆழ்வார்.....அஞ்சாநெஞ்சர்.....அசகாய சூரர்..... இலட்சிய புருஷர்.....தினந்தினம் ஆயிரம் பேருக்கு

அன்னதானம் செய்து வந்தார்.....அதனால்..... வறுமை ஏற்பட்டும், தான் மேற்கொண்ட நல்லறத்தைத் தளர விட்டாரில்லை.....வழிப்பறி செய்தும் அந்தச் சேவையைச் செய்து வந்தார். ஒரு சமயம் பரந்தாமனே வழிப்போக்கராக எழுந்தருளினார், தன் பாரியாளோடு.....நம் ஆழ்வார் சுவாமிகள் ஆண்ட வனையும் விட்டாரில்லை.....வழி மறித்தார். பரந்தாமன் பக்தரிடம் வல்லடி வழக்குச் செய்து பார்த்தார். பலிக்கவில்லை. பகவான்.....பிராட்டி.....ஆகியவர்களின் ஆடை ஆபரணங்களெல்லாம் பறிக்கப்பட்டன. பாதவிரல் மிஞ்சியைக் கூட விட்டாரில்லை.....என்னே ஆழ்வார் பிரானின் வன்மை இருந்தவாறு! ஸ்ரீரங்கம் பெரிய கோவில், மாடமதில்களையும், கோபுரங்களையும் கட்டிய பெருமை, நம் கலியனுக்கே உரியது. அந்த அருஞ் செயலுக்காக, நாகப்பட்டினம் புத்தர் கோயிலின் சொர்ண விக்ரகத்தையும் திருடத் தயங்கவில்லை.....இவ்வாறெல்லாம் நம் ஆழ்வார் களவுத் தொழிலில் ஈடுபட்டது எந்தக் கெட்ட நோக்கத்தோடு மல்ல. எல்லாம் பகவத் சேவைக்காகவே.....அடடா.....அவருடைய பக்திப் பிரதாபத்தை என்னென்பேன். ஆழ்வாரின் பெருமையே பெருமை.....எம் பெருமான் திருவடிகளே சரணம்.....!!

[கதா காலட்சேபம் முடிகிறது. கூட்டம் கலைகிறது. வீரப்பன் ஒரு தூண் மறைவில் ஒளிகிறான். எல்லோரும் சென்ற பின் மறைவிடத்திலிருந்து வெளி வருகிறான். அங்கு அர்ச்சகர் மறந்து வைத்து விட்டுப்போன தங்கத் தாம்பாளத்தின் மீது களவு எண்ணத்துடன் அவன் பார்வை விழுகிறது.]

வீரப்பன் : தங்கத் தாம்பாளம்...ஆம் ..நமது தரித்திரமே தீர்ந்து போகும்.....ஆனால் திருடுவதா.....?..... (சிறிது நேரம் திகைத்து) வேறு வழி.....?

[அவன் வாய் முணு முணுக்கிறது. எண்ணங்கள் சுழல்கின்றன. சுற்றும் முற்றும் பார்த்து, பயந்து நடுங்கிக்கொண்டு தாம்பாளத்தைத் தொடப் போகிறான். அவன் மனச்சான்று தடுக்கிறது. மனப் புயல் வீசுகிறது.]

குரல் : நில்.....அட பாவி ! கடவுள் சொத்தையா களவாடுவது?

வீர : களவா?.....கடவுளாகப் பார்த்து எனக்காக விட்டுவைத்த பொருளல்லவா இது.....

குரல் : அர்ச்சகன் மறந்து போனது, உனக்கு அதிர்ஷ்டம் என்று எண்ணுகிறாயா?.... வேண்டாம் அந்த எண்ணத்தை விட்டுவிடு.....ஆண்டவன் சாபம் தீண்டி விடும்.

வீர : ஆழ்வார் திருடவில்லையா? அவருக்கு ஆண்டவனின் அருளல்லவா கிடைத்திருக்கிறது.

குரல் : அவர் அவதார புருஷர்.....

வீர : கேலியுடன் ஆண்டவனால் படைக்கப்பட்ட ஓவ்வொன்றும் அவதாரந்தான்.

குரல் : பாவி ! பஞ்சமா பாதகத்தில் ஒன்றடா களவு !

வீர : எதற்கும் பாவ மன்னிப்பு உண்டு.

குரல் : உன் நல்ல உள்ளம் நஞ்சாகிவிட்டது. இந்த வஞ்சகச் செயல் வேண்டாம்.

வீர : நஞ்சாகவில்லை.....என் பஞ்சம் தெளிய வழி தெரிந்திருக்கிறது.....நன்முகச் சிந்தனை செய்து பார்..... இறைவன் படைத்த இயற்கையைக் கவனி.....நிலவு கதிவரனிடம் ஒளியைக் கவருகிறது.....மேகம் கடல் நீரை உறிஞ்சுகிறது.....தென்றல், பூக்களின் மணத்தைத் திருடுகிறது.....வண்டுகள் மலர்தோறும் தேனை அருந்துகின்றன.....பூமியின் கர்ப்பத்திலே புதைந்து கிடக்கும், பொன்னையும் மணியையும் மக்கள் தோண்டி எடுக்கின்றனர்.....இவைகள் திருட்டா?

குரல் : அவை இயற்கையின் நியதி.....

வீர : என் நிலைமையும் அதுதான்.....இயற்கைதான்..... என்னையும் தூண்டுகிறது. இல்லாதவனிடமா எடுக்கப்போகிறேன்...எந்தை! எம்பெருமான்!! பரந்தாமனிடமிருந்து.....

குரல் : நீ பேசுவது விதண்டா வாதம்.

வீர : அப்படியென்றால், 'வீரப்பா, இது விபரீத'மென எச்சரிக்கட்டும்.....அந்தக் கடவுள்.....

[என உறுதியுடன் கூறுகிறான். மனத் தெளிவு ஏற்படுகிறது. தைரியமாகத் தாம் பாளத்தைக் கையிலெடுத்துக் கொள்கிறான்.]

வீர : பரந்தாமா! பரந்தாமா!! பக்தனுக்குக் கருணை காட்டு.....ஆபத்பாந்தவா! அனாத ரட்சகா! இந்த அடிமைக்கு ஆதரவு தா.....ஏழை நான், இந்தச் சிறு பொருளை எடுத்துக்கொள்கிறேன்.....இதனால் உன் செல்வம் குறைந்து விடாது.....என் வறுமை தீரும்! உனக்குத் தங்கத்தில் மட்டுமா...வைரம் இழைத்த

தட்டுகளை வகைவகையாகச் செலுத்தச் சீமான்கள் இருக்கின்றனர்.....அவர்கள் என் போன்ற ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்கமாட்டார்கள்.....இறைவனே! வாழ்வும், வளமும், உன் வரப்பிரசாதத்தால் தானே அமைகிறது.....கள்ளனென்று சொல்லி என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே.....ஊரார் என்னைத் தூற்றினாலும், நீ உதாசினம் செய்து விடாதே.....வள்ளலே! இல்லாத கொடுமையால், ஏழையின் துயரால், உன் பிள்ளை நான், இவ்வாறு துணிந்து விட்டேன்.....பிணியால் வருந்தும் பெற்ற வளுக்குப் வைத்தியம் பார்க்க வகையில்லை...தந்தைக்குத் திவசம்...அந்தச் சாஸ்திரக் கடனைத் தீர்க்க மார்க்கமில்லை.....என்ன செய்வேன்...சர்வேஸ்வரா! எல்லாம் உன் தயவு...அய்யனே...! என்னைக் காப்பது உன் கடன்.....

[தாம்பாளத்தைப் பூரிப்புடன் பார்த்து]

தங்கத் தாம்பளமே! என் தரித்திரத்தைப் போக்க வந்த மாமருந்து நீ! என் துன்பத்தைத் துடைக்க வந்த சம்பத்து நீ! ஆழ்வார் விப்ர நாராயணரைப் போல உன்னை வேசிக்குக் கொடுத்துவிட மாட்டேன்.....!

[என்று மகிழ்ச்சியுடன் வெளியேறுகிறான்.]

காட்சி 7.

இடம்: வட்டிக்கடை.

மாந்தர்: செட்டியார், வீரப்பன், கடைப்பையன், போலீஸ் கான்ஸ்டேபிள்.

நிலைமை: செட்டியார் கல்லாப்பெட்டியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

வீரப்பன் தாம்பாளத்தை மறைத்துக்கொண்டு வந்து கொடுக்கிறான்.

செட்டியார் வீரப்பனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, தாம்பாளத்தையும் பார்க்கிறார். தாம்பாளம் மின்னுகிறது.

செட்டியார்: பழைய காலத்து உருப்படி.....

வீரப்பன்: (உள்ளத்தில் பயமும் உதட்டில் அசட்டுச் சிரிப்புடனும்) ஆமாம்! எங்கள் பாட்டன் வைத்துப் போன பழைய பூஜை சாமான்.

செட்: ஊம்.....தேவைக்கு வைத்துத்தானே ஆகவேண்டும்.

வீர: என்னவோ பார்த்துச் சொல்லுங்க.....

செட்: தொழிலில் எனக்குச் சொல்லவா வேண்டும்?..... எடை எவ்வளவு?

வீர: நிறுத்துப் பாருங்களேன்.....

செட்: மாற்று சரியாக இருக்குமா... ..?

[என்று தராசில் எடை போடப் போகும் சமயம் தாம்பாளம் கைதவறிக் கீழே விழ, அதன் சத்தம் மாறுதலாகக் கேட்கிறது.]

செட்: என்னப்பா, சத்தக் கட்டையாக இருக்கு.....

[வீரப்பனின் முகம் பயத்தால் மாறுதலடைகிறது.]

வீர: இல்லிங்க, நல்ல தங்கந்தானுங்க.

செட்: மூலாம் பூசினதுபோலே இருக்கு.....

வீர: கலவரத்துடன் நல்லாப் பாருங்க ....

[செட்டியார் தாம்பாளத்தைப் புரட்டிப் பார்த்துப் பின்னல் கோவில் விலாசம் இருப்பதைக் கண்டு சந்தேகப்படுகிறார்.]

செட்: கொஞ்சம் பொறு.....(எனக் கூறிவிட்டு, கடைப் பையனைப் பார்த்து) அடே தம்புடு! இக்கட ராரா!

பையன்: ஏமி நாயனு!

செட்: ஒரே, பின்னுண்டு!...(ஒரு சீட்டில் எதையோ எழுதிப் பையனிடம் கொடுத்து) காகிதானி எடுத்துக் குனு பர்ஹாத்ரா!

[பையன் விஷயம் புரிந்து ஓடுகிறான்.]

வீர: (பயங்கலந்த குரலில்) மதிப்பு என்ன பார்த்திங்க...

செட்: பெரிய உருப்படி.....நல்லாப் பார்த்துச் சொல்றேன்.....

[எனக் கூறிக்கொண்டே தாம்பாளத்தைக் கல்லில் உரைக்கிறார்.]

வீர: வேலை இருக்குங்க...கொஞ்சம் சீக்கிரமாகப் போகணும்.

செட்: தம்பி, பெரிய ஆளுதான். பித்தளைத் தட்டைக் கொண்டுவந்தா பித்தலாட்டம் செய்றே...(சிறுகிறார்)

வீர: (திகைத்து) என்ன பித்தளையா?

செட்: மின்னுவதெல்லாம் பொன்னு.....?

[அதுசமயம் பையன் போலீஸ் கான்ஸ்டேபிளுடன் வருகிறான். வீரப்பன் பயந்து ஓடுகிறான். போலீஸ் விரட்டுகிறது.]

குறிப்பு:—வீரப்பன் கூறிய நிகழ்ச்சிகளின் காட்சிகள் முடிவடைகின்றன. மீண்டும் முதற் காட்சியிலிருந்தவாறு நீதிமன்றத்தில் வீரப்பன் பேசிக்கொண்டிருத்தல்.

காட்சி 8.

இடம்:—நீதிமன்றம்.

மாந்தர்:—முதற் காட்சியிலிருந்த அனைவரும்.

நிலைமை:—வீரப்பன் தன் நிலைமையை எடுத்துக் கூறுதல்

வீரப்பன்: துரையவர்களே! என் நிலைமையை விளக்கி விட்டேன். இப்பொழுது சொல்லுங்கள். நான் திருடனா?

சர்க்கார் வக்கீல்: திருடன் மட்டுமல்ல: பெரிய ஜாலக்காரன். நீ சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டித் தப்பித்துக்கொள்ள முடியாது.....சந்தர்ப்பத்திற்காகவும், சூழ்நிலைக்காகவும் சட்டம்வளைந்து கொடுக்காது. (நீதிபதியைப் பார்த்து) கோர்ட்டார் அவர்களே! குற்றவாளியின் வாக்குமூலம், சாட்சிகளை விசாரிக்கும் வேலையைக் குறைத்துவிட்டது. அவன் காட்டிய ஆதாரங்கள், மேலும் திருட்டை அநுமதிக்கக் கேட்டுக்கொள்கின்றன. சமூகத்திற்கும், சட்டத்திற்கும் கட்டுப்படாத இக்குற்றவாளிக்குத் தக்கதண்டனை கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்.

நீதிபதி: (அஸெஸர்களைப் பார்த்து) இந்த வழக்கைப் பற்றி அஸெஸர்களின் அபிப்பிராயமென்ன?

1-அஸெஸர்: திருடியதே குற்றம்!

2-அஸெ: ஆலயத்தில் திருடியது அதைவிடப் பெருங் குற்றம்.

3-அஸெ: அதிலும் செய்த குற்றம் சரியென வாதாடுவது மன்னிக்கமுடியாத மாபெருங் குற்றம்.

வீர: அல்ல, அல்ல. திருடும் திட்டத்தோடு செல்லவில்லை ஆலயத்திற்கு! மழைக்கு ஒதுங்கினேன். அங்கு நடத்திய ஆழ்வாருடைய கதைதான், எனக்கு அந்த ஆசையை எழுப்பிவிட்டது. அதிலும் கன்னம் வைத்தோ, கண்ணில் மண்ணைத் தூவிவிட்டோ களவாடவில்லை. கவனிப்பாரற்றுக் கிடந்த தாம்பாளத்தைத்தான் கைப்பற்றினேன், ஆண்டவனே அளித்ததாக எண்ணி.

ச. வ: துரையவர்களே! இவன் திருடன் மட்டுமல்ல, நாஸ்திகனுங்கூட.

வீர: நான் 'சொல்வது' நாஸ்திகம்! ஆனால், ஆழ்வார்கள் நடத்தியது ஆஸ்திகம்!! என் செயல் நாஸ்திகமானால் என்னை ஏன் தடுக்கவில்லை, அந்த ஆஸ்திகக் கடவுள்? என் கண்ணைப் பறித்து, கைகால்களை முடக்கித் தண்டித்திருக்கவேண்டுமே? அப்படிச் செய்ய அந்தக் கடவுளுக்கு ஆற்றல் இல்லையா? அப்படி நடக்காதபடியால் ஆண்டவன் அநுமதித்தார் என்றுதானே அர்த்தம்.

ச. வ: போக்கிரித்தனமாகப் பேசுகிறான்.

வீர: போக்கிரித்தனமல்ல; நிலைமையை விளக்கினேன்.

நீதி: நிலைமைக்காக ஒவ்வொருவரும் திருடுவது என்றால் நீதியும் ஒழுங்கும் நிலைக்காது.

வீர: பிரபுவே! நான் திருடியதாகச் சொல்லும் அந்தத் தாம்பாளத்தைத் தங்கமென எடுத்தேன். அதுவோ பித்தளையாக வந்துவிட்டது. அதனால் எனக்கு லாபமுமில்லை. ஆண்டவனுக்கு நஷ்டமுமில்லை. ஆனாலும் நான் சட்டப்படி திருடனாகிவிட்டேன். இந்த ஒரு முறை மன்னித்துவிடுங்கள். இனி எந்தக் காலத்திலும் திருடமாட்டேன்.

நீதி: சட்டப்படி குற்றவாளிக்கு மன்னிப்புக் கிடையாது.

வீர: சட்டமென்பது, பழி வாங்குவதற்கான சதித் திட்டமா?

நீதி: (மேஜையைத் தட்டி) இது நீதிமன்றம்! நிதானமாகப் பேசு.

வீர: நீதியின் காவலர்களே! நீதியென்றால் என்ன? அது எந்த நியாயத்தின் மீது தீர்க்கப்பட வேண்டுமென்று நியதி இல்லையா? குற்றவாளிகளைத் தண்டித்து விடுவதால் மட்டும் குற்றம் குறைந்துவிடாது. கொலையும், களவும் நிகழுங் காரணங்களைக் களையவேண்டும். குற்றவாளியை மேலுங் குரூரவாதியாக்காமல் திருத்த வேண்டும். அதுதான் நீதி! அதுதான் நேர்மை!

ச. வ: (நீதிபதியைப் பார்த்து) கோர்ட்டை அவமதித்த குற்றமும் சேருகிறது.

வீர: சட்டம் என்ற முள்வேலிக்குள் தர்மத்தையும் நியாயத்தையும் அடைக்காதீர்கள்?

நீதி: (மேஜையைத் தட்டி) சட்டப்படி, நீதியின் பேரால் கைதியாக நிறுத்தப்பட்டிருக்கும் வீரப்பனுக்குக் களவாடியது-கடவுளை நிந்தித்தது-கோர்ட்டை அவமதித்தது ஆகிய குற்றங்களுக்காக பன்னிரண்டு ஆண்டுகள் கடுங்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது.

[என்று தீர்ப்புக் கூறிவிட்டு எழுந்து செல்கிறார். தீர்ப்பைக் கேட்ட வீரப்பன் அதிர்ச்சியடைகிறான். அவனது தோற்றம் பயங்கரமாகிறது. அவனது குரல் தடுமாறுகின்றது.]

வீர: என்ன தண்டனையா? பன்னிரண்டு ஆண்டுகளா? அநியாயத் தண்டனை! அம்மா! அம்மா!

[என்றலறி மூர்ச்சித்து விழுகிறான்.]

காட்சி 9.

இடம்:—வீதி.

மாந்தர்:—முல்லை, பெரியவர், வாலிபர் இருவர், தெருவில் வருவோர் போவோர், தமிழானந்தர்.

நிலைமை:—முல்லை ஏழ்மை நிலையில் "அப்பா, அம்மா" எனத் தேம்பிய வண்ணம் தெருப்பாடகியாக வருகிறாள். ஒரு பெரியவர் குறுக்கிடுகிறார். அவரிடம் கையேந்துகிறாள்

முல்லை: ஐயா!

பெரியவர்: (போய்க்கொண்டே) இந்தப் பிச்சைக்காரத் தொல்லை என்று ஒழியுமோ? நம்ம நாட்டிலே இது ஒரு பெரிய நியூஸன்ஸா போச்சு.

[அடுத்து ஒரு வாலிபன் வருகிறான்.]

முல்: ஐயா! இந்த அனுதைக்குக் காலணு கொடுங்கள்—பசி காதை அடைக்கிறது.

வாலிபன்: காசு கொடுக்கலாம்—ஆனால் காய்போலிருக்கிறதே! கனியவைத்தால் போகுது!

[வாலிபன் பேசிய மொழிகளைக் கேட்டு முல்லை அருவருப்படைகிறாள்.]

முல்: பிச்சை எடுத்துப் பிழைக்கவும் வழியில்லையே இந்தப் பொல்லாத உலகில்.....நாடோடியாகத் திரிந்து நாசமுறுவதற்கா பிறந்தேன்.....என் தாய்க்கு வந்த சாவே எனக்கும் வரலாகாதா?

[முல்லை பேசிக்கொண்டிருந்த மொழிகளைக் கேட்டுக்கொண்டே தமிழானந்தர் அவளருகில் வருகிறார்.]

தமிழானந்தர்: யாரம்மா நீ?.....இந்த வயதில் இவ்வளவு வேதனைப்படுகிறாய்?

முல்: ஒரு அனுதை...

தமி: (அன்பாக) இனி அப்படிச் சொல்லாதே! எல்லா உயிர்கட்கும் தாயாக இயற்கை இருக்கிறது பாவம், அழுதுஅழுது உன் கண்கள் வீங்கி இருக்கின்றனவே, ஏன்?

முல்: என்ன செய்வேன்...இப்படி அழ, அழ விட்டுவிட்டு அன்னை மாண்டுவிட்டாள். ஆதாரமாக இருந்த ஒரே அண்ணனும் சிறைப்பட்டுவிட்டார்.....

தமி: பரிதாபம்.....உலகம் தெரியாத உனக்கு இவை பெரும் சோதனைதான்...நீ படித்திருக்கிறாயா? வேறு வேலை ஏதாவது தெரியுமா?

முல்: எழுதப் படிக்கத் தெரியும்...கொஞ்சம் பாடுவேன்.

தமி: அப்படியா...என்னுடன் வா...

[செல்கின்றனர்.]

காட்சி 10

இடம்:—சிறை.

மாந்தர்:—வீரப்பன், ரௌடி ரங்கன், கைதிகள், வார்டன்.

நிலைமை:—கைதிகள் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். 'கசமுசா'வெனப் பேச்சு எழும்புகிறது.

வீரப்பன் தன் நிலைமையை எண்ணி வருந்தியவாறு சோகமாகப் பாடியபடி வேலை செய்கிறான்.

அது சமயம் வார்டன் சவுக்கைச் சொடுக்கி அதட்டிக் கொண்டு வருகிறான்.

வார்டன்: கேடுகெட்ட நாய்களே! நீங்கள் கெட்ட கேட்டிற்குப் பேச்சு வேறு?

ரெங்கன்: வெய்யில் தாங்கமுடியலீங்க...

வா: வரண்டிக் கழுதைகட்கு குளிர்ச்சி தேடுதோ.....?

[வார்டன் ரெங்கனைச் சவுக்கால் அடிக்கிறான்.]

ரெங்: "ஐய்யோ! அப்பா!!"

[அலறித் துடிக்கிறான்.]

வா: உஸ்! வாயை மூடு.

[மீண்டும் அடிவிழுகிறது. அதுசமயம் வீரப்பன் குறுக்கிட்டு அவ்வடிகளைத் தான் தாங்கிக்கொண்டு செங்கனைக் காப்பாற்றுகிறான். சோற்று மணி அடிக்கப்படுகிறது. கைதிகள் அனைவரும் வரிசையாக ஓடுகின்றனர். கஞ்சி ஊற்றப்படுகிறது. வீரப்பன் சோர்ந்தபடி தாமதமாக வருகிறான்.]

வா: (கோபமாக) வரிசைப்படி வருவதற்கென்னடா? போ, இல்லை.

ரெ: (பாசத்துடன்) வாங்கண்ணே, என் கஞ்சியிலே கொஞ்சம் தருகிறேன்.

காட்சி 11.

இடம்:—அறநிலையம்.

மாந்தர்:—தமிழானந்தர், இன்ஸ்பெக்டர், குமார், முல்லை, சிறுமிகள்.

நிலைமை: முல்லை பாடுகின்றாள். சிறுமிகள் அப்பாட்டின் கருத்துக்கேற்ற வண்ணம் ஆடுகின்றனர். குமார் அந்த இன்பத்தில் மூழ்கிவிடுகிறான். தமிழானந்தர் சாந்த நிலையில் மகிழ்வுடனிருக்கிறார்...ஆடலும் பாடலும் முடிகிறது.

குமார்: நேரம் போனதே தெரியவில்லை...நெஞ்சை அள்ளும் இசையில் நினைவு இழந்து இருந்துவிட்டேன்.

தமிழானந்தர்: இசை என்றாலே வசப்படுத்துவது என்று தானே பொருள்.

கு: ஆம்; அதன் இனிமைக்கு இணையாக வேறு எதுவுமே இல்லை.

தமி: இசை இனிமையானது மட்டுமல்ல; வலிமையும் வாய்ந்தது. பாலுக்கழும் பச்சிளங் குழந்தையையும் தன்னை மறந்து பரவசமடையச் செய்யும்! சீறி வரும் நாகத்தையும் தன் செயல் மறந்து ஆடச் செய்யும் சக்தி வாய்ந்ததல்லவா? பாகனின் குத்துக்கோலுக் கடங்காத யானைகூட பாணனின் யாழுக்கு அடங்கிய தாக இலக்கியம் இருக்கிறது.

கு: உன்னதமான கலை, மிகவும் உயர்ந்தது.

தமி: தமிழன் வாழ்க்கையோடு ஒட்டியது. குழந்தைப் பருவத்திலே தூங்கத் தாலாட்டக் கேட்பான்..... சோறுண்ண அம்புலிப் பாட்டு வேண்டும்...பிள்ளைப் பருவத்திலே துள்ளும் வரிப்பாடல்கள் இசைப்பான். மணவிழாவிலே மங்களப்பாடல்... மரண ஓலத்திலே துன்பக்கீதம்...ஏற்றம் பிடித்தால், ஏர் உழுதால், பயிர் நட்டால், களை எடுத்தால், படகோட்டினால், பாரம் புரட்டினால் பாட்டு மயம்தான்! நம் நாட்டு வண்டுகளும் பாடித்தான் தேன் குடிக்கும்.

கு: அதனால்தான் மொழியையே இசைத்தமிழ் என்று வகுத்தார்களோ.....?

தமி: ஆம்! மற்ற மொழிகளுக்கு அமையாத சிறப்பு அது.

கு: (முல்லையைக் காட்டி) அந்தக் கலையின் நலமெல்லாம் இவளிடம் குடிகொண்டிருக்கிறது.

தமி: அவளுடைய ஆர்வம்தான் அவ்வளவு தேர்ச்சிக்கும் காரணம்.

கு: (இழுத்தாற்போல) இவள்...

தமி: அன்பின் உருவம்...அறிவின் கொழுந்து!

கு: உற்றார், உறவினர்...

தமி: நாமெல்லோரும்தான்.

கு: தங்கள் அறிவுச் செல்வங்களை உடனிருந்தே கற்றுக் கொள்ளக் கொடுத்து வைத்தவள் முல்லை.

முல்: (கடைக் கண்ணால் குமாரைப் பார்த்த வண்ணம், பரிகாசமாக) தாங்களும் வேண்டுமானால் அறிவிலை த்தில் சேர்ந்துவிடுங்களேன்.

கு: அந்தப் பருவம் கடந்துவிட்டதே.

தமி: இந்தப் பாப்பாக்களோடு சேர்ந்து விளையாடினால் திரும்பிவிடும் அந்த இளமை.

கு: அதற்குத் தடையாகக் கடமை இருக்கிறதே.

தமி: ஒய்வு நேரங்களில் வந்து போகலாமல்லவா.....?

கு: வந்து போவதா?.....அறிவிலையைத் தவிர இனி என்னை வேறு எங்குக் காணமுடியும்?.....

[பிரிகின்றனர்.]

காட்சி 12.

இடம்:—சிறை

மாந்தர்:—வீரப்பன், ரௌடி ரெங்கன், கைதிகள், வார்டன், குமார்.

நிலைமை: கைதிகள் 'ஏலேலோ' பாடலுடன் பெரும் பாறைக் கற்களைப் புரட்டி அடுக்கிக்கொண்டிருக்கின்றனர். கைதிகளில் ஒருவன் பாறையிலகப்பட்டு நசுங்குகிறான்; அலறுகிறான். யாவரும் திகைத்து ஆரவாரிக்கின்றனர். வீரப்பன் துணிவுடன் தன் தோள்கொடுத்து அப்பாறையிலிருந்து அவனைக் காப்பாற்றுகிறான். அது சமயம் குமார் அங்கு வந்து வீரப்பனின் ஆற்றலை வியக்கிறான்.

குமார்: (வார்டனிடம்) இவன் பெயரென்ன?

வார்டன்: வீரப்பன்.

கு: இவன் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.....

காட்சி 13.

இடம்:—மேனன் அறை.

மாந்தர்:—குமார்.

நிலைமை: குமார் தனிமையில் தன் அறையில் மேஜையின் முன்னிருந்து "போலீஸ் ரிகார்டுகளை" பரிசீலனை செய்கிறான். முல்லையின் உருவமும். அவள் பாடிய பாட்டும் நினைவுக்கு வருகின்றன.

குமார்: வேலை ஓடவே இல்லை. அவளுடைய வீணகானந்தான் காதில் ஒலிக்கிறது!

[ரிகார்டுகளை மூடி வைத்துவிட்டுப் புத்தகத்தை எடுத்துப் புரட்டுகிறான்—படிக்க முடியவில்லை.]

ஏட்டுக்கு ஏடு, எழுத்துக்கு எழுத்து அவளுடைய இன்முகந்தான் தோன்றுகிறது.....

[புத்தகத்தை மூடிவிட்டு, படுக்கையில் சாய்கிறான் — தூங்கமுயல்கிறான்—புரள்கிறான்.]

படுத்துப் புரண்டாலும், அந்தப் பாழும் தூக்கம் வராது போலிருக்கிறதே!

[படுக்கையிலிருந்து எழுந்து உட்காருகிறான்—சலிப்புடன்...]

கடமையில் கழிந்து விடுகிறது பகல்...இந்த இரவு வந்தால் இருப்புக் கொள்ளவில்லை.....

[என எழுந்து வெளியே நடக்கிறான்.]

இது என்ன பேதைமை...! நேரமும், நிலைமையும் தெரியாமல் புறப்பட்டு விட்டேனே...இந்நேரத்திற்கு அறநிலையத்திற்குள் நுழைய முடியுமா? அடிகள் என்ன, ஏது என்று கேட்டால்.....?

[திரும்புகிறான்.]

அவள் இருக்கும் அந்த அறநிலையத்தைப் பார்த்து வந்தால்தான், இந்தப் பதைபதைப்பு அடங்கும்.

[என மீண்டும் வெளியே செல்கிறான்.]

காட்சி 14.

இடம் :—முல்லையின் அறை.

மாந்தர் :—முல்லை.

நிலைமை : முல்லை தனிமையில் குமாரின் நினைவோடு தவிக்கின்றாள்.

முல்லை : அவர் யார்? நான் யார்? எனக்கும் அவருக்கும் என்ன உறவு? இந்த ஏழை நெஞ்சம் ஏன் அவரையே நாடுகிறது.....?

[படுக்கையை விட்டெழுந்து உலவியபடி]

நான் அவரை மறக்கத்தான் நினைக்கிறேன். ஆனால் அவருடைய மலர் முகம், என் நினைவில் நிலைபெற்று விட்டதே! என் செய்வேன்? இந்த இரவை எவ்வாறு கழிப்பேன்?

[சிறிது நேரம் உலவியபடி இருந்து விட்டு மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு பின்புற பூங்காவிற்குள் நுழைகிறாள்.]

காட்சி 15.

இடம் :—அறிவிலையத்து பூங்கா.

மாந்தர் :—முல்லை, குமார்.

நிலைமை : ஆசைத் தீயால் தகிக்கப்பட்ட முல்லை தென்றலையும், நிலவையும் பழித்துப் பாடிக்கொண்டிருக்கிறாள். அப்போது, குமார் மெதுவாக பூங்காவிற்குள் நுழைகிறான். ஓசையைக் கேட்டுத் திரும்புகிறாள் முல்லை. அங்கு குமாரைக் கண்டதும் திகைக்கிறாள்.

மூல்லை : ஆ! தாங்களா.....?

குமார் : (வாஞ்சையுடன்) ஆம்; மூல்லை...

மூல் : (திகைப்பு அதிகரித்த வண்ணம்) எங்கே இந்நேரத்தில்?

கு : என்னையும் அறியாமல் என் கால்கள் இழுத்து வந்து விட்டன.

மூல் : இது பெண்களுக்கு உரிய இடமல்லவா?

கு : அன்புக்கு அந்த வரையறை ஏது?

மூல் : இங்கே ஏன் வந்தீர்கள்?

கு : என்னைக் கவர்ந்த உன்னை நாடித்தான்.

மூல் : என்னன்வோ சொல்கிறீர்களே.....

கு : உன் இதயத் துடிப்பைக் கேள். அது சொல்லும்.

மூல் : (கலக்கத்துடன்) எனக்குப் பயமாக இருக்கிறது. சென்று விடுங்கள்.

கு : பாசம் பயத்தை வென்று விடும்.

மூல் : ஆசைப் பெருக்கில் அத்து மீறுவது அழகல்ல. நான் வருகிறேன்.

[போக முயல்கிறாள்.]

கு : (வழிமறித்து) இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டா?

மூல் : வழியை விடுங்கள். இல்லாவிட்டால் மற்றவர்களைக் கூவியழைப்பேன்.

கு : என்னை மிரட்டலாம் ஆனால் உன் குரல் பேசாது.

மூல் : ஏன் ?

கு : உன் நெஞ்சத்தில் எனக்கு இடமிருப்பதால்!

மூல் : அடிகள் அறிந்தால் ஆபத்து.

கு : ஆபத்தா ! ஆசிர்வதிப்பார்.

மூல் : எனக்கு அவ்வளவு தைரியமில்லை.

கு : முதல் இரவுதானே ! போகப் போகத் துணிவு பிறந்து விடும்.

[என ஆசையுடன் அவள் கையைப் பற்றுகிறான் குமார்.]

மூல் : அதோ பாருங்கள் யாரோ !

[என மூல்லை ஒரு பக்கம் சுட்டிக்காட்டக் குமார் திரும்புகிறான். மூல்லை அவன் பிடியிலிருந்து விலகி ஓடுகிறாள். குமார் அவள் முந்தானையைப்பற்றி இழுக்கிறான்.]

மூல் : இது என்ன வம்பு ?

கு : வம்பா? எனது அன்பின் வெற்றி !

[மூல்லை நாணத்துடன் ஒதுங்கி நிற்கிறாள். குமார் ஆசையுடன் அவள் தோள்களைப் பற்றுகிறான்.]

காட்சி 16.

இடம்: அறநிலையம்.

மாந்தர்: தமிழானந்தர், சிறுமிகள்

நிலைமை: சிறுமிகளுடன் தமிழானந்தர் மகிழ்ச்சியுடன் உரையாடுகின்றார்.

1-சிறுமி: தாத்தா! ராத்திரி நல்ல விருந்து.....

தமிழானந்தர்: விருந்தா?

1-சிறுமி: ஆமா, என்னென்ன பலகாரங்கள், எவ்வளவு பழங்கள்! என்னால் திங்கவே முடியவில்லை. திகட்டிப் போச்சு.

தமி: அட்டா! அந்த விருந்திற்கு என்னை அழைத்துச் செல்ல மறந்து விட்டாயே! விருந்து எங்கே நடந்தது?

1-சிறுமி: கனவில்தான்!

[கூட இருந்த சிறுமிகள் சிரிக்கின்றனர்.]

தமி: அவ்வளவுதானா! நீ வாயூறச் சொன்னதெல்லாம் கனவாகி விட்டதே.....! நல்ல வேளை நான் ஏமாறவில்லை.

1-சிறுமி: தாத்தா! ராத்திரியில் எனக்குப் பயமாக இருக்கிறது.

தமி: முல்லை இருக்கும்போது என்ன பயம்?

1-சிறுமி: அந்த அக்காள் இரவில் தூங்காமல் எழுந்து எழுந்து தோட்டத்திற்குப் போய்விடுகிறாள்.

தமி: (சந்தேகத்துடன்) அப்படியா.....!

காட்சி 17.

இடம்: பூங்கா.

மாந்தர்: குமார், முல்லை, தமிழானந்தர்.

நிலைமை: குமார், வழக்கம்போல் முல்லையைச் சந்திப்பதற்காக ஆவலோடு வருகிறான். ஆனால், முல்லை வந்து சேரவில்லை.

குமார்: முல்லை...ஏன் இன்னும் வரவில்லை... அவள் தோழிகள் இன்னும் தூங்கவில்லை போலிருக்கிறது...!

[பெருமூச்சு விடுகிறான். அதுபோது முல்லை வரும் சதங்கை ஒலி கேட்கிறது.]

அதோ வந்துவிட்டாள் என் உயிர்ப் புதையல்! வரட்டும்.

[எனக் கூறிக்கொண்டு, முல்லையைப் பரிகசிப்பதற்காக ஒரு செடிப் புதரில் ஒளிகிறான் குமார். முல்லை வழக்கம்போல் குமாரைச் சந்திக்க மகிழ்ச்சியுடன் வருகிறாள். குமாரைக் காணாது சிறிது சஞ்சலத்துடன் தனக்குள் பேசிக் கொள்கிறாள்.]

முல்லை: சொன்ன நேரத்திற்கு வருவதே இல்லை. வந்தும் ஆயிரம் சாக்குகள் சொல்லுவார்.

[அது சமயம் காற்றினால் செடிகள் மெதுவாக அசைகின்றன. அதைக் கண்ட முல்லை குமார்தான் வருவதாக எண்ணி.]

அதோ.....அவர்தான். வரட்டும். இன்று தனிமையில் கொஞ்சம் தவிக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறேன்.

[எனக் கூறிக்கொண்டே குமார் மறைந் திருந்த செடிப்புதரில் ஒளியப்போகிறாள். அங்கு மறைந்திருந்த உருவத்தைப் பார்த்து, பயந்து வாய் குளற அலறு கிறாள்.]

மூல்: .....தி.....தி.....தி.....திருடன்!

கு: (உடனே எழுந்து அவளது வாயைப்பொத்தி) தேவி, என்னைத் திருடனுக்கி விடாதே. பிறகு திருட்டுக்கு உடைந்தையான குற்றத்திலிருந்து நீயும் தப்ப முடி யாது.

மூல்: இது என்ன விளையாட்டு.....என்னை அலறவிட் டுப் பார்ப்பது உங்களுக்கொரு ஆனந்தமா?

கு: என்னைத் தவிக்க வைத்துப் பார்ப்பதிலே இருப்ப தாக நினைத்தாயே, அதே ஆனந்தம்தான்.....

மூல்: இந்நேரம் அடிகள் விழித்துக்கொண்டிருந்தால் என்ன ஆவது.....?

கு: வழியோடு சென்ற நான் உன் அலறலைக் கேட்டு ஏதோ ஆபத்தென்று நுழைந்ததாகச் சொல்வேன். அவரும் என்மீது சந்தேகப்படமாட்டார்.....! என் தொழில் அதுதானே.

மூல்: இந்த வாயடிக்குக் குறையவில்லை. எதற்காக ஒளிந்திருந்தீர்கள்?

கு: நீ எதற்காக ஒளிய வந்தாய்...? மூல்லை, நீயும் அதே குற்றத்தைச் செய்துவிட்டு என்னை மிரட்டு கிறாயே.

மூல்: மிரட்டுவது உங்கள் தொழில்...!

கு: மிரளுவது உங்களியல்பு...!

முல்: போதும் உங்கள் சாமர்த்தியம்...எத்தனை நாட்களுக்கு இப்படி இருளிலும் மறைவிலும் சந்திப்பது?

கு: கண்ணே! பொறுத்துக் கொள். நல்ல சமயத்தை எதிர்பார்த்திருக்கிறேன். நாடறியத் தம்பதிகளாவோம்.

முல்: நல்ல சமயம் உங்களுக்கு எங்கிருந்து வரப்போகிறது.....கள்ளனைப் பிடிக்கவும், காலிகளை மிரட்டவும்தானே பொழுது சரியாக இருக்கும்.....முன்னமேயே உங்கள் பிழைப்புத் தெரியாமல் போய் விட்டது.....

கு: தெரிந்திருந்தால்.....?

முல்: போலீஸ் அதிகாரிக்கும் காதலுக்கும் பொருத்தமில்லையென்று தடுத்திருப்பேன்.

கு: ஏன், அவனுக்கு இதயமில்லையா? இன்ப உணர்வு இல்லையா?

முல்: இதயம் இருக்கும். ஆனால், அதில் ஈரம் இருக்காது. இன்ப உணர்வு இருக்கும். ஆனால், அதை நுகர நேரமிருக்காது.

கு: முல்லை, உன் அனுபவம் பெரிது.

முல்: தங்கள் ஆற்றலை விடவா.....?

கு: உனதன்புக்கு முன்னால் என்னாற்றல் தோற்றுவிடுகிறது; நான் அடிமையாகி விடுகிறேன்; உன் நிலையில் என்னை இழந்து விடுகிறேன்.

முல்: அதே நிலையில்தான் நானும் இருக்கிறேன். தங்கள் தேனமுதச் சொற்கள் என்னைக் கிறுகிறுக்கச் செய்கின்றன. என் காலடியிலிருந்து இந்த வையகமே நழுவி விடுகிறது.....!

கு : அன்பே ! என் காதல் வானிலே ஒளிசெய்யும் முழு நிலவு நீ.....!

[குமாரும் முல்லையும் காதலின்பத்தில் திளைத்துப் பாடி மகிழ்கின்றனர். அது சமயம் அங்கு வந்த தமிழானந்தர் காதலர்களைப் பார்த்து ஒதுங்கி நின்று பூரிக்கிறார்.]

தமி : (தனியே) களங்கமற்ற காதல் !

காட்சி 18.

இடம் : சிறைச்சாலையில் ஒரு அமைதியான இடம்.

மாந்தர் : வீரப்பன், ரௌடி ரெங்கன்.

நிலைமை : வீரப்பன் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறான். சிறை வாழ்க்கையின் சின்னமாக அவன் முகத்தில் மீசையும் தாடியும் அடர்ந்துவிட்டன. அவனது சோகத்தின் கொந்தளிப்பு கண்ணீர்த் துளிகளாகத் தேங்கி நின்றன. அது சமயம் ரௌடி ரெங்கன் அங்குவருகிறான் கவலையற்ற உள்ளத்தோடு. வீரப்பனின் தோற்றத்தைக் கண்டதும் திடுக்கிடுகிறான்.

ரெங்கன் : ஏண்ணே ! எப்பப் பார்த்தாலும் ஒரே வருத்தமாய் இருக்கிறீங்க.....?

[வீரப்பன் தன் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரை விரலால் மெதுவாகத் துடைத்துக்கொண்டு, கம்மிய குரலில் சொல்லுகிறான்.]

வீரப்பன் : என்னப்பா செய்யிறது.....வருத்தப்படவே பிறந்தவன் நான்.

ரெங்: நான் கூடத்தான் ஒரு சின்னஞ் சிறுசைக் கட்டி விட்டு வந்தேன். அதை நினைச்சு என்ன பண்றது? இந்தக் கம்பிக் கூண்டில் காலம் கழியுது ஒரு மாதிரியா.

வீர: (ரெங்கனைச் சற்று வெறுப்பாகப் பார்த்துவிட்டு) உன் மனசு கல்லுடா!

ரெங்: நீங்க ஒரு பக்கத்தில்! இந்த உலகம் ரொம்பப் பொல்லாதது அண்ணே. இரக்கத்தோடு வாழ நமக்கெல்லாம் இங்கே இடமில்லை. இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு எத்தித்தான் பிழைக்கவேண்டும்.

வீர: பைத்தியக்காரா! அந்தப் பழைய புத்தியை விட்டு விடு.

ரெங்: அண்ணே! என் பேச்சு இப்பப் புரியாது. வெளி உலகத்துக்குப் போனுத் தெரியும்.

வீர: (பெருமூச்சு விட்டபடி) அங்கே என் தங்கச்சி எப்படி வாழுதோ.....?

காட்சி 19.

இடம்: குமார் வீடு.
மாந்தர்: முல்லை, தோழிகள்.

நிலைமை: முல்லையை அலங்கரித்து பூவாலடித்து சந்தனம் தெளித்து விளையாடுகின்றனர்.

காட்சி 20.

இடம்: வழிநடை.
மாந்தர்: சுந்தரவல்லி, ஆனந்தி.

நிலைமை: சுந்தரவல்லி தன் மகள் ஆனந்தியின் கையைப் பிடித்தவண்ணம் வேதனையின் உருவமாக, ஏழ்மையின் சின்னமாக உளம் நொந்து புலம்பியபடி வீதியில் திரிகிறாள்.

காட்சி 21.

இடம்: சாப்பாட்டுக் கடை.

மாந்தர்: கடைக்காரி, வருபவர்கள், பரிமாறுபவர்கள், சப்ளையர், சுந்தரவல்லி, ஆனந்தி.

நிலைமை: கடைக்காரி கல்லாப்பெட்டியில் அமர்ந்திருக்கிறாள். அவளது தோற்றம் யானைக் குட்டியைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. நடுத்தர வயதையும் தாண்டிவிட்டது அவள் வயது. இருப்பினும் இளங்குமாரியைப்போல அலங்கரித்துக்கொண்டிருக்கிறாள். கடைக்கு வருவோர் போவோர்களைத் தன் ஆந்தைக்குரலால் வரவேற்றும், உருட்டு விழியால் சுழட்டிப் பார்த்தும், காரணமில்லாமல் காவிபடிந்த தன் கோரப்பற்களைக் காட்டிச் சிரித்தபடியும் இருக்கிறாள். சப்ளையர் வருவோர்களிடம் அவர்கள் விரும்பும் சிற்றுண்டி—சாப்பாடு முதலியவைகளைப்பற்றி விசாரிக்கிறான்.

சப்ளையர்: சார்! நீங்க வடையா, பஜ்ஜியா?

1-நபர்: பச்சியுமல்ல, பறவையுமல்ல. பார்த்துப் பேசு. நான் மனிதன்!

சப்: தெரியுது. அதனால்தான் உள்ளே விட்டிருக்கிறோம். அதோ பாருங்கள்!

[என, அங்கு தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு 'போர்டை'ச் சுட்டிக் காட்டுகிறான். போர்டில் "நாய்கள் அனுமதிக்கப் படமாட்டாது" என எழுதியிருக்கிறது.]

2-நபர்: ஏ, சப்ளையர்! சாப்பாடு கொண்டுவா.

சப்: சைவமா? வைஷ்ணவமா?

2-நபர்: என்னப்பா! சாப்பாட்டிலேகூட சைவ வைஷ்ணவமா?

சப்: ஐயா! சைவமுண்ணு மரக்கறி. வைஷ்ணவம்ணு மில்டேரி சாப்பாடு.

2-நபர்: உலகம் கெட்டுப்போச்சு. எந்த விலாசத்தை எதற்கு வைப்பதென்று இல்லே.

கடைக்காரி: (நபர் 2-ப் பார்த்தபடி) ஐயா நம்ம கடைக்குப் புதுசுபோலருக்கு.

2-நபர்: (கடைக்காரியைப் பார்த்து, கிண்டலாக) ஆமா, அம்மாவைப்போல அவ்வளவு பழசல்ல.....

சப்: ஐயா! நாங்க ஒண்ணும் பொருத்தமில்லாமல் பேர் வைக்கலே. அதிகமாகப் பேசாதிங்க.

2-நபர்: சைவ வைஷ்ணவத்துக்கும், சாப்பாட்டிற்கும் என்ன சம்பந்தம்?

சப்: அப்படிக் கேளும். வைஷ்ணவ வாகனம் கருடனுர், எலி, தவளே, நண்டு, நத்தை எதையும் தின்னும். அதனுலே மாமிச சாப்பாட்டை வைஷ்ணவம்ணுபேர் வச்சோம். சைவ வாகனம் நந்தி சைவமாகவே இருக்கிறதனுலே மரக்கறிக்குச் சைவம் என்று பெயர் வைச்சோம். அதிலென்ன தப்பு?

1-நபர்: டே சப்ளே! போதும் உன் பிரசங்கம். காபி கொண்டுவா.

சப்: இரண்டணு காபியா, மூன்றணு காபியா?

1-நபர்: காபிலேகூட இந்த வித்தியாசமா?

சப்: அம்மா கையாலே போட்ட காபிக்கு அணு மூன்று. ஐயா தயார் செய்தால் அணு இரண்டுதான்.

[அதற்கு சமயம் சுந்தரவல்லி ஆனந்தியைக் கூட்டிக்கொண்டு அங்கே வருகிறாள். கடைக்காரியைக் கெஞ்சலாகப் பார்த்துச் சொல்லுகிறாள்.]

சுந்தரவல்லி : அம்மா! ஏதாவது வேலை கிடைக்குங்களா?

கடை : (மெரட்டுதலுடன்) பிள்ளையும் தாயுமாய் புறப் பட்டு இருக்கே.....உனக்கு வேலையா?

சப் : (சுந்தரவல்லியைப் பார்த்து) நீ மாத்திரமென்ரால் பரவாயில்லை.

சுந் : பிள்ளைக்காகத்தானே பிழைப்பு தேடுறேன்.

கடை : அதற்கு இங்கே போட்டுக் கட்டாதம்மா. வேறு இடம் பார்.

சுந் : அதன் செலவுக்கு.....என் சம்பளத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

கடை : போடுற சாப்பாட்டுக்கே உன் வேலை சரிக்கட் டாதே. சம்பளம் வேறையா? போ...போ...

சுந் : பணம் கொடுத்தால் பிள்ளையையாவது வைத்துக் கொள்வீர்களா?

கடை : அதுக்கு வழியேது?

சுந் : கூலிப் பாடு பட்டாவது கொடுத்திடுறேனுங்க.

சப் : ம்.....சந்து, பொந்து, இருட்டு, ஏமம் எவ்வளவோ இருக்கும்!

கடை : மாதம் பதினைந்து தந்தாகணும். அதுவும் 'அட் வான்ஸா'கக் கொடுத்தால்தான் முடியும்.

சுந் : இந்தத் தோடுகளை ஈடாகத் தருகிறேன்.

[என்று, தன் காதுகளில் அணிந்திருந்த தோடுகளைக் கழட்டுகிறாள்.]

காட்சி 22.

இடம்: வீதி.

மாந்தர்: பெரியவர், வாலிபர், இரு பெண்கள்.

நிலைமை: வீரப்பனைப்பற்றிய வதந்தி. பெரியவர் ஒருவர் கையில் பத்திரிகையொன்றைப் பிடித்துக்கொண்டு, வாலிபனொருவனுடன் வீரப்பனைப் பற்றிப் பேசிக்கொண்டு வருகிறார்.

பெரியவர்: தம்பி! இன்னைக்குப் பேப்பர் பார்த்தியா?

வாலிபர்: என்ன, மூன்றாவது மகாயுத்தம் கித்தம் ஆரம்பமாயிடிச்சா?

பெ: அட இல்லப்பா! பனிரெண்டு வருஷ ஜெயில் நரி தப்பி விட்டானும்.

வா: ப்பூ...இதற்குத்தானு கவலைப்படுகிறீர்கள்?

பெ: என்னவோ, உனக்கு அலட்சியமாக இருக்கு. இலட்சக் கணக்கில் வைத்திருப்பவன் வயிற்றிலெல்லாம் நெருப்பு விழுந்துடுச்சு.

வா: அந்தக் கவலை எல்லாம் எனக்கேது. நான் ஒரு அன்னக் காவடி. உண்டானபட்டவங்களுக்குத்தான் அந்தக் கவலை. நீங்க பயப்படறதைப் பார்த்தா அப்படி இப்படி இருட்டு வியாபாரத்திலே சம்பாதிச்சு வச்சிருக்காப் போலே தோணுது.

பெ: அட, போப்பா...நீ ஒரு பக்கத்தில்.

[எனப் பேசிக்கொண்டே செல்கின்றனர். அடுத்து இரு பெண்கள் தண்ணீர்க் குடத்துடன் வருகின்றனர்.]

1-பெண்: அடி, மீனு! தெரியுமா, ஒரு பக்காத் திருடனைப் பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாயிருக்கு.

2-பெண் : அட பாவி! எவ கழுத்து மணியை அறுக்கக் காத்திருக்காளே?

1-பெண் : இனிமேதான், அறுக்கப் போறாளே! எத்தனையோ இரும்புப் பெட்டிகளைக் காலியாக்கி விட்டானும்.

2-பெண் : சர்க்கார் என்ன செய்து கொண்டிருக்குதாம்.

1-பெண் : ம்.....போலீஸ்காரர் அத்தனை பேருந்தான் சல்லடைபோட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

[பேசிக்கொண்டே போகிறார்கள்.]

காட்சி 23.

இடம் : குடிசைப் புறம்.
மாந்தர் : வீரப்பன், சிறுவர்கள்.

நிலைமை : சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த வீரப்பன் தன் குடிசை இருந்த இடத்தைப்பார்த்தவண்ணம் பதுங்கியபடி வருகிறான். ஆனால் அவன் குடிசையைக் காணவில்லை. குட்டிச்சுவரும் அங்கு வளர்ந்திருந்த கள்ளிச் செடியும் திடுக்கிடவைக்கின்றன. துக்கம் நெஞ்சை அடைக்க கண்களில் நீர் ஆறாய்ப் பெருகுகிறது. குடிசை இருந்தபோது அதனருகில் வளர்ந்திருந்த வேப்பமரம் மட்டும் என்றும் போல் இருந்தது.

வீரப்பன் : ஐயோ! இதுவா என்வீடு! இந்தப் பொட்டலிலா வாழ்ந்தோம். கள்ளியும் முள்ளியும் அடர்ந்து கிடக்கிறதே...அம்மா! அம்மா!! தள்ளாத வயதில் நீ என்ன செய்வாய்? தங்கை என்ன செய்யும் என்ற தவிதவிப்பால் சட்டத்தையும் மீறினேன்—சர்க்காரையும் ஏய்த்தேன். சிறையினின்றும் தப்பினேன். உங்களைக் காணவேண்டுமென்ற ஆசையால் ஓடோடி வந்தேனே, இந்தக் குட்டிச் சுவர்தானு மிச்சம்! ஐயோ, அம்மா, உங்களைப் பற்றி யாரிடம் கேட்

பேன். தங்கையே, நீ அனுதையாகி விட்டாயா? சோகப் புயலில் உன் வாழ்வு சுக்கு நூறாகி இருக்குமே. நாம் யாருக்கு என்ன செய்தோம்? எவர் குடியைக் கெடுத்தோம்? ஏன் இந்தக் கதி? அம்மா! மூல்லி!! மூல்லி!!!.....

[வீரப்பன் தனிமையில் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்த சிறுவர்கள், வேடிக்கை பார்க்கக் கூடுகின்றனர். அவர்களில் ஒருவன் கள்ளிச் செடியை காட்டி, கேலியாகப் பேசுகிறான்.]

1-சிறுவன்: ஏ பைத்தியம்! அதோ பார். அந்தப் புதரில் பூத்திருக்கு மூல்லை!

[வீரப்பன் சிறுவர்களை வெறிக்கப் பார்க்கிறான், பைத்தியம் பிடித்தவனைப் போல.]

சிறுவர்கள்: பைத்தியம்! பைத்தியம்!! பூச்சாண்டி! பூச்சாண்டி!!

[கூக்குரலிட்டபடி சிறுவர்கள் வீரப்பன் மீது மண்ணையும் கல்லையும் வாரித் தூவுகின்றனர். வீரப்பன் அவர்களை விரட்டுகிறான்.]

சிறுவர்: டே, கரடி மனுஷன்! ஓடுங்கள்! ஓடுங்கள்!!...

[வீரப்பன் வேதனையுடன் அவ்விடத்தை விட்டுச் செல்லுகிறான்.]

காட்சி 24.

இடம்: சாப்பாட்டுக் கடை.
மாந்தர்: வீரப்பன், சப்ளையர்

நிலைமை: வீரப்பன் பசியால் சோர்ந்து வருகிறான்.

வீரப்பன்: ஐயா! சாப்பாடு கிடைக்குமா?

சப்ளையர்: சாப்பாடா? ஏதாவது இரண்டு வீட்டைப் பார். இது கடை.....

வீர: ஐயா, பசி பொறுக்க முடியவில்லை. ஏதாவது போடுங்கள். நீங்க சொல்ற வேலையெல்லாம் கேட்கிறேன்.

சப்: சோம்பேறிப் பயல் வேலை கேட்கிறானும் வேலை.

வீர: ஐயா, தாங்க முடியாத பசி. நீங்க தின்ன மிச்சம், மீதி, எச்சல் இலையைக் கொடுங்கள்.

சப்: போடா நாயே! இங்கே ஒன்னும் மிஞ்சிக் கிடக்க வில்லை.

வீர: (ஒரு பக்கம் சுட்டிக் காட்டி) அதோ! வடித்துக் கொட்டி வைத்திருக்கிறீர்களே.....அதில் ஒரு பிடி....

சப்: என்ன திமிர்! பெரிய மனிதர்கள் வருகிற இடம். வழியைவிட்டு நகரடா.

வீர: (ஆத்திரத்துடன்) பெரிய மனிதர்கள்.....பண்பிலா? பகட்டான வேஷத்திலா? ஏழைக்கு ஒரு வயிறும் பணக்காரனுக்கு வேறுமா இருக்கிறது? பசி! பசி!! பொது ஐயா, அந்தப் பிணி!

சப்: டேய் அதிகப் பிரசங்கி! போகிறுயா? போலீசைக் கூப்பிடவா? திருட்டுப்பயலே!

[என்று கூறிக்கொண்டே தண்ணீரை வீசி வீரப்பனை விரட்டுகிறான்.]

காட்சி 25.

இடம்: குமார் வீடு.

மாந்தர்: முல்லை, பிச்சைக்காரன், வேலைக்காரன் வீரப்பன்.

நிலைமை: முல்லை தன் அண்ணன் வீரப்பனை நினைந்து தனி

மையில் அழுது புலம்பியவாறு இருக்கிறாள். அதுசமயம் பிச்சைக்காரனொருவன் பரதேசிப் பாடலுடன் வருகிறான்.

பிச்சைக்காரன்: தாயே! பரதேசிக்கு அன்னம் போடுங்களம்மா.

[பிச்சைக்காரனின் குரலைக்கேட்ட முல்லை சோறுகொண்டு வந்து போடுகிறாள். அதுபோது வீரப்பன் ஓடிவந்து தன்னிரு கைகளையும் ஏந்துகிறான்.]

வேலைக்காரன்: (வீரப்பனைப் பார்த்து) பிச்சைக்காரன் போல இருக்கு.

வீரப்பன்: ஐயா! பசிக் கொடுமை.

[முல்லை, வீரப்பனுக்கும் சோறு போடப் போகிறாள்.]

வே: பாத்திரமிருக்கா?.....பாத்திரத்தை எடு.

வீர: (திகைத்து) பெருமூச்சுடன், பாத்திரம்.....!

வே: திருவோடு மில்லையா.....?

[வீரப்பன் தன்மேல் போட்டிருந்த அழுக்குத் துணி ஒன்றை எடுத்துக் கையில் விரித்தபடி முல்லையைப் பார்த்து]

வீர: இதில் போடுங்கள்.

[வீரப்பனின் தோற்றமும், பேச்சும் வேலைக்காரனுக்குச் சந்தேகத்தை மூட்டுகிறது முல்லை சோறுபோடப் போகையில் தடுத்து.]

வே: போடாதீர்கள். இருங்கள். அவனைப் பார்த்தால் பிச்சைக்காரனைத் தெரியவில்லை, எவனை கழுத்து மணி அறுக்க வந்த பயல்!

மூல்: (பயத்தால் நடுங்கி) ஆ! திருடனா!!

[அலறி பாத்திரத்தைக் கீழே போட்டு விடுகிறான் மூல்லை. வீரப்பன் பசிக் கொடுமையால் சிதறிய பருக்கைகளைத் திரட்டித் தின்னுகிறான்.]

வே: (கோபத்தோடு) சீ! அயோக்கியப் பயலே! இது இன்ஸ்பெக்டர் வீடு. ஓடு. (விரட்டுகிறான்.)

காட்சி 26.

இடம்: சாவடி.

மாந்தர்: வீரப்பன், சாவடிக் காவற்காரன், தமிழானந்தர்.

நிலைமை: வீரப்பன் சோகத்தோடு சாவடிக்கு வருகிறான். சாவடியின் ஒரு மூலையில் தன் அழுக்குத்துண்டை விரித்துப் படுக்கிறான்.

வீரப்பன்: நல்ல உலகமிது. கெட்டவனைக் கேடு கெட்டவனுக்குகிறது.....

காவற்காரன்: (வீரப்பனை நோக்கி) யாரப்பா? ரொம்ப ஆயாசத்தோடு கீழே சாய்கிறது.....

வீர: ஒரே கனைப்பாக இருக்கிறதையா?

கா: சரிதான். எழுந்திரு. இது ஆண்டி மடமல்ல, உன்னைப்போல ஒழிசல்கள் அடைய. இது ஊர்ச் சாவடி.

வீர : சாவடியில் தங்கக்கூட அந்தஸ்து தேவையா ?

கா : பின்னே! முடிச்சுமாறிப் பயல்களுக்கும், மூட்டை யடிக்கும் பயல்களுக்கும் இடம் கொடுக்கமுடியுமா ?

வீர : நானும் வழிப்போக்கன்தான் ஐயா.

கா : அப்படித் தெரியவில்லை. உன்னைப் பார்த்தாலே பயங்கரமாயிருக்கிறது.....(அதட்டல்)

வீர : (எழுந்து நடந்தபடியே) வெளியில் வந்ததற்கு இந்த வேதனைதான் மிச்சம். இந்தப் பாழும் உலகில் வாழ வழி இருக்காது போலிருக்கிறதே! சமுதாயம் புறக் கணிக்கும்படியான சண்டாளனா நான் ?.....

[சாவடிக்கு அடுத்துள்ள சாலைக்கு வரு கிறான். அங்கே மரங்களின்மேல் அடைந் துள்ள பறவைகள் கூச்சலிடுகின்றன.]

வீர : பறவைகளே ! பாருங்கள், பாருங்கள், என் பரிதா பத்தை. இதுபோல் இனத்தை இனமே இழிவு செய் யும் சிறுமை உங்களிடமிருக்காது. வறுமை பலர்க்கும் வாழ்வு சிலர்க்கும் என்ற வஞ்சனையைக் கண்டிருக்க மாட்டீர்கள். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று ஒரு வரை ஒருவர் ஒதுக்கித் தள்ளும் கொடுமை உங்களுக் குப் புறம்பானது. சூதும் சூழ்ச்சியும் நீங்கள் அறிய மாட்டீர்கள். பிறவியினால் உயர்ந்தவனெனப் பேசிக் கொள்ளும் எங்கள் மனித ஜாதியின் பேதபுத்தியைப் பார்த்துச் சிரியுங்கள் ! நன்றாகச் சிரியுங்கள் !!.....

[என வெறிகொண்டு நகைக்கிறான். பின் ஆயாசத்தோடு கீழே வருகிறான். அப்பொழுது புத்தரின் கருணை வியக்கும் பாடலின் ஒலி கேட்கிறது. தமிழானந் தர் அவ்வழியாக வந்து சேருகிறார்.]

தமிழானந்தர் : யாரப்பா, பாதையில்.....

வீர : (துயரமாக) ஒரு நடைப் பிணம்.

தமி : (அன்பாக) நொந்த உள்ளத்தோடு பேசுகிறாய்... எழுந்திரு.

வீர : (மயக்கத்துடன்) நான் கேட்பது உண்மைதானா?...

தமி : உண்மை. உன் சகோதரன் அழைக்கின்றேன்.

வீர : (திகைத்து) சகோதரனா! எனக்குச் சகோதரனா!!

தமி : ஆம். உன் இனம். வா, என்னுடன்.

[வீரப்பன் தமிழானந்தரின் முகத்தில் தவழும் சாந்தத்தையும், அவரது கண்களில் ஒளிரும் அன்பையும் கண்டு திகைப்பும் வியப்பும் கொள்கிறான்.]

வீர : எங்கே அழைக்கிறீர்கள்?

தமி : நம்ம சொந்த விடுதிக்கு.

வீர : (ஆவலுடன்) அங்கே பசிக்கு எதுவும் கிடைக்குமா? படுக்க இடமுண்டா?

தமி : (இளநகையுடன்) எல்லாம் உண்டு.

காட்சி 27.

இடம் : அறநிலையம்.

மாந்தர் : தமிழானந்தர், வீரப்பன், சிறுமி, ஊர்க் காவலன்.

நிலைமை : தமிழானந்தரும், வீரப்பனும் அறநிலைய வாயிலுக்கு வந்து சேருகின்றனர். வீரப்பன் அறநிலையத்துக்குள் செல்லத் தயங்குகிறான்.

தமிழானந்தர் : ஏன், தயக்கம்? வா, உள்ளே.

வீரப்பன் : நான் உள்ளே வரலாமா?

தமி : வீட்டிலிருப்பவர், வெளியில் நிற்கவேண்டியவர் என்ற வேற்றுமை இங்கில்லை.....தாராளமாக வரலாம்.

வீர : ஐயா, நான் ஒரு.....நான் ஒரு.....

தமி : இரக்கத்திற்குரிய மனிதன்.

வீர : இல்லை.....இல்லை.....புறக்கணிக்கப்பட வேண்டிய பொல்லாத பாவி. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். ஊரில் எல்லோரும் விரட்டியடித்துவிட்டார்கள். நாய் கூடச் சிந்தவில்லை.

தமி : வேதனைப் புயல் வீசிக்கொண்டிருக்கிறது. அது தணியட்டும். வந்து அமருங்கள் ஐயா.

[வீரப்பன் தயங்கிக்கொண்டே மிரள மிரள விழித்தபடி நழைகிறான். தமிழானந்தர் ஒரு நாற்காலியைக் காட்டி அமரச் சொல்கிறார்.]

வீர : (திடுக்கிட்டு) என்ன!.....எனக்கு நாற்காலியா? "போடா நாயே" என்று விரட்டாமல், வாயார "ஐயா" என்று அழைக்கிறீர்களே.....இந்தப் பேயனை மனிதனாக மதிக்கும் முதல் மனிதர் தாங்கள் தான் ஐயா.

தமி : (நகைத்து) இருவரும் மனிதகுலம்தான். "பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்பதே தமிழ் நீதி. அதோடு உறுப்பிலோ, உணர்ச்சியிலோ நம்முள் என்ன வேறுபாடிருக்கிறது? அப்படியிருக்க ஏற்றத் தாழ்வேது?

வீர: ஐயா, தாங்கள் ரொம்ப நல்லவர்.

[சிறுமி யொருத்தி உணவு கொண்டு வருகிறாள்.]

தமி: இதோ! உணவு வந்துவிட்டது.

வீர: இதற்கு விலை இல்லையா.....?

தமி: தங்கள் பசி அடங்குவதுதான் அதற்கு விலை.

வீர: (வியந்து) ஆ! எவ்வளவு கருணை இந்த ஏழை யிடம்! எவ்வளவு அன்பு! தாங்கள் மிகவும் பெரிய மனிதர். தங்களிடம்தான் மனிதத்தன்மை இருக்கி றது. தாங்கள்தான் நான் கண்ட தெய்வம். முன்பின் தெரியாத என்னை.....எவ்வளவு உபசரிக்கிறீர்கள்.

தமி: பிறகு பேசலாம். முதலில் நன்றாகச் சாப்பிடுங்கள்.

வீர: (ஒரு வாய் சோற்றை அள்ளி மகிழ்ந்து) ஐயா, இந்த அரிசிச் சோற்றைத் தின்று ஆண்டுகள் பனி ரெண்டாகிறது. சோளக்களியும், சுண்டிய கீரை யும்தான் நான் கண்டது.

தமி: கொடிய சோதனைதான்.

[வீரப்பன் சோற்றைத் தின்று கொண்டே பேசுகிறான்.]

வீர: இயல்பாக நேர்ந்ததல்ல, அரசாங்கம் தீர்த்த வஞ் சம். எனக்குச் சர்க்கார் தந்தது பனிரெண்டாண்டுக் கடுங்காவல்.

தமி: மிகவும் கடுமையான உத்தரவு.

வீர: ஏன் தெரியுமா? இந்தப் பொல்லாத உலகில் பிழைக்க வழியில்லை. வறுமை என்னோடு விளையா

டிற்று. முடிவில் ஒரு பித்தலாட்டத்தையைப் பொன் என்று நம்பிக் கெட்டேன்.

[பேசிக்கொண்டே தின்று முடித்தான்.]

தமி: உன் சோக வாழ்வைக் கிளற வேண்டாம். ஓய் வெடுத்துக் கொள்.

[என்று, அவனை அழைத்துபோய் ஒரு பஞ்சு மெத்தையைக் காட்டுகிறார் படுத்துறங்க.]

வீர: (திகைத்து) என்ன பஞ்சு மெத்தையிலா?

தமி: ஆம். படுத்து நிம்மதியாக உறங்கு.

வீர: என்னையா உள்ளே படுக்கச் சொல்கிறீகள்? நான் திருடன் - என்னை நம்பாதீர்கள் - உங்கள் உபசரணைக்கெல்லாம் நான் தகுதியற்றவன் - என்னைத் துரத்திவிடுங்கள்.

தமி: சென்றதை நினைத்துச் சிந்தையைக் குழப்பிக் கொள்ளாதே. அமைதியாக உறங்கு. காலையில் பேசுவோம்.

[வீரப்பன் படுக்கையில் சாய்கிறான். தமிழானந்தர் அங்கிருந்து சென்று புத்தர் சிலையின் முன் அமைதியாக அமர்ந்து உலக நன்மைக்காகத் தியாகம் செய்கிறார். பின் தன் படுக்கைக்குச் செல்கிறார். விடிவெள்ளி தோன்ற முதற்கோழி கூவுகிறது. வீரப்பன் விழித்துக் கொண்டு கண்களைக் கசக்கியபடி எழுந்து உட்காருகின்றான். அவன் பார்வையில் அங்கு

அடுக்கி வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த பொருள்கள் தென்படுகின்றன. அது சமயம் ரெங்கன் கூறிய சொற்கள் எதி ரொலிக்கின்றன.]

ரெ : "அண்ணே! இந்த உலகத்தில் நாம் இரக்கத்தோடு வாழ முடியாது. எத்தித்தான் பிழைக்க வேண்டும்..."

[வீரப்பனின் உள்ளம் குழம்புகிறது. பக்கத்தில் படுத்திருக்கும் ஆனந்தரையும், அவரது முகத்தில் படர்ந்திருக்கும் அமை தியான சாந்தத்தையும் பார்க்கிறான். அவன் மனம் தடுமாறுகிறது.]

வீர : ஏன்? வேறு வழியில்லையா? யோக்கியமாக வாழ முடியாதா? எல்லோரும் திருடித்தான் பிழைக்கிறார் களா? எனக்கு மட்டும் இங்கே இடமில்லையா?

[அது சமயம் அவனது மனத்திரையில் பையன்கள் செய்த கேலி, சாப்பாட்டுக் கடையின் துரத்தல், வேலைக்காரனின் மிரட்டல் முதலிய நிகழ்ச்சிகள் தோன்று கின்றன. அந் நிகழ்ச்சிகள் காட்சிகளாக வருதல்.]

சிறுவர்கள் : பைத்தியம்! - பைத்தியம்!! பூச்சாண்டி பூச்சாண்டி!!

சப்ளையர் : மரியாதையோடு போகிறியா போலீசைக் கூப் பிடவா?

வேலைக்காரன் : போடாதீர்கள். இருங்கள். அவனைப் பார்த்தால் பிச்சைக்காரனைப் போல் தெரியவில்லை. எவனோ கழுத்து மணி அறுக்கவந்த பயல்.

ரெங்கனின் குரல் : (அழுத்தமாக) இப்பொழுது சொல்லுங்கள்.

[வீரப்பனின் மனம் மாறுகிறது. சிந்திக்கிறான் வாய் முனு முணுக்கிறது.]

வீர : ஆம். இந்த விசித்திர உலகத்தில் விபரீதப் பாதையில்தான் செல்லவேண்டும். இங்கே ஆனந்தர் மட்டும் வாழவில்லை. அன்பு, இரக்கம், ஈகை இன்னதென்றறியாத வெறியர்களும்தான் வாழ்கிறார்கள். இவர் உதவிதான் என்ன நிரந்தரமா? விடிந்தால் வெளியில் ஓடவேண்டும். அங்கே பித்தன், பேயன், கள்ளன், கழுத்து மணி அறுப்பவன் என்ற பட்டங்கள் காத்திருக்கும். என்ன செய்வது.....?

[பெருமூச்சு விடுகிறான். கிழக்கு வெளுத்துக்கொண்டிருக்கிறது. படுக்கையை விட்டெழுந்து சுற்றும் முற்றும் பார்த்தவண்ணம் அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை எடுத்து மூட்டை கட்டுகிறான். அந்த அரவத்தில் தமிழானந்தர் சற்றுப் புரண்டு படுக்கிறார். உடனே வீரப்பன் அவரைத் தாக்குவதற்காகத் தன் கைத்தடியை ஓங்குகிறான். தமிழானந்தரின் கருணை முகம் அவனை கிறுகிறுக்கச் செய்கிறது. சட்டென களவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு வெளியேறுகிறான். பொழுது விடிகிறது. அறநிலையச் சிறுமி ஓடிவந்து தமிழானந்தரைப் பதட்டத்துடன் கூவி எழுப்புகிறாள்.]

சிறுமி : தாத்தா! தாத்தா!! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!!!

[தமிழானந்தர் விழித்து, அமைதியாக எழுகிறார்.]

தமி : ஏனம்மா கூச்சல் போடுகிறாய்?

சிறு : அதோ! பாருங்கள். கொல்லைப் புறத்துக் கதவு திறந்து கிடக்கிறது. சாமான்களை எல்லாம் காணோம்.....

தமி : என்னம்மா உளறுகிறாய்.

சிறு : யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள்.

த : (அமைதியாக) அதனால் என்ன? இல்லாதவர்கள் எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள். அதற்காகவா கலவரப்படுகிறாய்?

சிறு : எனக்குப் பயமாயிருக்கிறது.

த : நானிருக்கிறேன். இரவு வந்த நண்பரும் படுத்திருக்கிறார்.

[வீரப்பன் படுத்த படுக்கையைப் பார்க்கிறார். அது காலியாக இருக்கிறது. அப்போது தெருக்கதவு தட்டப்படுகிறது. சிறுமி கதவைத் திறக்கிறாள். ஊர்க்காவற்காரன் (போலீஸ்காரன்) வீரப்பனைப் பிடித்துக்கொண்டு உற்று நுழைந்து தமிழானந்தரை வணங்குகிறான்.]

காவற்காரன் : ஐயா! வணக்கம்.

தமி : (வீரப்பனைப் பார்த்து) அன்பரே, வாருங்கள் இவ்வளவு காலையிலா எழுந்து சென்றீர் ?

கா : ஐயா ! இந்த ஆள் அறநிலையத்தைச் சேர்ந்தவரா ?

த : ஆம். அவர் என்ன சொன்னார் ?

கா : தாங்கள் துவைக்க அனுப்பியதாகச் சொன்னார்.

த : உண்மை ... (வீரப்பனைப் பார்த்து) ...இன்னும் சில அதோ இருக்கின்றன. அவற்றை ஏன் மறந்து விட்டீர் ?

கா : ஐயா, நான் சந்தேகப்பட்டு இவரை அழைத்து வந்தேன். என்னை மன்னியுங்கள். வருகிறேன்.

[வீரப்பனை விட்டு விட்டு வெளியேறுகிறான் காவற்காரன். அதுவரை அங்கு நடந்த பேச்சுவார்த்தைகளைக் கவனித்த வீரப்பன் தன் குற்றத்தை உணர்கிறான்– வேதனைப்படுகிறான். காவற்காரன் கைது செய்யாமல் போவதைப்பார்த்து அழுகிறான்.]

வீர : என்ன ? என்னை விட்டுவிட்டா போகிறார் ? கையும் களவுமாகப் பிடித்த என்னைக் கைது செய்யாமலா போகிறார் ? [என்றலறிக் கொண்டே ஆனந்தரின் கால்களில் விழுகிறான்.] ஐயா ! நான் துரோகி! ...நான் துரோகி!

தமி : நண்பா ! கலவரப்படாதே. எழுந்திரு.

வீர : (கண்ணீர் பெருக) எனக்கா கருணை காட்டுகிறீர்கள் ? தங்கள் பெருங்கருணையை மறந்த இந்தப் பேயனுக்கா இரங்குகிறீர்கள்...உப்பிட்ட நன்றியை

உடனே மறந்த உலுத்தன் நான். அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்டகயவன் நான். என்னை அடியுங்கள்—அடியுங்கள். அந்தக் காவலனிடம் பிடித்துக் கொடுங்கள்.

தமி: தம்பி! தவறுவது மனித இயற்கை.

வீர: உத்தமரே! தங்கள் பெருமைக்கு முன்னால் எனக்குப் பேச வாயில்லை...ஐயோ! களவாடிய நேரத்தில் தடியை ஓங்கினேனே.....!

தமி: சந்தர்ப்பம் தூண்டி இருக்கும்...(நகைக்கிறார்)

வீர: பாம்பிற்குப் பால் வார்த்தீர்கள். பசி அடங்கியதும் அது தன் பல்லுக்கு வேலை தேடிவிட்டது...

தமி: வீணுகச் சஞ்சலப்படாதே. தவறுவது எளிது. தவறை உணருவதே அருமை நீ உணர்ந்து விட்டாய். உன் உள்ளம் திருந்திவிட்டது.

வீர: என்ன, நான் நல்லவனுகி விட்டேன் என்கிறீர்களா?

தமி: ஆம். இந்தப் பொருள்களைக் கொடுத்து பாவத்தின் பிடியிலிருந்து உன்னை மீட்டுவிட்டேன். நீ நல்லவனுகி விட்டாய்—நல்லவர்களுக்கு நாயகமாகி விட்டாய்.

தமி: அன்பனே! (புத்தரின் சிலையைக் காட்டி) அந்தச் சான்றோனின் புன்னகையைப் பார்! அந்தப் புனிதனின் தியாகத்தை நினைவில் வை...அவனுக்கு மாட மாளிகைகள் இருந்தன; அவற்றை மறந்து காடு மேடுகளில் காலம் கடத்தினான்...ஆளுவதற்கு நாடு நகர் இருந்தன; அவற்றை விடுத்து ஒரு நாடோடியானான்...அனுபவிக்க அழகுராணி...இருந்தாள்; அவளைத் துறந்து வைராக்கியம் பூண்டான்...கொஞ்சுவதற்குச் சொந்தக் குழந்தை இருந்தது; அந்தப்

பாசம் கொள்ளாமல் வையகமெல்லாம் தாயன்பு செலுத்தினுன்...ஒரு சமயம், கால்தாங்கிய செம்மறியைத் தோளில் சுமந்து நடந்த கருணைவள்ளலப்பா! அவர், தான் மட்டும் வாழ விரும்பாது சமுதாயமே உய்ய வழி தேடினுர்...அந்த உத்தமன் வகுத்த கொள்கைகளை உணர்ந்து நடந்தால், உன் வாழ்வு துலங்கும். அத்துடன் வள்ளுவனின் பொன்மொழிகளைப் போற்று. மறந்தும் பிறன்கேடு சூழற்க! மறுத்தின்னு செய்தாரையும் கறுத்து இன்னு கருதாதே! அவர் காண நன்மையைச் செய்துவிடு...வன்சொல் வேண்டாம். இன்சொலால் இவ்வுலகினத்தையும் கட்டுப்படுத்தலாம்...என்பும் பிறர்க்குரியனுக வாழ். இந்தப் பிறவி எடுத்த பயன் ஈடேறும். மனிதருள் மாணிக்கமாக விளங்கலாம். கொஞ்சம் முதல் தருகிறேன். அதனைக்கொண்டு தொழில் நடத்து.

காட்சி 28.

இடம்: வழிநடை.

மாந்தர்: ரௌடி ரெங்கன், வண்ணன்.

நிலைமை: சிறையிலிருந்து விடுதலையடைந்த ரௌடி ரெங்கன் வழிநடையில் பொதி சுமந்துவரும் ஒரு வண்ணனைச் சந்திக்கிருன்.

ரெங்கன்: ஐயோ, பாவம்! இரண்டு கழுதைப் பொதியை ஒரு ஆள் சுமந்துகிட்டு வருகிறியே.

வண்ணன்: என்ன செய்யிறது...அந்த இழவு மகன் கழுதையை அவிழ்த்து விட்டேன். அதுளந்த குட்டிச்சுவர் பார்த்ததோ.....

ரெ: அட! அந்தத் துறையிலே ஒரு கழுதை நின்னுதே...

வண் : என்ன ?.....கொஞ்சம் கூழை வாலா ?

ரெ : ஆமப்பா, அதேதான்.

வண் : ஐயா! கொஞ்சம் இந்த மூட்டையைப் பார்த்துக் கொள்ளுங்கள். அந்தக் கழுதையைப் பிடிச்சுக் கொண்டு வருகிறேன்.

ரெ : சீக்கிரமா வா. நான் போகணும்.

[வண்ணன் துணிப் பொதியை ரெங்கனிடம் வைத்துவிட்டு வேகமாகப் போகிறான். ரெங்கன் துணிப் பொதியை தூக்கிக் கொண்டு வேறு வழியாகக் கிளம்பிவிடுகிறான்.]

காட்சி 29.

இடம்: சாப்பாட்டுக் கடை

மாந்தர்: கடைக்காரி, ஆனந்தி, ரௌடி ரெங்கன்.

நிலைமை: ஏழ்மையின் உருவமாக ஆனந்தி, ஒரு தட்டில் சிறிது உணவை வைத்துத் தின்றுகொண்டிருக்கிறாள். அது போது, கடைக்காரி கூக்குரலிட்டு ஆனந்தியை மிரட்டுகிறாள்.

கடைக்காரி : அட சனியனே! எவ்வளவு நேரமாக கொட்டிக்கொண்டிருக்கே. நீ தின்னே கடையை ஒழிச்சு விடுவே போலிருக்கே. ஒன்னைப் பெற்றாளே அந்தப் பேய்ச் சிறுக்கி. அவள் அனுப்புகிற வக்கணைக்கு நாலாள் தீனி போடவேண்டியதுதான். ஹூம்..... ஒரு பருக்கை சிந்திக் கிடந்தால் உசிரை வாங்கி

விடுவேன். பத்துப் பாத்திரங்களைக் கழுவி வைச்சிட்டுப் போய்ப் படுத்துத் தொலை.

[ஆனந்தி தன் விழிகளில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி உள்ளே செல்கிறாள். ரௌடி ரெங்கன் அங்கு வருகிறான் துணிப் பொதியுடன்.]

ரெங்கன் : சைவ வைஷ்ணவ சமரச விலாஸ் இதுதானே

கடை : யாரப்பா ? இந்த நேரத்திற்கு விலாசம் விசாரிக்கிறது ?

ரெ : அசலூருங்க. ஜவுளி வியாபாரி.

கடை : அதுதான் உன் மூட்டையைப் பார்த்தாலே தெரியுதே.

ரெ : சாப்பாடு, பலகாரம் ஏதாவது கிடைக்குங்களா ?

கடை : கிடைக்கும், நாளைக்குக் காலையில் வந்தால்.....!

ரெ : அப்ப, இராத்திரி பாடு லங்கனந்தானு.....ம்..... போகட்டும், இந்த மூட்டையையும், பணப்பையையும் வைத்திருந்து காலையில் கொடுங்கள்.

கடை : அந்தப் பொறுப்பெல்லாம் நமக்கு முடியாது. போ ...போ.....

ரெ : அப்படிச் சொல்லக்கூடாது. எனக்கு வேறு யாருமில்லை இங்கே.

கடை : அதெல்லாம் யார் கட்டிக் காப்பது ? வேலை ஆட்கள் கூட போய் விட்டார்கள்.

ரெ : பெரிய மனது பண்ணுங்க, ஒரு இரவுக்கு.....காலையில், விடிவதற்குள் புறப்பட்டு விடுகிறேன்.

கடை : முதலில் மூட்டைக்கு இடங் கேட்டே, மெள்ள மெள்ள உனக்கே பேசுகிறியே.

ரெ : இல்லாவிட்டால் இந்நேரத்தில் வேறு எங்கு சென்று தங்க முடியும் ?

கடை : முன்னப்பின்ன தெரியாதவனுக்கு இடங் கொடுக்க முடியாது.

ரெ : இவ்வளவுதானே, இதோ பார்த்துக் கொள்ளுங்கள் முன்னையும் பின்னையும்.

[திரும்பிக் காட்டுகிறான்.]

கடை : என்ன கேலியா பேசுகிறே.

ரெ : இல்லை. வேடிக்கையா பேசுகிறேன். என்ன தங்கலாமா ?

கடை : எவனே இரவு தங்கியிருந்தானென்று ஊரில் நாலுபேர் கேவலமாகப் பேசவா.

ரெ : (துணிப் பொதியை அவிழ்த்து ஒரு ஜரிகைப் புடவையை எடுத்துக்காட்டி) கப்பலுக்குப் போன அத்தை மகன் வந்து விட்டானென்று சொன்னால் போச்சு.

கடை : ஓஹோ.....அவ்வளவு நெருங்கி விட்டாயா ?...

ரெ : இந்த ஜரிகைச் சேலையைக் கட்டிப் பார். உன் அழகை வாரிக் கொண்டுதான் போகும்.....

கடை : ஹூம்.....பெரிய ஆள்தான் நீயும்.....

காட்சி 30.

இடம்: குமார் வீடு.

மாந்தர்: முல்லை, குமார்.

நிலைமை: குமார் அவசர அவசரமாக வெளியே புறப்படுகிறான்.

முல்லை: ஏன் இவ்வளவு அவசரம்? கழுவிய கைகூட உலரவில்லை.

குமார்: கடமை இருக்கிறதல்லவா.....

முல்: நல்ல கடமை. ஓய்வு ஒழிவு இல்லாத அலைந்த பிழைப்பு. காலாகாலத்தில் வந்து சேருங்கள்.

கு: அந்தக் களவாணிப் பயலைப் பிடிக்கிறவரையில் காலமாவது நேரமாவது.....

முல்: புதுத்திருடன் எவனாவது புறப்பட்டு விட்டானா?

கு: இல்லை. முன்னே தப்பியோடிய ரௌடி வீரப்பன் தான்.....

["வீரப்பன்" என்ற சொல்லைக் கேட்டதும் முல்லையின் முகம் கலவரப்படுகிறது.]

இப்போது நடக்கிற கொள்ளை, குத்து வெட்டிலெல்லாம் அவனுக்குச் சம்பந்தம் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

முல்: அப்படியே போரப் போக்கில் அழகப்பனை அதட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் போங்கள். வேளா வேளைக்குச் சாப்பிடவரமாட்டேன் என்கிறான். பொழுதுக்கும் விளையாட்டுத்தான்.....

[குமார் சொல்ல, முல்லை சிந்தித்தபடி உள்ளே திரும்புகிறாள்.]

குறிப்பு:—வீரப்பன், தமிழானந்தர் கொடுத்துதவிய முதலைக் கொண்டு தொழில் செய்து நல்ல நாயகம் என்ற மாறு பெயரில் பெரிய வணிகனாக வளர்ந்து விட்டான்.]

காட்சி 31.

இடம்: படக்கம்பெனி.

மாந்தர்: படமுதலாளி, நல்லநாயகம்.

நிலைமை: படமுதலாளி நல்லநாயகத்தைப் பாராட்டுகிறார்.

முதலாளி: நல்லநாயகம்! வியாபாரம் பேசுவதில் உங்களுக்கு நல்ல சாமர்த்தியம் இருக்கிறது.

நல்லநாயகம்: சாமர்த்தியத்தைவிடச் சந்தர்ப்பந்தான் தூக்கிவிடுகிறது.

முத: சாமர்த்தியமிருந்தால் சந்தர்ப்பத்தையும் உண்டாக்கிக் கொள்ளலாமே!.....உங்கள் தொழிலுக்கு அதிக முதல் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

நல்: அதைவிட நாணயம் தேவை.

முத: உங்கள் கணக்குப் புத்தகத்தில் நஷ்டப் புள்ளியே போடவேண்டியிருக்காது.

நல்: ஆனால், சர்க்கார் வரிக்கணக்கு கூடிக்கொண்டே இருக்கும். வருமானத்தால் ஏற்படும் பூரிப்பும் வரிப்பளுவால் ஏற்படும் புழுக்கத்தைவிடக் குறைவுதான்.

முத: உண்மை. லாபத்திற்குச் சர்க்கார் பங்காளியாக மூளைத்திருக்கிறது.

நல்: தொழிலேயே சர்க்கார் நடத்திவிட்டால் இந்தத் தொல்லைகளுக்கு இடமில்லை.....ம்.....எனக்கு நேரமாகிறது. என்னை அனுப்புங்கள்.

முத: ம்.....இந்தாருங்கள் ரூபாய் பத்தாயிரத்திற்குச் செக்.....

[என செக் ஒன்றை நல்லநாயகத்திடம் படமுதலாளி கொடுக்க, நல்லநாயகம் அதனை வாங்கிக்கொண்டே]

நல்: பாக்கி.....

முத: இந்த வியாபாரத்தில் எனக்கு அதிக லாபமில்லை. அதனால் உங்கள் கமிஷனிலும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

காட்சி 32.

இடம்: நல்லநாயகத்தின் அலுவலகம்.

மாந்தர்: வியாபாரி, இளைஞன், டாக்டர், நல்லநாயகம்.

நிலைமை: நல்லநாயகத்தை எதிர்ப்பார்த்தபடி வியாபாரியும், இளைஞனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

வியாபாரி: தம்பி! என்ன காரியமாய் வந்தீங்க.

இளைஞன்: ஐயாவினுடைய ஆலையில் வேலை காலியென்று கேள்வி. அதற்காகப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்..... தாங்கள்.....

வியா: ஐயாவிடமிருந்து நான் படவிநியோக உரிமை வாங்கி இருக்கிறேன். அது சம்பந்தமாகப் பேச வேண்டியிருக்குது.

[டாக்டர் வருகிறார்.]

இனி : இதோ..... டாக்டர் சார் வருகிறாரே. (டாக்டரைப் பார்த்து) ஏன், சார்! இங்கே யாருக்காவது உடம்புக்கு.....?

டாக்டர் : ஒன்றுமில்லை. பயப்படாதீர்கள். நம்ம ஊர் ஆஸ்பத்திரி சம்பந்தமாக வரச்சொன்னார்கள். வந்திருக்கிறேன்.

வியா : நம்ம ஆஸ்பத்திரிக்கு என்னுங்க ?

டாக் : ரொம்ப சின்னது என்பதற்காக பல கடுமையான கேசுகளுக்கு சர்க்கார் மருந்து சப்ளை செய்வதில்லை. ஐயா, அதைக் கேள்விப்பட்டு தன் செலவில் மருந்துகளெல்லாம் வரவழைத்துத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

[நல்லநாயகம் அங்கு வருகிறார். அனைவரும் மரியாதை செய்கின்றனர். நல்லநாயகம் அவர்களிடம் அன்பாகப் பேசுகிறார்.]

நல் : உட்காருங்கள்! உட்காருங்கள்!! ரொம்ப நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கு.

வியா : பரவாயில்லை. இப்போதுதான் வந்தோம்.

நல் : (டாக்டரைப் பார்த்து) டாக்டர் சார்! உங்க விஷயமாக மானேஜரிடம் சொல்லியிருக்கிறேன். போய்ப் பாருங்கள்.....

டாக் : மருந்து விபரங்களும், அதன் விலாசங்களும் கொண்டு வந்திருக்கிறேன்.

நல் : நல்லது. அந்த விபரங்களை மானேஜரிடம் கொடுங்கள். உடனே கவனிப்பார்.

டாக் : தன்றி. வருகிறேன்.

நல் : (இளைஞனைப் பார்த்து) தம்பிதானே, வேலைக்கு மனுப் போட்டிருப்பது?

இள : ஆமாம். சிபார்சு கடிதமும் வாங்கி வந்திருக்கிறேன்.

[சிபார்சு கடிதத்தைக் கொடுக்கிறான். அவர் அதனை வாங்கிப் படித்தபடி.]

நல் : ஆலைத் தொழிலில் அனுபவமுண்டா?

இள : அதற்காகப் படித்துத் தேறியிருக்கிறேன்.

நல் : சரி. சீக்கிரமாகப் பார்த்து உத்தரவு அனுப்பச் சொல்கிறேன்.....

இள : வணக்கம்.

நல் : (வியாபாரியிடம்) பிள்ளைவாளுக்கு நல்ல மிச்சம் கிடைத்திருக்கும்.

வியா : ஆமாங்க. அந்தப் பழைய புராணப் படங்களை வாங்கி வாங்கி படு பாதாளத்தில் போயிட்டேன். நாத விஜயம் கோவிந்தா, நர்த்தன முரளி கோவிந்தா, ராஜமுக்தி கோவிந்தா, கிருஷ்ண விஜயம் கோவிந்தான்னு ஆயிடிச்சு. நல்ல சமயத்தில் நம்ம படத்தைக் கொடுத்தீங்க. ஏதோ, நானும் மனுஷனு தலைகாட்ட முடிகிறது. அடுத்த பட உரிமையையும் எனக்கேதான் தரவேண்டும். அட்வான்சாக இந்த ஐம்பதாயிரத்தையும் வைத்துக்கொள்ளுங்கள்.

[செக் தருகிறார் வியாபாரி.]

காட்சி 33.

இடம் : ஆலைப் பகுதி,

மாந்தர் : ஆலை மானேஜர், சுந்தரவல்லி.

நிலைமை : மானேஜர் அதிகாரம் புரிதல்.

மானேஜர் : சுந்தரவல்லி ! நீ ஆலைத் தொழிலுக்கு லாயக்கில்லை.

சுந்தரவல்லி : (திடுக்கிட்டு) ஆ ! நான் என்ன செய்தேன் ? என் வேலையில் என்ன குறை ?

மா : உன்னுல் ஆலையின் வேலையே கெடுகிறது.

சுந் : ஐயா ! இந்தக் குற்றச்சாட்டு அடுக்காது. அபாண்டமாகப் பழி சுமத்தாதீர்கள்.

மா : அது என்னவோ ஆலைக் கூலிகள் தங்களது அலுவலைக் கவனிக்க முடியாத அளவுக்கு நீ ஆள் மயக்கியாக இருப்பது ருசுவாகி விட்டது.

சுந் : அழகாக இருப்பது என் குற்றமா ?

மா : அது எனக்குத் தெரியாது. நீ வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கின்றுய்.

சுந் : ஐயோ ! இது அநியாயம். இந்த ஏழையின் வயிற்றில் அடிக்க வேண்டாம். அரை வயிற்றுக் கூலியிலும் மண்ணைப் போடாதீர்கள். (கெஞ்சுகிறுள்)

மா : இந்தக் கூலி உனக்கு ஒரு பிரமாதமா ? ஏன் கெஞ்சுகிறுய்..... உன்னோடு கொஞ்சுவதற்காக எத்தனையோ பயல்கள் காத்திருப்பார்கள்.....

சுந் : ஏனையா, இப்படி நாக்கில் நரம்பின்றிப் பேசுகின் றீர்? பெண்டு பிள்ளைகளோடு நீர் பிறக்கவில்லையா? இந்த ஏழையின் தலையில் கையை வைக்க எத்தனை நாளாய்க் காத்திருந்தாய்? என் கூலிப் பாவத்தைக் கொட்டிக் கொள்ளும் அக்ரமத்தைக் கேட்க நாதி இல்லையா?..... சண்டாளா!

மா : இந்தா பிள்ளை! அதிகமாகப் பேசாதே. எல்லாம் முதலாளி உத்தரவுதான்.

சுந் : (ஆத்திரமும் அழுகையும் மிஞ்ச) முதலாளி உத்தரவா? இரக்கமற்ற அந்தப் படுபாவிக்கு என்னைக் கெடுப்பதால் என்ன லாபம்? அவன் ஏழை கள் உழைப்பில் எஜமானனை இரும்பு நெஞ்சக்காரன் தானே. பெரிய மனிதனாகி விட்டான். இனி பிறர் துன்பம் தெரியவா போகிறது..... பணத்திமிர் பிடித்த பைசாசம். அவன் வாழ்வானா?.....

[வெளியேறுகிறாள்.]

காட்சி 34.

இடம் : வீதி.

மாந்தர் : இரு நண்பர்கள்.

நிலைமை: கையில் மலர்மாலைகளுடன் சிலர் வருகின்றனர். அவர்களைக் கண்ட நண்பர் ஒருவர் அவர்களிடம் கேலி யாகப் பேசுகிறார்.

1-நண்பர் : எந்தத் தெய்வத்திற்கப்பா இன்று திருவிழா? இப்படி மாலையும் கையுமாகப் போகிறீர்கள்.

2-நண் : தெய்வத்தைவிட மேலான தியாகமூர்த்திக்கு மரியாதை செய்யப்போகிறோம்.

1-நண்: யாரப்பா...அந்த மகா பெரிய மனிதன்?

2-நண்: பொறுப்பின்றிப் பேசாதே. வந்து பார். தந்தை நல்லநாயகம் நகர மேயராகி இருக்கிறார்.

1-நண்: தந்தையா? எவனுக்குடா அவன் அப்பன்? எவனே இனந் தெரியாத ஒருவன், ஏதோ, சம்பா தித்து விட்டான். அவன் பணத்தைக் கண்டு பந்தல் போடுகிறீர்கள்.

2-நண்: (சிறிது வெறுப்பாக) அந்த நல்ல மனிதனை உன் நச்சு வாயால் தூற்றுதே. அவர் தனக்கென வாழாத சான்றோன். பொது நலமே அவர் மூச்சு.

1-நண்: புகழே...அவர் குறிக்கோள் என்று சொல்.

2-நண்: நீ தப்புக் கணக்குப் போட்டிருக்கிறாய். அவரு டைய பெருங்குணங்களைப் பேசச் சொற்கள் கிடை யாது. அருந்தொண்டுகளுக்கு அளவே யில்லை, தெரியுமா?

1-நண்: எல்லாம் வேஷம். நல்லவனைப் போல் நடிக் கிறார். திரைக்குப் பின்னால் அவர் செய்யும் அக்ரமங் களை யார் கண்டது? பள்ளிக்கூடம் வைப்பது-பாதை அமைத்துக் கொடுப்பது—ஆஸ்பத்திரிகளை ஏற் படுத்துவது—அனுதைகளை ரட்சிப்பது—அத்தனையும் நாடகம்! அந்தப் போலித்தனங்கள் புரியாமல் புகழ் மாலை சூட்டுகிறீர்கள்.

2-நண்: போதும், உன் விமர்சனம்.

1-நண்: இந்தத் தர்மப் பிரபுக்களைப் பற்றிய அனுபவம் உனக்குப் போதாது. அவர்கள் ஏதோ வாரி வழங்கு வதாய் நினைக்கிறாய். அதனால் அவர்களுக்கு இரட்டை லாபம். ஜனங்களுக்கு சில நன்மைகளை செய்து

விட்டு சர்க்கார் வரிக்குக் கணக்குக் காட்டி விடு கிறார்கள். முதல் லாபம் வரிப் பளுவிலிருந்து விடுதலை. இரண்டாவது உன்னைப்போல ஏமாளிகள் தரும் புகழும் பெருமையும் கிடைக்கிறது. சொல்லவா வேண்டும்...மிகப்பெரிய மனிதர்களாகி விடுகிறார்கள். பதவிகள் அவர்களைத் தேடிவருகின்றன.

2-நண்: பொறுமையின் உருவமென்றால் நீதான், போ...

1-நண்: உண்மை, எப்பொழுதும் கசப்பாகத் தானிருக் கும். வா...வா...அந்த வைபவத்தைக் காண நானும் வருகிறேன்.

[செல்லுகின்றனர்.]

காட்சி 35.

இடம்: விழா மண்டபம்.

மாந்தர்: நல்லநாயகம், நகரப் பிரமுகர்கள், நண்பர்கள், நடனப் பெண்கள், மற்றும் பலர்.

நிலைமை: மேயர் பாராட்டு விழா. நல்லநாயகம் மேயர் பதவிக்குரிய உடைகளும், சின்னங்களும் அணிந்து ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்.

அவருக்கு இரு மருங்கிலும் நகரப் பிரமுகர்கள் நண் பர்கள் அமர்ந்திருக்கின்றனர். தங்கள் அன்பையும், மரியாதையும் தெரிவித்துக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு வரும் நல்ல நாயகத்திற்கு மலர்மாலைகள் அணிவித்து மகிழ்கின்றனர்.

மேயர் நல்ல நாயகத்தின் சொற்பொழிவு

வணக்கம்! பெருமக்களே!

உங்கள் அன்பும் ஆர்வமும் மிகப் பெரிது. எளியவன் மீது பெரிய பொறுப்பை சுமத்தி விட்டீர்கள். ஒருவனுக் கிருக்கிற செல்வாக்கிற்காகவோ மற்ற தகுதிகளுக் காகவோ தலைவனுக்கி வைப்பது தவறென்பது உங்களுக் குப் புரியவில்லை. அந்தத் தலைமைக்கு வேண்டிய தகுதி யிருக்கிறதா? திறமை யிருக்கிறதா? அந்தக் கடமையை ஆற்றும் உள்ளம் இருக்கிறதா? என்பதை நீங்கள் உணர்ந்து செய்யவேண்டும்.

விருந்துகளிலே கலந்து கொள்வது, விழாக்களிலே தலைமை தாங்குவது, கட்டிடங்களைத் திறந்து வைப்பது, கௌன்சில் கூட்டம் நடத்துவது, காகிதக் கட்டுகளில் குமாஸ்தா காட்டும் இடங்களிலே கையெழுத்துப் போடு வது போன்ற நடவடிக்கைகள்தான் உங்கள் கண்ணுக் குத் தெரிகிறது. என்னைப் பதவியில் வைத்துப் பாராட்டு வதாக நினைக்கிறீர்கள். ஆனால், அதிலுள்ள பாரந்தான் எனக்குத் தெரிகிறது. ஒரு தந்தையின் பொறுப்பு அவன் குடும்பத்தோடு நிற்கிறது. குடும்பத்தில் வாழ்வும் வளமும் மகிழ்ச்சியும் நிலவ அவன் படவேண்டிய பாடுகளை எண் ணிப் பாருங்கள். ஒரு நகரத் தந்தை யென்றால் எத்தனை ஆயிரம் குடும்பங்களின் வாழ்வுக்கு, உத்திரவாதியாக இருக்கவேண்டும்! சாலை யோரங்களில் பொங்கித் தின் னும் தரித்திரக்குடும்பங்கள்; படிக்குப்படி பசி பசியென அடித்து நிற்கும் பராரிகள்; வேலையில்லை, தொழிலில்லை யென வீதியெல்லாம் சுற்றி வரும் வேதனை உருவங்கள்; வைத்திய வசதியில்லாமல் தீராத பிணிக்கும் ஆறுத புண் ணுக்கும் இருப்பிடமான நடைப்பிணங்கள், இருள் சூழ்ந்த குடும்பங்கள், சூதும் சூழ்ச்சியும், போட்டியும் பொறுமையும் நெளியும் சூழ்நிலைகள் ஆகியவற்றை எவ்வாறு சமாளிப்பேன்! ஆண்டவனைப் போல் கல்லாகச்

சமைந்திருந்தால் இதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தில்லை! நமக்குக் கண்ணிருக்கிற படியால் இந்தக் கொடுமைகள் தெரிகின்றன. இதயம் இருக்கிறபடியால் எண்ண வேண்டியிருக்கிறது. உங்களுடைய ஒத்துழைப்பை நம்பித் தான் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்கிறேன். இனி என் நினைவையும் நேரத்தையும் இந்நகரத்தின் வளர்ச்சிக் காக ஈடுபடுத்துகிறேன். வணக்கம்.

அனைவரும்: நகரத் தந்தை வாழ்க!...நல்ல நாயகம் வாழ்க!!

[மகிழ்ச்சியுடன் ஆரவாரிக்கின்றனர். ஆரவாரத்திற்கிடையே நடனம் ஆரம்பிக்கிறது.]

காட்சி 36.

இடம்: தெருக்கோடி.

மாந்தர்: சுந்தரவல்லி, காமுகன், குமார், மேயர்.

நிலைமை: விபச்சாரப் பாதையில் தன் ஈனவாழ்வை எண்ணி ஏங்கிநிற்கிறாள்.

சுந்தரவல்லி: இதுவா, என் தலை எழுத்து. இந்தப் பாழும் வயிற்றிற்காக தினம் தினம் பாவத்தை மூட்டை கட்டவேண்டியிருக்கு. இந்த ஈனப்பிழைப்பிலிருந்து எனக்கு விடுதலை இல்லையா? ஐயோ! மகளே, உன் கதி எப்படி யாகுமோ? இவ்வளவு பாடும் உனக்குத் தான்...

[அதுசமயம் காமுகன் ஒருவன் அவ் வழியாக வருகிறான். அவன் சுந்தர வல்லியைக் காமக் கண்ணோடு பார்த்து, கண் ஜாடை காட்டி விட்டுப் போகிறான். சுந்தரவல்லி பின் தொடர்கிறாள். அது

போது அங்கு வந்த குமார் சுந்தர வல்லியை அதிகாரக் குரலில் மிரட்டு கிறார்.]

குமார்: யாரது...? இந்நேரத்தில் எங்கே போகிறாய்?

சுந்: [பயந்தபடி] இல்லை...சும்மா...

கு: எவனை கண்ஜாடை காட்டி விட்டுப் போனான்.

சுந்: ஊம்...ஹா...எனக்கு ஒன்றும் தெரியாது.

கு: விபசாரம் மலிந்து வீதிக்கு வந்துவிட்டதா? கழுதை! நட ஸ்டேஷனுக்கு...(மிரட்டல்.)

[அப்பொழுது அவ்வழியே மேயர் வருகிறார். குமார் மேயருக்கு மரியாதை செய்கிறான்.]

நல்லநாயகம்: யாரிந்தப் பெண்?

கு: எவளோ விலைமகள்...காலி ஒருவனைப் பின்தொடர்ந் தாள்.

சுந்: (கூச்சலிடுகின்றாள்.) அக்கிரமம்.....அக்கிரமம்... சும்மா நின்ற என்னைப் பிடித்து மிரட்டுகிறார்.

நல்: அவளை என்ன செய்யப்போகின்றீர்?

கு: கைது செய்திருக்கின்றேன்.....(சுந்தரவல்லியைப் பார்த்து) ...ம்.....நட. (நல்லநாயகத்திடம்)..... வணக்கம்.....வருகிறேன்.

சுந்: ஐயோ, வேண்டாம்.....வேண்டாம். என்னை விடுங் கள். நான் அங்கு வரமாட்டேன். உங்களுக்கு ரொம் பப் புண்ணியம்.

[என்று அலறிக் கெஞ்சுகிறாள். குமார் அவளைத் தள்ளிக்கொண்டு]

கு: போக்கிரிக் கழுதை!

நல்: இன்ஸ்பெக்டர் சார், பொறுங்கள்.

கு: நகரத் தந்தையே! சட்டப்படி கைது செய்யப்பட வேண்டியவள் இவள்.....இவளைச் சும்மா விட்டால் ஊரையே மேய்ந்துவிடுவாள்.....

[சுந்தரவல்லி, நல்லநாயகம் நகர மேயர் எனத் தெரிந்ததும் ஆத்திரப்படுகிறாள்.]

சுந்: (குரோதத்துடன்) என்ன.....நகரத்தந்தையா?... இவனு அந்த நாசகாரன்.....பணப்பேயே! உன்னால்தான் இந்த நிலைமைக்கு வந்தேன். நான் வேலையில் இருந்தால் உன் கொள்ளையில் குறைந்தா போகும்? ஏழைகளின் வயிற்றில் அடிக்கிற உனக்கா வள்ளல் என்ற பட்டம்.....அட...தூ.....!

[நல்லநாயகத்தின் மீது துப்புகிறாள். குமார் சுந்தரவல்லியை அறைகிறான். நல்லநாயகம் எச்சிலைத் துடைத்துக் கொண்டே குமாரைத் தடுக்கிறார்.]

நல்: அடிக்காதீர். பெண், பாவம்!

கு: இந்தக் காமப் பேய்க்கா கருணை காட்டுகிறீர்கள்? மரியாதையின்றி தங்களையே அவமதித்துவிட்டாள். மானங்கெட்ட மிருகம்.

நல்: (அமைதியாக) பொறுத்துக்கொள்வோம்.

சுந்: (ஆத்திரமாக) அட பாவி, என்னை ஏன் வேலையி லிருந்து விரட்டச் சொன்னாய்? வயிற்றுக் கொடுமை யால் இந்த வழிக்கு வந்தேன்.

கு: பார்த்தீர்களா, இவளுடைய பட்டித்தனத்தை.

நல்: ஆத்திரத்தில் உளறுகிறாள். மன்னித்துவிடுங்கள்.

கு: வருந்துகிறேன். எனது அதிகாரத்தில் தாங்கள் தலை யிடுவது சரியல்ல.

நல்: (அதிகாரக் குரலில்) நல்லநாயகம் தலையிடவில்லை. நகர மேயர் சொல்லுகிறார். அவளை விட்டுவிடுங்கள்.

கு: (உரத்து) என் கடமை என்ன ஆவது?

நல்: வழக்கைப் பதிவு செய்யுங்கள். அவளுக்கு ஜாமீன் நான்!

கு: (அருவருப்புடன்) சரி, நான் வருகிறேன்.

நல்: குமார்! இந்நேரத்திற்கு எங்கே புறப்பட்டீர்?

கு: தப்பியோடிய பழைய கைதி வீரப்பன் வெளியில் தலைகாட்டுவதாகத் தெரிகிறது. அவனைத் தேடித் தான்.....

["வீரப்பன்" என்ற சொல்லைக் கேட் டதும் நல்லநாயகத்தின் முகம் மாறுத லடைகிறது. குமார் கவனிக்கிறான். பழைய முகம்போல் தோன்றுகிறது. பழைய நினைவுகளும் வருகின்றன. சந் தேகப்படுகிறான். நல்லநாயகம் கலவரப் படுகிறார். அவரை ஆத்திரத்துடன் பார்த்துவிட்டு, 'ஊம்' என்று உறுமிக்

கொண்டே செல்கிறான். நல்லநாயகம் அவன் செல்லும் திசையைப் பார்த்த வண்ணம் நிற்கிறார். சுந்தரவல்லி அவர் காலில் விழுந்து கதறுகிறாள்.]

சுந் : ஐயா, மன்னித்துவிடுங்கள்.....மன்னித்து விடுங்கள். புத்திகெட்ட பேதை நான்.....என் பிழையை பொறுத்துக்கொள்ளுங்கள். தெரியாமல் பேசிவிட்டேன்.....

நல் : (அன்பாக) பரவாயில்லை. எழுந்திரு. நான் மறந்து விட்டேன்.

சுந் : தருமப் பிரபு, நான் ஒரு பாவி, மகா பாவி.

நல் : வேதனைப்படாதே. உன்னை வேலையினின்று விலக்கிய விபரம் எனக்குத் தெரியாது. விசாரிக்கிறேன். பொறுத்துக்கொள். உனக்கு வேறு ஆதரவு இல்லையா ?

சுந் : (தேம்பி) ஐயோ, அது பெரிய வயிற்றெரிச்சல். தாங்கள்தான் என் தந்தை. என் சோகக் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். கட்டிய கணவன் கம்பி எண்ணுகிறான். காதல் புரிந்தவன் வீதியில் விட்டு விட்டான். நாதியற்ற நான் நாசகாலியானேன். இந்தக் கொள்ளையில் எனக்கொரு பிள்ளையோ பிள்ளை. அவளையாவது ஒழுங்காக வளர்க்கவேணுமென்கிற ஆசை.....அந்தப் பாசந்தான் இன்னும் என்னை உயிரோடு வைத்திருக்கிறது.

நல் : உன் ஆசை நிறைவேறும். அவளை என் வசத்தில் ஒப்புவித்துவிடு.

சுந் : அவள் என்னிடமில்லை. அவள் என்னுடனிருந்தால் என் மாசு அவளுக்கும் படியுமென்று பயந்து சோற்றுக் கடையில் வளர விட்டிருக்கிறேன்.

நல்: அந்த விலாசத்தைச் சொல்.

சுந்: சைவ வைஷ்ணவ சமரச விலாசம். அங்கே என் மகள் படுகிற கொடுமை சகிக்கமுடியாது.

நல்: கவலைப்படாதே அவளைப்பற்றி! நாளைக்கு மீண்டும் நீ ஆலைக்குப் போ. வேலையில் அனுமதித்துவிடுவார்கள்.....

சுந்: முடியாது.....இனி என்னால் வேலை செய்யமுடியாது. நான் ஒரு நடமாடும் பிணம். நான் செய்த தவறுகள் தீராத நோய்களாக என்னைத் தின்று கொண்டிருக்கின்றன. இனி அதிக நாள் நான் வாழமாட்டேன்.

[என வருந்திக் கூறுகின்றாள். நல்ல நாயகம் அவளின் பரிதாப நிலையை எண்ணி இரங்குகிறார்.]

நல்: பாவம். துயரத்தின் சின்னமாக மாறிவிட்டாய்... வா என்னுடன். ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுகிறேன்.

காட்சி 37.

இடம்: போலீஸ் ஆபீஸ்.

மாந்தர்: குமார், மேலதிகாரி.

நிலைமை: குமார் பழைய ரிகார்டுகளையும், கைதிகளின் புகைப்படங்களையும் பார்த்தபடி இருக்கிறார். அதுபோது மேலதிகாரி அங்கு வருகிறார்.

மேலதிகாரி: குமார்! என்ன இன்று ஒரே பரபரப்பாக இருக்கிறீர்?

குமார்: பலநாள் திருடன் புறப்பட்டு விட்டானல்லவா ? அந்த யோசனைதான்.

மே: யாரைச் சொல்லுகிறீர் ?

கு: அவன்தான் தலைமறைவாகத் திரிந்த கேடி வீரப்பன்.

மே: வீரப்பனு !

கு: ஆம் ! ஆள் மாறுட்டம் செய்துகொண்டிருக்கிறான் நகர மேயராக.

மே: மேயர் நல்லநாயகத்தையா சொல்கிறீர் ?

கு: நல்லநாயகம்தான் கைதி வீரப்பன்.

காட்சி 38.

இடம்: நல்லநாயகத்தின் தனி அறை.

மாந்தர்: நல்லநாயகம், குமார்.

நிலைமை: நல்லநாயகம் மனக்குழப்பத்துடன் தனிமையில் உலவுகிறார்.

நல்லநாயகம்: நரிப்பயல் ! அவன் பார்த்த பார்வை நிச்சயம் புரிந்துகொண்டிருப்பான்...அவன் உறுமலுக்கு அர்த்தம் அதுதான்...ம்.....மீண்டும் சோதனையா...?

[தன் படுக்கையின் கீழிருந்த ரகசிய பெட்டியைத் திறந்து, அதில் வைக்கப் பட்டிருந்த பழைய வீரப்பனாகத் திரிந்த போது அணிந்திருந்த மாறுவேட உடைகளை எடுத்துப் பார்க்கிறார். அவர் முகத்தில் பலவித சிந்தனை ரேகைகள் படர்

கின்றன. உடனே ஒரு பையில் அவ் வுடைகளைத் திணித்துக்கொண்டு, தன் இரும்புப் பெட்டியைத் திறந்து நோட்டுக் கத்தைகளை எடுத்துக்கொள்கிறார். அது போது குமார் வந்து வெளிக்கதவுகளைத் தட்டுகிறான். நல்லநாயகம் திடுக்கிடுகின் றார்.]

குமார்: ஐயா! குமார் வந்திருக்கின்றேன்.

நல்: யாரது குமாரா!

[கதவைத்திறக்கிறார். குமார் மரியாதை செய்கிறான்.]

கு: ஆம்! நான்தான். தங்கள் மன்னிப்பை நாடிவந்திருக் கிறேன்.

நல்: ஏன்?

கு; தங்கள் பெருமையைக் குலைத்துவிட்டேன் வீண் புகார் செய்து.

நல்: உன் அதிகாரத்தில் தலையிட்டேன் என்றுதானே?

கு: இல்லை, தாங்கள்தான் கேடி வீரப்பனென்று கைதி செய்ய உத்தரவு கேட்டேன்.

நல்: (திகைப்புடன்) என்ன! பிறகு.....?

கு: என் குற்றச்சாட்டுப் பொய்யாகிவிட்டது.

நல்: அப்படியென்றால்?

கு: வீரப்பன் பிடிபட்டு மூன்று நாளாகிறது.

நல்: உண்மையாகவா? வீரப்பனை பிடிபட்டு இருக்கிறான்?

கு: ஆம். நானே விசாரணை. நான் தங்கள் பெரிய மனதைப் புண்ணாக்கிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்.

நல்: (பெருமூச்சுடன்) குமார் வருந்தாதே. உன் கடமையைச் செய்ய முயற்சித்தாய்-நானே விசாரணை?

கு: ஆம், நான்கூட ஒரு சாட்சி.

[குமார் வெளியேறுகிறான். நல்லநாயகம் கதவை மூடிவிட்டு மீண்டும் உலாவுகிறார். முகத்தில் வியர்த்திருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு பெரும் ஆபத்திலிருந்து தப்பினவரைப்போல தனக்குள் பேசிக்கொள்கிறார்.]

நல்: அப்பாடா, தப்பினேன். மீண்டும் கூண்டில் அடைபடவேண்டுமோ என்ற குமுறல் அடங்கிற்று! ..... ம்.....குமாரின் கழுகுப் பார்வை பொய்த்துவிட்டது.....(சிரிப்பு)

[திரும்புகிறார். புத்தர் சிலை தென்படுகிறது. திடுக்கிட்டு நிற்கிறார். பழைய நினைவுகள் தோன்றுகின்றன. தமிழானந்தரின் முகம், குரல் மனத்திரையில் நிழலாடுகின்றன.]

தமி: வீரப்பா! நல்லவனாகிவிட்டாய். நல்லவர்களுக்கு நாயகமாகிவிட்டாய். புத்தரின் புன்னகையைப் பார். புனிதனின் தியாகத்தை மனதில் வை.

காட்சி 39.

இடம்: நீதிமன்றம்.

மாந்தர்: நீதிபதி, சர்க்கார் வக்கீல், ஜூரிகள், குமார், புதுக்கைதி, சாட்சிக் கைதிகள், நல்லநாயகம், மற்றும் நீதிமன்றத்து வேலையாட்கள்.

நிலைமை: புதுக்கைதி கைதிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறான். அவனது உருவத்தோற்றம் சிறையிலிருந்து தப்பியோடிய வீரப்பனை ஒத்திருக்கிறது. விசாரணை நடைபெறுகிறது.

சர்க்கார் வக்கீல்: கன்ம துரையவர்களே! இவன்தான் கேடி வீரப்பன். இவன் ஒரு பயங்கர மனிதன். பன்னிரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனை பெற்றவன். இடையில் சிறையிலிருந்து தப்பியோடிய பிறகு பல வருஷங்களாக போலீசார் கண்ணில் பொடியைத் தூவிவிட்டு தலை மறைவாகத் திரிந்து வருகிறான்.....

புதுக் கைதி: இல்லை..... இல்லை..... நான் திருடனல்ல. சிறை தெரியாது. கோர்ட்டுத் தெரியாது. ஐயையோ! இதுதான் முதல் தடவை. என்னை அநியாயமாய் இழுத்து வந்திருக்கிறார்கள்.....

நீதிபதி: கேட்கும்போது சொல்.

ச-வக்: இந்த இடைக்காலத்தில் நடந்திருக்கிற கொள்ளை, கொலை முதலிய பல வழக்குகளில் இவனுக்குச் சம்பந்தம் உண்டெனத் தெரிகிறது.

நீதி: வீரப்பா! நீ என்ன சொல்லுகிறாய்?

புதுக் கைதி: ஐயா! நான் வீரப்பனல்ல. சத்தியமாகச் சொல்லுகிறேன். என் பெயர் முனியன். நான் கேடி

யல்ல. ஏழை. தோட்டக்கூலி. என்னை விட்டுவிடுங்கள். ஐயா, பெரிய மனது பண்ணி, என்னை விட்டு விடுங்கள்.....

ச-வக்: தேங்காயை மட்டையோடு தின்னப் பார்க்கிறான். இவன்தான் அந்தப் பக்காத் திருடன். பெயரை மாற்றிக்கொண்டால் சர்க்காரையும், சட்டத்தையும் ஏய்த்து விடலாமென்று எண்ணிவிட்டான். பாருங்கள் இந்தப் படத்தை. அவன் அங்க அடையாளங்கள்கூட அப்படியே தெரிகின்றன.

[புகைப் படத்தைச் சர்க்கார் வக்கீல் நீதிபதியிடம்கொடுக்கிறார்.]

புதுக் கைதி: பொய்..... பொய்..... அவ்வளவும் சுத்தப் பொய். இந்தக் கட்டுக் கதையை நம்பாதீர்கள். நான் நாதியற்றவன். ஏழைப் பாட்டாளி. என்னைக் கெடுத்து விடாதீர்கள். சிறைத்துக் கொள்ளக்கூடக் காசில்லை. தாடி வளர்ந்திருக்கிறது. அதனால் நீங்கள் தேடும் ஆளாகி விடமாட்டேன்.

ச-வக்: நீதிபதியவர்களே! அவன் பேசுவதெல்லாம் பசப்பு மொழிகள். ஒன்றும் தெரியாதவனைப்போல் நடிக்கிறான். அவன் பலே எத்தன். சர்க்கார் தரப்பில் சாட்சிகள் தயாராய் இருக்கின்றனர்.

[நீதிபதி, சாட்சிப்பட்டியலை எடுத்து அழைக்கிறார்.]

நீதி: குமார்.

டபோதார்: குமார்... குமார்... குமார்...

குமார்: (வந்து) வணக்கம்.

நீதி: கைதி வீரப்பனைத் தெரியுமா?

கு: நன்றாகத் தெரியும். அவன் அடைக்கப்பட்டிருந்த ஜெயில் அதிகாரியாக இருந்திருக்கிறேன்.

நீதி: இதோ கூண்டில் நிற்பவன்தான் அந்த வீரப்பனா?

(குமார் புதுக் கைதியைச் சற்றுக் கூர்ந்து பார்த்து)

கு: அவனைப் போலவேதான் இருக்கிறான்.

நீதி: திட்டமான விடைவேண்டும்.

புதுக் கைதி: (கெஞ்சி) இன்ஸ்பெக்டர் ஐயா, பார்த்துச் சொல்லுங்க..... நன்றாகப் பார்த்துச் சொல்லுங்க. உங்கள் பிள்ளை குட்டிக்கு ரொம்ப தருமம்.

கு: நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. எனக்குச் சிந்திக்க அவகாசம் வேண்டும்.

[நீதிபதியைப் பார்த்துப் புதுக்கைதி அலறுகிறான்.]

புதுக் கைதி: பார்த்தீர்களா சுவாமி..... ஒரு பாவமும் தெரியாத என்னைப் பிடித்து விட்டார்கள். என்னை விட்டு விடுங்கள். நான் வீரப்பனல்ல.....

நீதி: (அதட்டல்) பேசாமலிரு..... சாட்சிக் கைதிகள் வரட்டும்.

[சாட்சிக் கைதிகள் இரண்டுபேர் கொண்டு வரப்படுகின்றனர்.]

நீதி: மன்னரு.....

1-கைதி: ஆஜர்.....

நீதி: மாடச்சாமி.....

2-கைதி: ஆஜர்.....

நீதி : கேட்கும் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்ல வேண்டும். சத்தியமாகப் பேசவேண்டும்.

1, 2, கைதிகள் : உத்தரவு.

நீதி : மன்னரு, அவனை நன்முகப் பார். யார் தெரிகிறதா?

1-கைதி : (புதுக் கைதியைப் பார்த்துவிட்டு) ஆ, வீரப் பன் !..... நீயா? எஜமான் ! இவன் நாலு வருஷம் என் கூடவே இருந்தவனுங்க.

நீதி : மாடச்சாமி ! நீ சொல்.

2-கைதி : சத்தியமாகச் சொல்லுகிறேன். நானும் அவனும் ஒரே அறையிலேதான் பூட்டப்பட்டிருந்தோம்.

நீதி : (புதுக் கைதியிடம்) கைதியே! இவைகட்கு என்ன சொல்லுகிறாய்?

புதுக் கைதி : ஐயோ! நான் படிப்பில்லாதவன். சட்டம் தெரியாதவன். சரியாகப் பேசக்கூடத் தெரியாதே. எல்லாம் தெரிந்த நீங்கள் வஞ்சிக்கிறீர்கள். இது நியாயமா? நீதியா? கடவுள்தான் கேட்கவேண்டும். இதெல்லாம் உண்மையல்ல, நாடகம்! நான் நம்ப மாட்டேன். நான் திருடனல்ல. என்னை விட்டு விடுங்கள். (அலறுகிறான்.)

நீதி : ஜூரிகளின் அபிப்பிராய மென்ன?

ஜூரி : நாங்கள் இவனைக் கேடி வீரப்பன் என்றே தீர்மானிக்கிறோம்.

(நீதிபதி சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கிறார்.)

புதுக் கைதி : (கதறல்) ஐயா..... ஐயா..... என்னைக் காப்பாற்றுங்கள். நான் நிரபராதி... நிரபராதி.

நீதி: சாட்சியங்களையும், ஜூரிகளின் அபிப்பிராயங்களையும் கொண்டு இக் கைதியே தப்பியோடிய வீரப்பனென்று கருதுகிறேன்.....

[அது சமயம் நீதிமன்றத்துக்கு வெளியே சிறிது பரபரப்பு ஏற்படுகிறது. நல்லநாயகம் வேகமாக நீதிமன்றத்துக்குள் நுழைகிறார்.]

நல்லநாயகம்: இல்லை.....! இல்லை.....! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!! தீர்ப்புக் கூறுவதை நிறுத்துங்கள்.

[அனைவரும் திகைக்கின்றனர்.]

ச-வக்: கனம் மேயர் அவர்களா, இப்படி வந்து அமருங்கள்.

நல்: நான் அமர வரவில்லை. அந்த நிரபராதியைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்.

[புதுக் கைதியைச் சுட்டிக் காட்டிப் படபடப்புடன் பேசுகிறார்.]

நீதி: என்ன !..... அவன் வீரப்பனல்லவா ?

நல்: அல்ல, கூண்டிலே நிற்கவேண்டிய குற்றவாளி நான். எனக்குப் பதில் இந்த ஏழையைத் தண்டித்து விடாதீர்கள்.

ச-வக்: மேயர் நல்லநாயகமா, இப்படிப் பேசுகிறார்?

நல்: உண்மை பேசுகிறது. பொய்மை உங்கள் கண்ணுக்கு மேயராகத் தெரிகிறது. பெரியதொரு பாவத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த ஏழையைப் பழி வாங்காதீர்கள். அவன் குற்றமற்றவன். அவனை விட்டுவிடுங்கள்.

நீதி : தங்களுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம்?

நல் : தாங்கள் தேடிப் பிடித்திருப்பதாக நினைக்கும் கேடி நான்தான். உண்மையான குற்றவாளி நான்தான். ஊரை ஏய்த்துக்கொண்டு இருந்த போலி மனிதன் நான்தான். போலீசை ஏமாற்றி வாழ்ந்த எத்தன் நான்தான்.

ச-வக் : கனம் நீதிபதியவர்களே ! எங்கள் நகரத் தந்தை தவறுடையவராக இருக்க முடியாது. மேயருக்கு ஏதோ புத்தி அவர் வசத்தில் இல்லைபோலிருக்கிறது.

நல் : வழக்கறிஞரே ! என் புத்தி தெளிவாகத்தானிருக்கிறது. பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மாற்றியமைக்கும் உங்கள் மாயாஜாலத்தை என்னிடம் காட்டாதீர்கள். சத்தியத்தை மறைத்து நீதியை வழிமறித்து அழைத்துச் செல்லும் உங்கள் சொல் வலையில் நான் சிக்கிவிட மாட்டேன்.

நீதி : தயவு செய்து கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

நல் : எப்படி இருக்க முடியும் இந்த ஏழையின் வயிறு எரிந்து கொண்டிருக்கும்போது.....? (குமாரிடம் நடந்து) குமார் ! நீ சொல். என்னைத் தெரியவில்லையா உனக்கு? சிறையில் என்னைச் சவுக்கால் அடித்தாயே, நினைவில்லையா உனக்கு? கைதி ஒருவனைக் கல்லிடுக்கிலிருந்து காப்பாற்றினேனே, மறந்து விட்டாயா ?

குமார் : (நல்லநாயகத்தின் முகத்தை உன்னிப்பாகப் பார்த்து) ஆம்.....

நல் : (சாட்சிக் கைதிகளைப் பார்த்து) ஏ, மன்னரு ! என்னைப் பார். எனக்கும் அவனுக்கும் வித்தியாசம் தெரியவில்லையா உனக்கு? சொல். ஒருநாள் உனக்கு என் கஞ்சியையும், கீரையையும் கொடுத்தேனே, அதை மறந்து விட்டாயா ?

1-கைதி : ஆம். தாங்கள்தான்.

நல் : மாடச்சாமி! நீ தெம்மாங்கு பாடுவாயே, அது இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறதடா. உன்னை வார்டன் அடித்தபோது நான் தடுக்கவில்லையா? ஏன் அந்த நிரபராதியைத் தவருகக் காட்டினாய்?

2-கைதி : அண்ணு! நீங்கள்தான் என் அண்ணன் வீரப்பன்.

நல் : (நீதிபதியைப் பார்த்து) நீதிபதியவர்களே! பார்த்தீர்களா! சாட்சியங்கள் எனக்குக் கிடைத்துவிட்டன. தண்டிக்கப்படவேண்டியவன் நான்தான். முதலில் அவனை விடுதலை செய்யுங்கள்.

ச-வக் : நகர மேயரைத் தண்டிக்கச் சட்டமில்லை.

நல் : சத்தியமாகச் சொல்லுகிறேன், என் மனச்சான்று பேசுகிறது. அதைக் கொல்லாதீர்கள். நீதிக்காகப் போராடுகிறேன். அதனை அழிக்காதீர்கள். அந்தக் காலத்தில் வறுமையும், சூழ்நிலையும் என்னைத் திருடனுக்கின. சட்டம் பழி வாங்கிற்று. கைதியானேன். சிறைக்கொடுமை என்னை நசுக்கிற்று. இதற்கிடையிலே குடும்பப் பாசம் வேறு. வயதான ஒரு தாயை, வாழப்போதிய வயதில்லாத இளந்தங்கையைக் காப்பாற்ற வேண்டுமென்ற கவலை என்னைத் தப்பியோடத் தூண்டிற்று. சர்க்காரை ஏமாற்றினேன். சட்டத்தை மீறினேன். போதுமிந்த வாழ்வு. நீதி என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. மீண்டும் நான் பொய்யனுகமாட்டேன். என்னைக் கைதி செய்யுங்கள்.....

[நீதிபதி வழக்கின் போக்கைக் கண்டு ஆச்சரியப்படுகிறார். நல்லநாயகத்தைப் புதுக் கைதி நன்றியுடன் பார்க்கிறான்.

குமார் பழிவாங்கும் கண்களுடன் நல்ல நாயகத்தைப் பார்க்கிறான். இளநகையுடன் நல்லநாயகம் நீதிமன்றத்தை விட்டு வெளியேறுகிறார். நீதிமன்றம் கலைகிறது.]

நீதி: இந்த வழக்கு விசித்திரமாகிவிட்டது. வீரப்பன் என்ற பெயரில் சிறுத்தப்பட்டிருக்கும் முனியனை விடுதலை செய்கிறேன்.....நல்லநாயகம் என வழங்கும் "வீரப்பன்" மீது வழக்குத் தொடரப் போலீசாருக்கு யோசனை கூறுகிறேன்.

காட்சி 40.

இடம்: மருத்துவ மனை.

மாந்தர்: சுந்தரவல்லி, நல்லநாயகம், குமார், போலீசார்.

நிலைமை: சுந்தரவல்லி மரணப்படுக்கையில் மகள் ஆனந்தியின் சினைவால் தலையணையை அணைத்துக்கொண்டு புலம்பிக்கொண்டிருக்கிறாள் தனிமையில்.

சுந்தரவல்லி: ஆ! என் கண்மணி ஆனந்தி..ஒரே ஒரு முத்தம் தரமாட்டாயா? கண்ணல்ல, என்னை மறந்துவிட்டாயா? பச்சைக் கிளியே! உனக்குப் பட்டுச்சட்டை வாங்கித் தருகிறேன். பொம்மை வேண்டுமா? எங்கே, ஒரே ஒரு பாட்டுச் சொல். கண்ணே! பாடிக்காட்டமாட்டாயா?

[சுந்தரவல்லியின் புலம்பலைக் கேட்டவண்ணம் நல்லநாயகம் உள்ளே நுழைகிறார்.]

நல்லநாயகம்: சுந்தரவல்லி! சும்மா பிதற்றிக்கொண்டே இருக்காதே. இதோ, என்னைப் பார்.

சுந் : மேயரா ! தந்தையே ! என் செல்வம் எங்கே ? அழைத்து வந்துவிட்டீர்களா ? ஆனந்தி.....ஆனந்தி!!

நல் : அம்மா ! புலம்பாதே. உன் மகள் இதோ வந்துவிடுவாள்.

சுந் : ஐயோ, என் செல்வத்துக்குப் பணம் அனுப்பி மூன்று மாதமாச்சே. என் தங்கத்திற்கு வயிறுரச் சோறு போடுவார்களா ? அங்கே என் மகள் என்ன பாடுபடுகிறாளோ ?

நல் : கவலைப்படாதே. உன் உடம்பு சரியானதும் நீயே வளர்க்கலாம்.

சுந் : தந்தையே ! அதற்கு நான் கொடுத்து வைக்காதவள். அவளை ஒரு முறை பார்த்தாலே போதும். அந்த ஆசையில்தான் என்உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

நல் : அமைதியாக இரு. இதோ போய் அழைத்து வருகிறேன்.

[நல்லநாயகம் வெளியே செல்ல முற்படுகிறார். குமார் வாரண்டுடன் உள்ளே வந்துவிடுகிறான். நல்லநாயகம் மலைத்து நிற்கிறார். குமார் அவரை ஏளனமாகப் பார்த்து]

குமார் : மேயர்வாள் ! ரொம்ப அவசரமோ ?

[குமாரைக் கண்டதும் சுந்தரவல்லி பயந்து அலறுகிறாள்.]

சுந் : ஹா..... ! இன்ஸ்பெக்டர்.....

[நல்லநாயகம் சுந்தரவல்லியிடம் சென்று அன்புடன்]

நல்: பயப்படாதே, அவர் உனக்காக வரவில்லை.

[குமார், நல்லநாயகத்தைப் பார்த்து அதிகாரக் குரலில்]

கு: ம்.....சீக்கிரம். நேரத்தைப் போக்காதே. உன்னை எங்கெல்லாம் தேடுவது?

நல்: குமார்! உன் நோக்கம் புரிகிறது. உடனே வர வேண்டுமா?

கு: (கேலியாக) ஏன்? விருதுகளோடு புறப்பட அவகாசம் வேண்டுமோ? மேயர் நல்லநாயகத்தை அழைக்க வரவில்லை. கேடி வீரப்பனைப் பிடிக்க வந்திருக்கிறேன். புறப்படு.....

[சுந்தரவல்லி படுக்கையில் கிடந்தபடி குமாரை ஆத்திரத்துடன் பார்த்து]

சுந்: யமனே! தந்தை மேயரையா பிடிக்க வந்தாய்?..... ஐயோ!

கு: (வெறுப்புடன்) மேயராம்! திருட்டுப் பயலுக்குத் தந்தை என்ற பட்டம். கைதிகளுக்கெல்லாம் அந்தஸ்தும் அதிகாரமும் வந்தால் ஊர் வாழ்ந்தாற் போலத்தான்.

நல்: (கெஞ்சிய குரலில்) குமார்!

கு: (கோபமாக) என்ன ஆணவம்! இன்னுமா பெயர் சொல்லி அழைக்கிறாய்? வா என்னுடன்.

நல்: ஐயா, ஒரே ஒரு ஏற்பாடு.

கு: அடே, இனி உன் பணிவெல்லாம் பலிக்காது. உன் வேஷம் கலைந்து வெகு நேரமாகிவிட்டது.

சுந்: ஐயோ! அந்தத் தருமப் பிரபுவை விட்டுவிடு. என்னைப் பிடித்துக்கொண்டு போயேன்.

நல்: தயவு செய்யுங்கள். இந்த அபலைக்குத் தந்த கடைசி வாக்கு. அதைமட்டும் நிறைவேற்றிவிடுகிறேன்.

கு: அந்த விலைமகளைப்பற்றி எனக்குக் கவலையில்லை. உன்னை விடமுடியாது. நீ பலே எத்தன்.

நல்: ஒரு மணி நேரம் அவகாசம் போதும். நம்பிக்கையில்லாவிட்டால் நீங்களும் கூடவே இருங்கள்.

கு: கேலியா பேசுகிறாய்? கிழட்டு நரியே, நட.....!

சுந்: தந்தையே போகிறீர்களா? போகிறீர்களா?

[சுந்தரவல்லி அலறுகிறாள். குமார், ஆத்திரமாக அவளை பார்த்து,]

கு: சீ, கழுதை! சும்மா கிட.

நல்: (சிறிது கோபமாக) சாகும் பிணத்திடமா சிற்றம்.....?

கு: டே, இனி, மரியாதை இல்லை.....கல்தா.....!

[நல்லநாயகத்தின் பிடரியில் கையைப் போடுகிறான். குமார் நல்லநாயகம் சாதுரியமாக அவன் கையைத் தட்டிக்கொண்டே, அவனுடைய இடுப்பில் செருகி வைத்திருந்த ரிவால்வாரைச்சட்டென்று எடுத்து, அவனுக்கு நேராகப் பிடித்துவிடுகிறார்.]

நல்: குமார்! நில். நெருங்காதே.

[குமார் திடுக்கிட்டு பயந்து பின்வாங்கி நிற்கிறான். நல்லநாயகம் சுந்தரவல்லியைப் பார்த்து,]

நல்: சுந்தரவல்லி! கவலைப்படாதே. உன் மகள் காப்பாற்றப்படுவாள்.....(குமாரிடம்) இன்ஸ்பெக்டர்! அப்படியே நிற்கவேண்டும். உன் வாய் அசைந்தால் இது பேசும்.....

[என ரிவால்வாரை ஆட்டுகிறார். அங்கிருந்து தந்திரமாக பின்வாங்கி வெளியே ஓடுகிறார். போலீசார் நல்லநாயகத்தைத் தொடர்கின்றனர்.]

காட்சி 41.

இடம்: சாப்பாட்டுக் கடை.

மாந்தர்: நல்லநாயகம், ரௌடி ரெங்கன், போலீசார்.

நிலைமை: நல்லநாயகம் தன்னுடைய தோற்பையுடன் சந்து பொந்துகளில் மறைந்து சாப்பாட்டுக்கடைக்கு வந்து சேருகிறார். ரெங்கனிடம் அவசர அவசரமாகப் பையைக் கொடுக்கிறார்.

ரெங்கன்: (புரியாமல்) என்ன.....?

நல்லநாயகம்: பணப்பை. பத்திரம். அதோ, போலீஸ்...!

[ரெங்கன் பையைக் கையில் வாங்கிக் கொண்டு கடையின் உட்புறம் காட்டுகிறான்.]

ரெங்: ஒளியுங்கள்.....!

[நல்லநாயகம் உள்ளே நுழைந்து கொல்லைப்பக்கமாய் ஓடுகிறார். ரெங்கன் பையைத் திறந்து பார்த்துப் பேராசைப்படுகிறான். அங்கு போலீசாரும் வருகின்றனர்.]

1-போலீஸ்: ரங்கா / இந்தப் பக்கம் ஒராள் வந்தானு ?

ரெங்: ஆமாங்க. அதோ பாருங்க. ஒரு படுபாவி ஓடு கிறான்.

[என்று நல்லநாயகம் ஓடுவதைக் காட்டு கிறான். போலீசார் நல்லநாயகத்தைத் தொடர்கின்றனர்.]

காட்சி 42.

இடம்: ஆற்றுப்பாலம்.

மாந்தர்: நல்லநாயகம், போலீசார்.

நிலைமை: நல்லநாயகத்தை ஓட ஓடத் துரத்துகின்றனர் போலீசார். நல்லநாயகம் ஆற்றுப் பாலத்தின் வழியே ஓடு கிறார். எதிரே ஆயுதந்தாங்கிய போலீஸ் படை வருகிறது. நல்லநாயகம் பாலத்தின் நடுப்புறத்தில் அகப்பட்டுக் கொள்கிறார். இருபுறத்திலும் போலீஸ் படை. வேறு வழி யின்றி ஆற்றில் குதிக்கிறார். ஆற்றிலிருந்த முதலைகள் நீந்துகின்றன. போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய் கின்றனர். முதலை ஒன்று நல்லநாயகத்தைப் பிடித்துவிடு கின்றது. நல்லநாயகம் முதலையுடன் மல்லாடுகின்றார்.

1-போலீஸ்: அதோ / முதலை பிடித்துவிட்டது.

2-போ: ஒழியட்டும்.....

காட்சி 43.

இடம்: குமார் வீடு.

மாந்தர்: குமார், முல்லை.

நிலைமை: குமார் முகத்தில் வெற்றிக் களையுடன், சிரித்த வண்ணம் வீட்டுக்குள் நுழைகிறான்.

முல்லை : (குமாரைப் பார்த்து) என்ன, என்றுமில்லாத வெற்றிக் களை தாண்டவமாடுகிறது !

குமார் : பலநாள் கவலை தீர்ந்துவிட்டது முல்லை.

முல் : என்ன சொல்லுகிறீர்கள் ?

கு : ஒரு பயங்கரக் கேடி பிடிபடாமல் இருந்தானே ?

முல் : யாரவன் ? பிடித்துவிட்டீர்களா ?

கு : வேட்டையாடித் தீர்த்துவிட்டேன். சோதாப்பயல். சூதாக வாழ்ந்துவிட்டான், மேயராக.

முல் : திருடனு மேயராக இருந்தான் ?

கு : ஆம். வீரப்பன் என்ற கேடிதான்.

[வீரப்பன் என்ற சொல்லைக் கேட்ட தும் முல்லை திடுக்கிடுகிறாள்.]

முல் : ஆ, வீரப்பனு !

கு : பயப்படாதே, முதலைக்கு விருந்தாகிவிட்டான்.

[குறிப்பு: வீரப்பன் மீண்டும் வேறு கோலத்தில் வாழ்தல்]

காட்சி 44.

இடம் : சாப்பாட்டுக்கடை.

மாந்தர் : ரௌடி ரெங்கன், ஆனந்தி, வீரப்பன், கடைக்காரி.

நிலைமை : ரெங்கன் பெண் வேடமணிந்து இருக்கிறான். ஆனந்தி மெதுவாகப் பயந்து நடுங்கியபடி வருகிறாள். அவளை ரெங்கன் தூண்புறுத்துகிறான்.

ரெங்கன் : சனியனே ! உன் காது அவிந்துவிட்டதா ? எத்தனை சத்தம் போடுகிறது ?

ஆனந்தி : அம்மா.....கடைக்கு அனுப்பினர்கள்.

ரெ : அதற்கு இவ்வளவு நேரமா.....?

[என்று கூறிக்கொண்டே அவள் முதுகில் ஒரு அறை கொடுக்கிறான். ஆனந்தி அழுகிறாள்.]

ரெ : என்ன, அழுகையா ? கழுத்தை முறிச்சிடுவேன். கொட்டிக்கிறியே நாலாள் பருக்கை. இந்த அடிதாங்க முடியவில்லையா....?

[இன்னொரு அறை கொடுக்கிறான். ஆனந்தி, "அம்மா, அம்மா" என்று தேம்புகிறாள்.]

ரெ : நீ கெட்ட கேட்டிற்கு உனக்கு ஒரு அம்மா...அழுகையை முழுங்கு (என அவளின் காதைத் திருகி) அந்த வாளியை எடு. தண்ணீர் கொண்டுவா போ...

[ஆனந்தி அழுதுகொண்டே வாளியை எடுத்துக்கொண்டு போகிறாள். அது சமயம் வீரப்பன் அங்கு வருகிறான்.]

வீர : ரங்கா.....!

ரெ : (சமாளித்துக்கொண்டு) யாரப்பா நீ ? ரொம்ப அக்கறையா தேடுறே ?

வீர : அம்மா ! அவரிடத்தில் ஒரு பை கொடுத்துச் சென்றேன்.

ரெ : நீயா ? இங்கேயா ?

வீர : ஆமாம்.....

ரெ : ஹூம்...ஊம்...இருக்காது. அந்த ஆள் வாங்கி இருக்கமாட்டான்.

கடைக்காரி : (ரெங்கனைப் பார்த்து) கடையைக் கவனிக்காமல் வழியோடு போறவனை இழுத்து வைச்சு பேசிகிட்டு நிற்கிறுரே.....

வீர : (கடைக்காரியிடம்) ரெங்கன் இல்லிங்களா ?

கடை : (வெறுப்பும் கேலியுமாக) ஐயாவுக்கு அவசியம் சொல்லியாகவேண்டும் போலிருக்கு.

வீர : ஏம்மா ! கோவிச்சுக்கிறீங்க ?

கடை : இல்லாவிட்டா, ஒங்கிட்டே கொஞ்சவா ?

ரெ : ஞாபகமறதியா எங்கேயோ கொடுத்துவிட்டு இங்கே வந்து விசாரிக்கிறுன்.

[ரெங்கனின் பேச்சுக்குரல் வீரப்பனுக்குப் புரிந்துவிடுகிறது.]

வீர : (கோபமாக) ரங்கா, என்னடா, தீட்டின மரத்திலேயே கூர் பார்க்கிறே ? அந்தப் பையில் கொஞ்சம் பணமிருக்கிறது என்பதற்காகத்தானே இந்தப் பித்தலாட்டம். உனக்குச் சாமர்த்தியம் போதாதடா இந்த வீரப்பனை ஏமாற்ற. பார், என்னை !

[ரெங்கனின் பெண் வேடத்தைக் கலைத்துவிடுகிறுர். ரெங்கன் வீரப்பன் எனத் தெரிந்து திகைப்பும் வியப்பும் கொள்கிறுன்.]

ரெ : ஆஹா ! அண்ணு ! தாங்களா ?

வீர : ஆம். ரங்கா, நான்தான்.

[இருவரும் தழுவிக்கொள்கிறார்கள். கடைக்காரி இதைக் கண்டதும் வெட்கி உள்ளே போகிறாள்.]

ரெ: தாங்கள்.....

வீர: நானிருக்கட்டும். நீ எப்படி இங்கு வந்து சேர்ந் தாய்?

ரெ: அண்ணே! இந்தக் கடைக்காரியே எனக்குச் சொந் தக்காரியாகிவிட்டாள்.....தாங்கள்.....

வீர: என் கதை ரொம்பப் பெரிது. முதலில் வாயிலிருந்து மீண்டிருக்கிறேன்.

[காயத்தைக் காட்டுகிறார்.]

ரெ: ஐயோ! என்னண்ணே இது?

வீர: இங்கு வேறு யாருமில்லையே?

ரெ: பயப்படாதீர்கள். இங்கு வரக்கூடியதெல்லாம் நம்ம இனம்தான்.

வீர: அதோ பார்!.....

[என தூரத்தில் சுட்டிக்காட்ட, ரெங் கன் பார்த்துவிட்டு, அலட்சியமாக.....]

ரெ: பூ..... போலீஸ். அவர்கள் கை வரிசை இங்கே செல்லாது.

[ஆனந்தி பெரிய வாளியொன்றில் தண்ணீர் மொண்டு, தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வருகிறாள்.]

வீர: (இரக்கத்துடன்) பாவம், இந்தப் பச்சைக் குழந்

தையை இப்படியா வதக்குவது? யாரப்பா, அந்தக் குழந்தை?

ரெ: எவளோ பேர் ஊர் தெரியாதவள் பெற்றெடுத்த சனியன். பூமிக்குப் பாரமா வளருது.

வீர: உனக்கு இதயமிருக்கிறதா? ஏன் இவ்வளவு அருவருப்பு?

ரெ: அந்தக் கட்டையில் போறது ரொம்பப் பொல்லாதது அண்ணே!

வீர: உன்னை விடவா?.....இங்கேதானே 'ஆனந்தி' வளருகிறாள்?

ரெ: அட இந்தப் பிசாசுதான்! இதன் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?

வீர: அவள் அம்மாவைக்கூட எனக்குத் தெரியும்.

ரெ: சொல்லுங்கள். அந்தக் கடன்காரி எங்கே இருக்கிறாள்? அந்தப் புறம்போக்கைத் தேடித் தேடிக் காலோஞ்சு போச்சு.

வீர: ஏனப்பா?

ரெ: இந்தப் பாழாய்ப் போறது தின்னு தீர்த்ததற்குப் பாக்கி வசூலிக்கவேண்டும்.

வீர: வீணாகத் திட்டிக் கொட்டாதே. நான் தருகிறேன் எவ்வளவு?

[தோல் பையைத் திறந்து ரூபாய் நோட்டுக்கத்தைகளை எடுக்கிறார். ரெங்கன் ரூபாயைக் கண்டதும் வாயைப் பிளக்கிறான்.]

ரெ: அண்ணே! ஏது இவ்வளவு? எங்கே தேட்டை போட்டீங்க?

வீர: உஸ்.....

[அவன் காதில் மெதுவாக 'எதையோ' கூறுகிறார். ரெங்கன் வீரப்பனை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்.]

ரெ: ஹா! தாங்களா? அண்ணு! முதலே விழுங்கி விட்டதாகப் பெயர் கட்டிவிட்டாங்களே, பாவிகள்!

வீர: இன்னும் என்னென்ன பாக்கி இருக்கிறதோ?

ரெ: கவலைப்படாதீர்கள். நானிருக்கிறேன். ஒரு கை பார்த்துவிடுவோம்.

வீர: தம்பி! இனி நான் தலைமறைவாகத்தான் வாழ வேண்டும்.

ரெ: நம்ம தொழிலே அதுதானே.

வீர: ஆனந்தியைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது.

ரெ: அந்தச் சனியனை, பெற்றவள் தலையிலே கட்டிவிடுவோம்.

வீர: அட, மடையா, ஆனந்தி யார்? உன் மகளடா சுந்தரவல்லி பெற்ற சொர்ண விக்கிரமடா அவள்.

[ரெங்கன் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைகிறான்.]

ரெ: என் சுந்தரவல்லியா! என் சுந்தரவல்லியா! அவள் இன்னுமா இருக்கிறாள்? புலன் தெரியாமல் போய் விட்டதே! (வருந்துகிறான்.)

வீர: போய்க் கேள், ஆஸ்பத்திரியில்.....அவள் செத்து சில தினங்களாகியிருக்கும்.

ரெ: (கண்ணீர் வடிய) அண்ணு.....!

வீர: இனி வேதனைப்பட்டு என்ன செய்வது? ஆனந்தி இருக்கிறாள். அவள் நலத்தைக் கவனி.....

காட்சி 45.

இடம்: குமார் வீட்டுவாயில்.

மாந்தர்: குமார், தலையாரி, திருடி, அழகப்பன்.

நிலைமை: குமார் வீட்டுவாயிலின் முன் நிற்கிறான். அவனது முகத்தில் படர்ந்துள்ள சுருக்கங்கள் அவனுக்கு வயது முதிர்ச்சியைக் காட்டுகின்றன. அவனுக்கு முன், கையுங்களவுமாகப் பிடிபட்ட திருடியொருத்தி பயந்து நடுங்கி நிற்கிறாள். பக்கத்தில் தலையாரி நிற்கிறான்.

குமார்: (கோபமாக) வரண்டி திருடி வயிறு வளர்ப்பதைவிடச் சாவதுதானே.

தலையாரி: இவளுக்கு இதே தொழிலுங்க.

திருடி: மன்னிச்சுக்கிங்க. ஏழை. தெரியாத்தனமா செய்து விட்டேன்.

தலை: இந்தக் கேஸை விட்டால் மற்றக் களவாணிகளுக்கெல்லாம் துளிர் கண்டு போவுங்க.

திரு: ஐயோ! என் பள்ளன் படுத்துப் பத்து நாளாகிறது. பழங்கஞ்சிக்குக்கூட வழியில்லை. பண்ணையில் படி கேட்டுப் பார்த்தோம். பலனில்லை. அக்கம் பக்கத்தில் அரைப்படி கால் படி வாங்கிப் போட்டேன். அதுவும் தட்டிவிட்டது. அரிசிகஞ்சி வேண்டுமென்று ஆவலாய் கேட்டது. சாவுதோ பிழைக்குதோங்கிற சஞ்சலத்தில் திருடிவிட்டேன்.

கு: ம்.....இல்லாத காரணத்திற்காக எந்த அப்பன் சொத்தில் கையை வைப்பது.....? (தலையாரிடம்) கொண்டு போ கொட்டடிக்கி.....

திரு : சாமி.....சாமி.....இல்லிங்க. என் ஜென்மத்துக் கும் திருடமாட்டேன். மன்னிச்சு விட்டுடுங்க.....

[என அலறுகிறுள். அது சமயம் குமாரின் மகன் அழகப்பன் வருகிறுன். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஊகித் துக்கொள்கிறுன்.]

அழகப்பன் : அப்பா ! வயிற்றுக் கஞ்சிக்கு வழியற்ற அபலையிடமா அதிகாரத்தைக் காட்டுகிறீர்கள் ?

கு : போடா ! வரண்டிக் கழுதைக்கு வக்காலத்துப் பேச வந்துவிட்டான்.

[என கோபத்துடன் கூறுகிறுன். அழ கப்பன் உள்ளே போகிறுன். தலையாரி திருடியை இழுத்துக்கொண்டே செல்லு கிறுன்.]

காட்சி 46.

இடம் : முச்சந்தி.

மாந்தர் : டேப்புக்காரன், பொதுமக்கள், சிறுவர்கள்.

நிலைமை : டேப்புக்காரன் காந்தி சரித்திரச் சிந்து பாடு கிறுன். பொதுமக்கள் அவனைச் சூழ்ந்து நிற்கின்றனர். அங்கே.....ஒரு போலீஸ்காரன் வேகமாக வருகிறுன். பொதுமக்கள் மிரண்டு ஓடுகின்றனர்.

போலீஸ் : ஓடாதீர்கள்..... ஓடாதீர்கள். மூட்டி எலும்பை முறித்து விடுவேன் !

டேப்புக்காரன் : செய்விங்க..... செய்விங்க. அதுக்குப் பயந்துதானே அவுங்களும் ஓடுராங்க.

போலீஸ் : டேய் அதிகப்பிரசங்கி ! நடு வீதியிலே நாலு பேருக்குமேல் கூட்டம் போடலாமாடா ?

டேப்பு : நான் காந்தி கதைதானுங்க படிச்சேன்.

போலீஸ் : ஆமாண்டா ! காந்தி கதைதான்.....அவர் ரொம்ப நல்லவருதான்..... சுயராஜ்யம்கூட வாங்கிக் கொடுத்தாரு..... அதுக்காக சட்டம் இடந்தரலேயடா !

டேப்பு : ஆமாங்க ! சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டின்னு, ஊரிலுள்ளவர் தூக்கத்தையெல்லாம் கெடுத்துகிட்டுப் பத்து பேருக்குமேலே பஜனை பாடிக்கிட்டுப் போறுங்களே அது.....

போலீஸ் : டேய் ! அது பக்தி விஷயண்டா..... பக்தி விஷயம். சும்மாவா போறுங்க..... த்சு..... த்சு..... சுண்டல்... பொங்கல் ! சாமி காரியம்! அதைப்பற்றி நீ பேசாதே.

டேப்பு : ஏங்க..... சாமி விஷயமுன்னு சட்டம் வளைஞ்சு கொடுக்குமோ !

போலீஸ் : (அதட்டி) டேய் ! என் இருபது வருஷ போலீஷ் அனுபவத்திலே யாருமே என்னை எதிர்த்துப் பேசினது இல்லே. இந்தப் போலீஸ் ராஜ் நாடார் வாரார்ன்னு ரோடு அப்படியே சைடு வாங்கும்..... நீ எதிர்த்துப் பேசிட்டே !

டேப்பு : இல்லிங்களே ! சும்மா..... சந்தேகத்துக்காகக் கேட்டேனுங்க..... எஜமான்.

போலீஸ் : சட்டத்தையா சந்தேகிச்சே ?..... என்ன துணிச்சல் ?

டேப்பு : எஜமான் !

போலீஸ் : டேய் பேசாதே ! வாடா என் பின்னால்.....

காட்சி 47.

இடம் : படிப்பறை.

மாந்தர் : அழகப்பன், ஆனந்தி.

நிலைமை : அழகப்பனும், அழகு மங்கை ஆனந்தியும் வெளியிலிருந்து பேசிக்கொண்டே அறைக்குள் நுழைகின்றனர்.

அழகப்பன் : ஆனந்தி ! டேப் பாட்டு பிரசாரத்திற்கு ரொம்பவும் ஏற்றது.

ஆனந்தி : ஆமாம். எளிதில் பாமரர் இதயத்தைத் தொட்டு விடலாம்.

அழ : நாமும் அதைக் கைக்கொண்டாலென்ன ?

ஆன : முயற்சிப்போம். விரைவில் நம் கொள்கைகள் நாடெங்கும் பரவும்.

[இருவரும் தேநீர் அருந்துகின்றனர். அழகப்பனுக்கு வியர்த்து விடுகிறது.]

ஆன : முத்து முத்தாக வியர்த்து விட்டதே. அதைத் துடையுங்கள்.....

(கைக்குட்டையை அழகப்பனிடம் கொடுக்கிறாள்.)

அழ : என்னவோ ! கூலிப்பிணம் வியர்த்த சில துளி கூலைக் கண்டு இளகுகிறாய். இதே நாட்டில் பாமரர் இரத்த வியர்வை சொட்டச் சொட்டப் பாடுபடுகின்றனர். தெரியுமா ?

ஆன : வாழ்வில் ஒதுக்கப்பட்டவர்கள் அரசியற் போர்வையில் பேசும் பேச்சல்லவா இது.....

அழ: அப்படியும் சிலர் இருக்கலாம். ஆனால் உன் காதலன் அந்தப் பட்டியலில் சேர்ந்து விடமாட்டான்.

ஆன: அதற்காக நான் பெருமை யடைகிறேன். ஆனால், லட்சியம் மன உருக்கத்தோடு மட்டும் நின்றுவிடக் கூடாதல்லவா?

அழ: ஆனந்தி! என் லட்சியம் வேறு, நான் வேறு?

ஆன: ஓகோ! நேற்று காதலே உருவமாகப் பேசினீர்கள். இன்று லட்சியத்தோடு இரண்டறக் கலந்து விட்டீர்களே.

அழ: என் காதல், லட்சியத்திற்குத் தடையானதல்ல. உற்ற துணை.

ஆன: அப்படியா! இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாத குற்றத்தை மன்னியுங்கள்.....

[சிறிது நேரம் கண்டமேனிக்குச் சிரித்தபடி கூறுகிறாள்.]

அழ: ஆனந்தி! நாளுக்கு நாள் பெரிய வாயாடியாகி வருகிறாய்.

ஆன: எல்லாம் தங்கள் பழக்கத்தால்தான்.

அழ: போதும் விவாதம். தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

ஆன: வெற்றிக்கு என்ன பரிசாம்.....?

அழ: என்னிலும் இனிய பொருள் வேறு என்ன வேண்டும்?

ஆன: லட்சியம் ஈடேறும்வரை இதயத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அழ : நீயே அதற்கு ஆசிரியையாகப் பொறுப்பேற்றுக் கொள்.....

ஆன : நல்லது மாணக்கரே !

காட்சி 48.

இடம் : ஆனந்தி வீடு.

மாந்தர் : வீரப்பர், ஆனந்தி.

வீரப்பர் : (தனக்குத்தானே) "உலகம் திருந்தவேண்டும். உலகம் திருந்த வேண்டும்" (முணு முணுக்கிறார்.)

ஆனந்தி : (அப்பொழுது அங்கு வந்து) "தாத்தா!"

[வீரப்பன் புன்னகையுடன் அன்பு பொங்க அவளைப் பார்க்கிறார்.]

ஆன : உலகம் திருந்தவேண்டும்..... திருந்த வேண்டுமென்று சொல்லாதீர்கள். உலகத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லுங்கள்.

வீர : (மெதுவாகச் சிரித்துக்கொண்டே) அம்மா.....அது உன் வயதுக்கேற்ற லட்சியம். அதில் நீ வெற்றி காண விரும்புகிறேன்.

ஆன : தாத்தா ! எங்கள் சங்கத்திற்கு ஒருமுறை வந்து பாருங்கள். பிறகு சொல்லுவீர்கள்.

வீர : ஓகோ..... சங்கமே ஆரம்பித்து விட்டீர்களா ?

ஆன : நாளை வாராந்திரக் கூட்டம் நடத்தப் போகிறோம். அதற்குத் தலைவராக யாரை அழைத்திருக்கிறோம் தெரியுமா ?

வீர : என் ஆனந்தியாக இருப்பாள்.

ஆன: இல்லை.

வீர: அவளுடைய ஆருயிர்த் தோழன் அழகப்பனுக இருப்பான்.

ஆன: அதுவுமில்லை. ஆனந்தியின் அன்புத் தாத்தா வுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வீர: எனக்கா?

ஆன: ஆம். எங்கள் சங்கக் காரியதரிசி தங்களை ஏற் பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

வீர: யார் உங்கள் காரியதரிசி? அவரை எனக்குத் தெரியவே தெரியாதே.

ஆன: என்ன தாத்தா, என்னை உங்களுக்குத்தெரியாதா?

வீர: அப்படியா! காரியதரிசியாரே, வணக்கம். இந்தக் கிழவனையா தேர்ந்தெடுத்திருக்கிறீர்?

ஆன: ஆம்! பழுத்த அநுபவசாலி அல்லவா?

காட்சி 49.

இடம்: போலீஸ் ஆபீஸ்.

மாந்தர்: குமார், சி. ஐ. டி.

நிலைமை: குமார் உட்கார்ந்திருக்கிறான். அது சமயம் சி. ஐ. டி. உத்தியோகஸ்தன் ஒருவன் அங்கு வந்து 'ரிப்போர்ட்டை'க் கொடுக்கிறான்.

குமார்: (அதனைப் பார்த்துக்கொண்டே) என்ன சிந்தனை யாளர் சங்கம் கூடுகிறார்களா?

சி. ஐ. டி: ஆம். ரகசிய ஏற்பாடு.

கு: ஒரு வேளை புரட்சிக்கு அடி கோலுவார்களோ?

சி. ஐ. டி: அவர்களுடைய கதைகள், கட்டுரைகள், கவிதைகளிலெல்லாம் அந்த அறிகுறி இருந்து கொண்டுதானிருக்கிறது...

கு: (கோபமாக எழுந்து உலவியபடி) பார்ப்போம். தடைசெய்யப்பட்ட சங்கத்தை நடத்த அவ்வளவு தைரியமா?

காட்சி 50.

இடம்: மலைக்குகை.

மாந்தர்: வீரப்பர், அழகப்பன், ஆனந்தி, ரௌடி ரெங்கன், சிந்தனையாளர் சங்க உறுப்பினர்கள், குமார், போலீஸ் சிப்பாய்கள்.

நிலைமை: சிந்தனையாளர் சங்கக் கூட்டம் நடைபெறுகிறது. வீரப்பர் தலைமை வகித்திருக்கிறார். தலைமையுரை ஆற்றப்படுகிறது.

வீரப்பர்: வாருங்காலப் பெருமக்களே! வாழ்த்துகின்றேன் உங்களை. உங்கள் லட்சியம் பெரிது. சிந்தனை ஒன்றுதான் மனிதனை மற்ற விலங்கினத்திலிருந்து உயர்த்திக் காட்டுவது. பகுத்தறிவை மனிதன் அதிகமாகப் பெற்றிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பகுத்தறிவு மற்ற உயிர்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது. உதாரணமாக நாயை எடுத்துக்கொள்ளுங்கள்: நீங்கள் அன்பு காட்டும்போது வாலைக் குழைக்கின்றது. அடிக்க எத்தனிக்கும் போது அஞ்சிப் பயந்து அங்கமெல்லாம் நெளிக்கின்றது. அன்னியர்களைக் கண்டால் ஆர்ப்பரித்து எச்சரிக்கின்றது. அது பகுத்துணர்வு அல்லவா? பசுவை எடுத்துக் கொள்ளுங்கள்: பக்கத்தில் கன்றைக் கட்டிவிட்டு செம்பை எடுத்தால்

மடியை எக்கி விடுகிறதே? ஏன்? அதன் கன்றுக் கில்லாமல் கறந்து விடுகிறார்கள் என்பதைப் பகுத் தறிந்துதானே. இவற்றிலிருந்து பகுத்தறிவு மனித னுக்கு மட்டும் சொந்தமல்ல என்பது விளங்குமென்று நம்புகிறேன். மீண்டும் கூறுகிறேன். மனிதனின் பெருமைக்குக் காரணம் சிந்தனை ஒன்றுதான். மனி தனைச் சிந்திக்கும் பிராணி என்றே சொல்லலாம். ஆதி மனிதர்கள் சிந்தித்துச் சிந்தித்துத்தான் இயற்கையை வென்றிருக்கிறார்கள்...இந்த அளவுக்கு நாகரிகம் பெற்றிருக்கிறோம்...ஆனால் தனக்குரிய அந்தச் சிறப் பியல்பைப் பயன் படுத்தாமல் செக்கு மாடுகளைப் போல் பழைய ஏற்பாடுகளைப் பற்றிக் கொண்டிருக் கிறது இன்றைய உலகம். இந்த நிலையில் சிந்தனையே லட்சியமாக சங்கம் அமைத்த உங்களைப் பாராட்டு கிறேன். நன்றி. அடுத்தபடியாக அழகப்பனைப் பேச அழைக்கின்றேன்.

[வீரப்பர் அமர்கிறார். அனைவரும் கையொலி செய்கின்றனர். அழகப்பன் கெம்பீரமாகத் தன் சொற்பொழிவை நிகழ்த்துகிறான்.]

அழகப்பன்: அநுபவத்தின் உருவமே! அறிவின் சிகரமே! வணக்கம். அருமைத் தோழர்களே! உங்களுக்கு என் நன்றி. நாம் ஏன் கூடியிருக்கிறோம்? கட்சி கட்டுவதற்காகவா, சதி சூழ்வதற்காகவா? அல்ல...அல்ல...நாம் சிந்தனையாளர்கள். நம்முடைய சிந்தனையைப் பெருக்கும் வழிகளை ஆராய, சிந்தனைக் குத் தடையானவற்றை உடைத்தெறிய.....

[இடையில் "கேளுங்கள்.....கேளுங் கள்" எனப் பல குரல்கள் எழுகின்றன.]

அழ: ...இன்று நம் நிலை என்ன? சிந்தித்துச் சிந்தித்துச் சுவை மிகுந்த சொல்லோவியங்களை, கருத்திற்கினிய

கற்பனைகளை, வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளை கவிதைகளாக, கட்டுரைகளாக, காவியங்களாக வடித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், அவைகள் ஏட்டில் இடம் பெற்று நாட்டில் உலவப்போகும் போது தடை செய்யப்படுகின்றன. ஏன்? நம் எண்ணங்களும், அதன் சின்னமான எழுத்துக்களும் செய்த தவறு என்ன? மயில் நடனம் கண்டு மந்தி மகிழ்வதில்லை; குயிலின் கானம் கேட்டுக் கோட்டான் ரசிப்பதில்லை. கழுதை நுகருவதில்லை, கற்பூர வாசனையை. பன்றி அருந்துவதில்லை பாலும் தேனும். இவை அதனதன் பண்புக்கேற்ற நிலை. இது போலவே சிந்திக்கத் தெரியாதவர் சிந்தனையின் விளைவை வெறுக்கிறார்கள். தங்கள் சர்வாதிகாரம் சரிந்து விடுமோ என்ற சஞ்சலத்தில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதனை எத்தனை காலத்திற்குச் சகித்துக் கொண்டிருக்க முடியும்? சிந்தித்து ஒரு வழி காணுங்கள். நம்மைச் சிறுமைப் படுத்தும் அவர்கள், அதிகார போதையில் ஆழ்ந்திருக்கிறார்கள். பாவம், போதை வெறி புத்தியை அவர் வசத்தில் வைத்திருக்காது. முன்னுக்குப் பின் முரணைகப் பேசச் செய்யும். சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பிருக்காது. ஒன்று பலவாகத் தெரியும். பல அவர்கள் கண்ணில் படவே மாட்டாது. அந்தப் பயங்கர நிலையில் உள்ள அவர்கள் புத்தியை எப்படித் தெளிய வைப்பது! இதுவே இன்று நாம் சிந்திக்க வேண்டிய விஷயம். இது பற்றி உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கிறேன்.....

[அழகப்பன் தன் சொற்பொழிவை நிறுத்தப் போகும் சமயம் தூரத்தில் மோட்டார் சைக்கிள் வரும் சத்தம் கேட்கிறது....குமார் மோட்டார் சைக்களில் மிக வேகமாக வந்து கொண்டிருக்

கின்றன். குமாரைக் கண்டதும் கூட்டத்தில் பரபரப்பு ஏற்படுகிறது. வீரப்பரும் வேறு சிலரும் பக்கத்திலிருந்த மலைகளுக்கிடையில் ஒளிந்து கொள்ளுகின்றனர். ரெங்கனும் மறைகின்றன். குமார் கோபமாக அங்கு நிற்கும் மக்கள் கூட்டத்தினரைப் பார்த்து அதிகாரக் குரலால் மிரட்டுகிறன்.]

குமார் : இடத்தைவிட்டு யாரும் அசையக் கூடாது. நகர்ந்தால் சுட்டுப் பொசுக்கி விடுவேன்.

ஆனந்தி : (துணிச்சலோடு) நீங்கள் சூளை வைக்க நாங்கள் ஒன்றும் மண்பாண்டங்கள் அல்ல.

கு : யாருடைய அநுமதியின் பேரில் கூடியிருக்கிறீர்கள்?

அழ : அவரவர் விருப்பத்தின் பேரில்.

கு : (திகைத்து) அழகப்பா ! நீயா ?

அழ : ஆம். நானேதான்.

கு : என்ன துணிபு.....சர்க்காரையும், சட்டத்தையும் மீறிச் சங்கம் நடத்த.

அழ : மக்களின் சொந்த விருப்பு, வெறுப்புகளைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு உரிமை இல்லையப்பா.

கு : (ஆத்திரம் பொங்கியவனாய்) அட சண்டாளா! நீயே என்னை எதிர்த்துப் பேசுகிறாயா ? நீ என் மகனா ?

ஆன : உங்கள் மகன் பேசவில்லை. எங்கள் சங்கத் தலைவர் பேசுகிறார்.

கு : வீணாக அரசாங்கத்தை எதிர்த்து அழிந்து போகாதீர்கள். மரியாதையாகக் கலைந்துவிடுங்கள்.

அழ : தங்கள் அறிவுரை எங்களுக்குத் தேவையில்லை.

கு : மீறினால் மகனென்றும் பார்க்கமாட்டேன்.

அழ : அது உங்கள் கடமை உணர்ச்சியைக் காட்டுகிறது. அதற்குக் குறைந்ததல்ல எங்கள் உரிமை உணர்ச்சி. தங்கள் ஊழியம் ஊதியத்திற்காக. எங்கள் முயற்சி லட்சியத்திற்காக. உங்கள் அடக்குமுறையால் எங்கள் ஆர்வத்தை நசுக்கமுடியாது. நம் ஆசைகள் வேறு...வேறு. அதில் அப்பன், மகனென்ற பாசம் குறுக்கிடுவதற்கில்லை. உங்கள் படையைக் கண்டு பணிந்துவிடமாட்டோம். 'மன்னவனும் நீயோ, வள நாடும் உன்னதோ, உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்' என்றுபுவி அரசரைப் பார்த்து மூறைத்த புலவன் பரம்பரைதான் நாங்கள். மக்களின் உரிமைக் குரல் கேளா மந்தச் செவியாக இருக்கும் ஆளவந்தாரை எச்சரிக்கிறோம். சிந்தனைப் படை திரண்டுவிட்டது. செல்லுங்கள் ஒதுங்கி.....

[அழகப்பன் பேசிய பேச்சு குமாரை ஆத்திரங்கொள்ளச் செய்கிறது. குமார் அழகப்பனை அறைகிறான். அழகப்பன் கீழே சாய்கிறான். மறைந்திருந்த சிலர் ஓடி வந்து குமாரைப் பிடிக்க முயல்கின்றனர். குமார் தன் இடுப்புப்பட்டியில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, சுடத்தனிக்கிறான். அதுசமயம் மறைந்திருந்த ரெங்கன், குமாரின் பின்புறமாக வந்து கைத்துப்பாக்கியைத் தட்டிவிடுகிறான். உடனே மற்றவர்கள் குமாரைப் பிடித்துவிடுகின்றனர். ரெங்கன் கோபங்

கொண்டு தன் கத்தியையெடுத்து குமாரைக் குத்தப்போகிறான். அதுவரை மறைந் திருந்த வீரப்பர், ரெங்கன் குமாரைக் குத்தக் கத்தியை ஓங்கினதும் திடுக்கிட் டுப் பெருங் குரலால்.....]

வீரப்பன்: ரங்கா, நில். அந்தப் பாதகனை என் கையால் பழி வாங்கவேண்டும்.....கொடு கத்தியை. என் ஆத் திரம் தீர அணுவணுவாய்ச் சித்திரவதை செய் கிறேன்.

(என்று ஆத்திரங் கொண்டவரைப் போல் பேசி கத்தியை ரெங்கனிடமிருந்து பிடுங்கிக்கொள்கிறார். அதுசமயம் தூரத் தில் போலீஸ் வரும் ஆரவாரம் கேட் கவே, வீரப்பர் ரெங்கனையும் மற்றவர் களையும் பார்த்து,]

வீர: நீங்களெல்லாம் தப்பிச் செல்லுங்கள். நான் வேலையை முடித்துவிட்டு வருகிறேன்.....ஊம்.....

[ரெங்கன், ஆனந்தி ஆகியோர் உட்பட அனைவரும் போய்விடுகின்றனர். அழகப் பன் கீழே மயங்கிக் கிடக்கிறான். குமார் தலை குனிந்த வண்ணம் நிற்கிறான்.]

வீர: (ஏளனமாகப் பார்த்து) ஆத்திரமாக, குமார்! எங்கே உன் வீரம்? எங்கே உன் தீரம்? கடமை யாம் கடமை! பெற்ற மகனைத் தாக்கும் பேயுள்ளம் படைத்ததேன்? நீ ஒரு சர்க்காரின் கைப்பொம்மை. சட்டமென்ற நெருப்பால் தருமத்தையும், தயாள த்தையும் சுட்டெரிக்கும் நெருப்பு நீ!

கு: வீரப்பா! நீயா? (திகைப்பு.)

வீர : ஆம் ! நீ செத்துவிட்டதாக முடிவு கட்டிய சிம்மம். வெறி நாய்போல வேட்டை ஆடினையே அதே வீரப் பன்தான். இன்னும் இருக்கின்றேன். பார் இப்பொ ழுது நான் உன்னை நிர்மூலமாக்கப்போகிறேன். உன் உயிர் இந்தக் கத்தி முனையில் இருக்கிறது. (சிறிது யோசித்து) உன்னை உயிரோடு அனுப்பு கிறேன். போ.....

[வீரப்பனை ஏறிட்டுப் பார்க்கவும் தைரியமில்லாமல், தலைகுனிந்து தள்ளா டியபடி அங்கிருந்து செல்கிறான் குமார். போலீசார் வருவதைக் கண்ட வீரப்பர், கீழே விழுந்து கிடக்கும் அழகப்பனைத் தூக்கித் தோள்மேற் போட்டுக்கொண்டு மலைகளுக்கிடையே மறைந்து செல் கிறார்.]

காட்சி 51.

இடம் : மலைச்சரிவுப்பாதை.

மாந்தர் : வீரப்பர், அழகப்பன்.

நிலைமை : மலைச்சரிவில் பயங்கரப் பாதைகளின் வழி யாக, பதுங்கிப் பதுங்கிப் போலீசார் பிடிக்கு அகப்படா மல் வீரப்பன், அழகப்பனைத் தூக்கிக்கொண்டு தப்பிச் செல்லுகிறான். போலீஸ் அவனைப் பின்தொடர்ந்து வந்து பிடிக்கமுடியாமல் ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்லு கிறது.

காட்சி 52.

இடம்: குமாரின் வீடு.

மாந்தர்: வீரப்பர், அழகப்பன், முல்லை, குமார்.

நிலைமை: மயக்கமுற்றுள்ள அழகப்பனை, வீரப்பர் கொண்டுவந்து படுக்க வைக்கிறார். அதுபோது அங்கு வந்த முல்லை, அழகப்பனின் அலங்கோல நிலையைக் கண்டு திடுக்குற்றுக் கதறுகிறாள்.

முல்லை: ஆ! அழகப்பா.....இது என்ன கோரம்? ஐயோ! மகனே, எந்தப் பாவியிடம் சிக்கினாய்..... இரத்த விளாறாய் மாறிவிட்டாய்.....அவன் கை முறிந்து போக...என் செல்ல மகனை இப்படிச் சித்திர வதை செய்துவிட்டானே! பாதகன் அவன் வாழ்வானா? ஐயோ, ஏன் இந்தக் கொடுமை? இது என்ன அக்கிரமம். எங்கே நடந்தது? உடம்பெல்லாம் கன்னி யிருக்கியதே. வளரும் பருவத்தில் இந்த வாதனையா?.....

வீரப்பர்: அம்மா! ஏதோ எதிர்பாராத கலகம். இப்படி நடந்துவிட்டது.

முல்: (வீரப்பரைப் பார்த்து) உங்களுக்குக் கோடி புண்ணியம். என் பிள்ளையைக் காப்பாற்றிய தெய்வம் நீங்கள்தான்.

அழகப்பன்: (மெதுவாக மயக்கந் தெளிந்து) அம்மா..... தண்ணீர்.....!

[முல்லை ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறாள். அழகப்பன் அதனைக் குடித்து விட்டு மிரள மிரள

விழிக்கிறான். வீரப்பர், அவனை அன்பொழுகப் பார்த்து]

வீர: தம்பி! மயக்கம் தெளிந்து விட்டதா?

அழ: (திகைத்து) ஐயா! தாங்களா.....?

முல்: அழகப்பா! ஐயாதான் உன்னைத் தூக்கி வந்தாரடா...

அழ: ஆனந்திக்கு ஒன்றும்...

வீர: ஆபத்தில்லை. அவள் பத்திரமாக வீடு சேர்ந்து விட்டாள்...கொஞ்சம் அதிகமாகப் பேசாமலிரு.

முல்: ஐயா! நான் என்ன பாவம் செய்தேன் இந்தக் கண்ருவிக்கு. ஈ உட்கார்ந்தால் எடை குறையுமென்று வளர்த்தேனே...ஏன் இந்த அவதி?

வீர: அம்மா, பயப்படாதீர்கள். பையனுக்கு ஒன்றுமில்லை...(அழகப்பனிடம்) தம்பி! நான் வரட்டுமா?

அழ: (எழுந்து நின்று) ரொம்பவும் மன்னித்துக் கொள்ள வேண்டும். தங்களையும் துன்பத்திற்கு ஆளாக்கி விட்டோம்.

வீர: துன்பமல்ல தம்பி, உரிமைக் கிளர்ச்சியில் எனக்கும் பங்கு கிடைத்ததே என்று இன்புறுகிறேன்.

அழ: ஆனந்திக்குச் சொல்லுங்கள்.....(முல்லையிடம்) அம்மா, இந்தத் தாத்தாவின் பேத்திதான் ஆனந்தி.

முல்: அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி, எங்கள் நன்றியை உங்களுக்கு எப்படிச் செலுத்தப்போகிறோம்...

வீர : (இளநகையுடன்) இருக்கட்டும். தம்பி உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வருகிறேன்.

[அழகப்பனும் முல்லையும் நன்றியுடன் கைகூப்பி வணக்கம் செய்கின்றனர். வீரப்பர் வெளியேறுகிறார். அப்போது அங்கு வந்த குமார் வீரப்பனைக் கண்டு மருள்கிறான்.]

குமார் : வீரப்பா! நீயா...?

[என, வீரப்பரும் குமாரைப் பார்த்துத் திகைத்து நிற்கிறார். "வீரப்பா" என்ற சொல்லைக் கேட்டதும் முல்லை திகைப்பும் வியப்பும் கொண்டவளாய்...]

முல் : யாரது? வீரப்பனா?...

கு : ஆம். தப்பியோடிய ரௌடிப் பயல்...

முல் : ஆ! என் அண்ணா! அண்ணா!! தாங்களா? இந்தப் பாவிதான் உங்கள் தங்கை...தெரிகிறதா, அண்ணா!

[எனக் கதற, வீரப்பர் முல்லையை ஏறிட்டுப் பார்த்து]

வீர : என் முல்லையா? தங்கையே...!

[வீரப்பர் முல்லையைத் தழுவிக் கண்ணீர் வடிக்கிறார். முல்லை அழுகிறாள். எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைக் கண்ட குமாரும் அழகப்பனும் திகைத்துப் போய் நிற்கின்றனர்.]

கு : வீரப்பன் என் மைத்துனன்...வீரப்பன் என் மைத்துனன்.....

[என, மெதுவாக முணு முணுக்கிறான் குமார்.]

முல் : தங்கள் முகத்தைப் பார்த்துப் பல வருஷங்களாகி விட்டதண்ணு...

[எனத் தேம்புகிறாள் முல்லை. வீரப்பர் அவளைத் தேற்றியபடி]

வீர : வருந்தாதேயம்மா!...என் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த முள் அகன்று விட்டது. உன்னைப் பற்றி என்னென்னவோ கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை...

முல் : துன்பக் கடலில் தத்தளித்தபோது தமிழானந்தர் காப்பாற்றினர். அவரளித்த வாழ்வுதான் இதுவும்...

வீர : ஆனந்தர்!...ஆனந்தர்...! அந்தப் புண்ணியாத்மாவிற்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். எனக்கும் அவர் புது வாழ்வு தந்தார். ஆனால் பொல்லாத சட்டம் அனுமதிக்கவில்லை. பழைய வீரப்பனாக வாழ்கிறேன்.

முல் : அண்ணு! துன்பப்படவே பிறந்தவர்களா? உங்களுக்கு மீட்சி இல்லையா ஐயோ!...

வீர : கலங்காதே, முல்லை. திருந்தாத சட்டம் ஆள்வதற்குச் சான்று நான்தான்.

[குமாரின் முகத்தில் பலவித மாறுதல்கள். திடீரென்று வீரப்பரைப் பார்த்து அதிகாரக் குரலில்]

கு : நட.....

[அதட்டுகிறான். அழகப்பனும் முல்லையும் பதைக்கின்றனர். அழகப்பன் குமாரைப் பார்த்துக் கெஞ்சிய குரலில்]

அழ : அப்பா ! அப்பா !! வேண்டாம், வேண்டாம்..... அவரை விட்டு விடுங்கள்.

(முல்லை குமாரைப் பார்த்து அழுகையும் ஆத்திரமும் கலந்த குரலில்.....)

முல் : ஐயோ, உங்கள் மனமென்ன கல்லா ? நம் மகனை மீட்டுத் தந்த மகானல்லவா. அந்த நன்றியை மறக்காதீர்கள்..... வேண்டாம் என் அண்ணனைக் காப்பாற்றுங்கள்..... காப்பாற்றுங்கள்.....

வீர : முல்லை. பதறுதே.....

[எனக் கூறிவிட்டு குமாருடன் போகிறார். அதுபோது முல்லை துக்கந் தாளாமல்.....]

முல் : அண்ணா ! அண்ணா !! ஐயோ, அண்ணா .....

(என அலறிக்கொண்டு கீழே விழுகிறாள் ; இறக்கிறாள். குமார் அதிர்ச்சியுற்று நிற்கிறான். வீரப்பர் அருகில் வந்து முல்லையின் முகத்தில் தன் கையை வைத்துப் பார்க்கிறார். கண்ணீர் விட்டபடி எழுகின்றார். சிறிது தூரம் நடந்தபின் வேதனையுடன் திரும்பிப் பார்க்கிறார். குமார் அவரை நடத்

திச் செல்கிறான். அழுப்பன், "அம்மா, அம்மா" என கதறுகிறான். அப் பொழுது ஆனந்தியும் அங்கு வந்து சேருகிறாள். முல்லை இறந்திருக்கக் கண்டு)

ஆனந்தி: ஆ! மாண்டுவிட்டார்களா? (எனப் பதறு கிறாள்.)

காட்சி 53.

இடம்: தனி இடம்.
மாந்தர்: குமார்.

நிலைமை: குமார் ஆழ்ந்த சிந்தனையுடன் வந்துகொண் டிருக்கிறான். அவனது உள்ளம் குழம்பியிருக்கிறது. பய மும் சூழ்ந்திருக்கிறது. திடீரென்று அவனது உள்ளத் திரையில் முல்லையின் உருவம் தோன்றுகிறது—குரல் ஒலிக்கிறது.

முல்லையின் குரல்: ஏனிந்தக் கொடுமை, என் அண்ணனை உயிரோடு கொன்று விட்டாயே. இரக்கமில்லையா? பாசம், பச்சாதாபம், தயை, தாட்சணியம் அற்ற சண்டாளா! உன்னோடு வாழப் பயந்துதான் மாண் டேன்.

(முல்லையின் உருவமும், குரலும் மறை கிறது. குமார் திரும்புகிறான். அழகப் பனின் உருவம் தோன்றுகிறது. குரல் ஒலிக்கிறது.)

அழகப்பன் குரல்: அப்பா, உன்னைச் சர்க்கார் பாராட்டு கிறது. ஆனால், சமூகம் உன்னை மன்னிக்காது.

உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆனால், ஊரிலே மதிப்பிருக்காது. மரணத்தின் பிடியிலிருந்து விடுவித்து அனுப்பினரே. அதற்கு இதுதானா நன்றி? மகத்தான தியாகங்களைச் செய்த மகானை ஏன் பழி வாங்கினீர்? உமது மகனென்று நான் எவ்வாறு சொல்லிக் கொள்வேன்?

(அழகப்பனின் உருவமும் குரலும் மறைகிறது. குமார் முகத்தில் பீதி தோன்ற வேறு பக்கம் திரும்புகிறான். ஆனந்தியின் உருவம் தோன்றுகிறது. குரல் ஒலிக்கிறது.)

ஆனந்தி குரல்: இன்ஸ்பெக்டர்! ஏழைகளின் இதயத் தலே நெருப்பைக் கொட்டி விட்டீர்.....! அனுதைகளின் வயிறு எரிய எரிய அன்பே உருவான அறிஞனை அழித்து விட்டீர். நீரும் மனிதனா? உன்.....மனைவியின் மரணத்திற்குக் காரணம் யார்? உனக்கு மனித இதயமில்லையா? எந்த முகத்தோடு இனி நீ மக்களிடைத் தலைகாட்டப் போகிறாய்?

[ஆனந்தியின் உருவமும் குரலும் மறைகிறது. குமார் கலவரத்தோடு திரும்புகிறான். வீரப்பனின் உருவம் தோன்றுகிறது. குரல் ஒலிக்கிறது.]

வீரப்பர் குரல்: குமார்! உன் உறுதியை மெச்சுகிறேன். சாக வேண்டிய நான் எங்கிருந்தா லென்ன? நீ சஞ்சலப்படாதே. தமிழன் கடமை தவற மாட்டான் என்பதற்குச் சான்று நீதான்.

[வீரப்பரின் உருவமும் குரலும் மறைகிறது..... குமார் தான் இதுவரை

வீரப்பனுக்குச் செய்துவந்த தவறுகளை நினைந்து வருந்துதல்.]

குமார்: கடமை! நல்ல கடமை!! (பெருமூச்சு) அன்பின் உருவமே! கருணையின் இருப்பிடமே! கண்ணியத்தின் பிரதிநிதியே! என் கடமை யனைத்தும் தங்களுக்குக் கொடுமையாக முடிந்தது. என்னை மன்னித்து விடுங்கள்! என்னை மன்னித்து விடுங்கள்!!

தங்களிடம் எனக்குச் சொந்தப் பகையில்லை. நான் சட்டத்திற்கு ஊழியன். அதன் நடவடிக்கைகள் தங்கள் விஷயத்தில்... நியாயத்தையும் மீறிவிட்டன.. (மிக வருந்தி) ஐயோ.....! கடமையும் கருணையும் இட்ட போட்டியில் நான் சோதனைக்காளானேன்... மகனின் மண்டை நொறுங்கிற்று. மனைவி மாண்டாள். அப்பொழுதும் நான் பாசத்திற்கு இடங் கொடுக்கவில்லை. அந்தப் பாழும் சட்டத்தைத்தான் நிலை நிறுத்தினேன்..... நான் கருணையை நினைத்திருந்தால் என் கடமை செத்திருக்கும். கடமையைச் செலுத்தினேன். இதோ, கருணைச் செல்வம் கைதியாகிவிட்டது! கைதியாகி விட்டது!! (கண்ணீர் சிந்தல்.)

இனி அந்த உண்மை ஒளி உலகிற்குக் கிடைக்காது. ஒரு உத்தமன் வாழ்வு கொடுஞ் சிறைக்குள் ஒடுங்கி விட்டது. என்னால் அவருக்கு இந்தக் கதியென்று உலகம் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது..... உள்ளமும் சுடுகிறது. அந்தோ.....! என் அமைதி அழிந்தது. அறிவும் கலங்கி விட்டது. என் செய்வேன்...!

இனியும் நான் வாழ்வதா.....? சாகத்தான் வேண்டும். சாகின்றேன். கடைசி வரையில் கடமைக்காக வாழ்ந்தேன் என்ற களிப்புடன் சாகின்றேன்.....

[என்று புலம்பிய வண்ணம் குமார் தன் கைத் துப்பாக்கியை எடுத்துத் தனது மார்பின்மீது சுட்டுக் கீழே விழுந்து மடிகின்றான்.]

காட்சி 54.

இடம் : சிறைச்சாலை.

மாந்தர் : வீரப்பர்.

நிலைமை : வீரப்பர் கைதி உடைகளணிந்து சிறைச்சாலைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு சோகமாக நிற்கிறார். சோக இசை ஒலிக்கிறது.

பாடல்

இருளானதே இவ்வுலக வாழ்விலே
இன்பமிலாது (இரு)

சோர்ந்த உள்ளம் தீய்ந்தபின்னும்
பாரில் வாழுவோ
பாரில் வாழுவோ. (இரு)

(முற்றும்)


தீராவிடன் பதிப்பகம்